# நிதித் துறை

# உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

# தொகுப்பு தணிக்கை அறிக்கை
# 2020-2021

தமிழ்நாடு அரசு

# நிதித் துறை

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

## தொகுப்பு தணிக்கை அறிக்கை

## 2020–2021

119-3—1

# பொருளடக்கம்


| | பத்தி எண் | பக்கம் |
|---|---|---|
| முன்னுரை | | vii |
| மீள்பார்வை | | xi |
| **பகுதி – அ – ஆண்டுக் கணக்குகள் (ம) பொதுவான விவரங்கள்** | | |
| **அத்தியாயம் – I – செயல் தொகுப்பு – நிதிநிலை குறித்த ஆய்வு** | | |
| பெருநகர சென்னை மாநகராட்சி | 1.1 | 1–2 |
| இதர மாநகராட்சிகள் | 1.2 | 2–3 |
| நகராட்சிகள் | 1.3 | 3–4 |
| பேரூராட்சிகள் | 1.4 | 4 |
| மாவட்ட ஊராட்சிகள் | 1.5 | 5 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 1.6 | 5 |
| கிராம ஊராட்சிகள் | 1.7 | 5–6 |
| பல்கலைக் கழகங்கள் | 1.8 | 6–7 |
| பொது நூலகங்கள் | 1.9 | 7 |
| வேளாண் விற்பனைக் குழுக்கள் | 1.10 | 7–8 |
| உள்ளூர் திட்டக் குழுமங்கள் | 1.11 | 8 |
| **அத்தியாயம் – II பல்வேறு துணைத் தலைப்புகளின் கீழ் வருவாய் மற்றும் செலவினம் மீதான ஒப்பீட்டு பகுப்பாய்வு** | | |
| பெருநகர சென்னை மாநகராட்சி | 2.1 | 11–17 |
| இதர மாநகராட்சிகள் | 2.2 | 17–23 |
| நகராட்சிகள் | 2.3 | 24–29 |
| பேரூராட்சிகள் | 2.4 | 29–35 |
| மாவட்ட ஊராட்சிகள் | 2.5 | 35–36 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 2.6 | 37–40 |
| கிராம ஊராட்சிகள் | 2.7 | 41 |
| பல்கலைக் கழகங்கள் | 2.8 | 41 |
| பொது நூலகங்கள் | 2.9 | 41 |
| வேளாண் விற்பனைக் குழுக்கள் | 2.10 | 41 |
| உள்ளூர் திட்டக் குழுமங்கள் | 2.11 | 42 |
| தணிக்கைச் சான்று | 2.12 | 42 |




119-3—1a

| | பத்தி எண் | பக்கம் |
|---|---|---|
| அத்தியாயம் – III தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை ஓர் அறிமுகம், தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம், 2014, தணிக்கை நடைமுறை, தணிக்கை நிறுவனங்கள் மற்றும் முக்கிய தணிக்கைத் தடைகளின் சுருக்கம் | | |
| தோற்றம் | 3.1 | 43 |
| நிர்வாக அமைப்பு | 3.2 | 44 |
| உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் – 2014 | 3.3 | 44 |
| தணிக்கை நடைமுறை | 3.4 | 45 |
| தணிக்கை நிறுவனங்கள் | 3.5 | 46 |
| தணிக்கைத் தடைகளின் சுருக்கம் | 3.6 | 48–53 |
| பகுதி – ஆ – முக்கிய தணிக்கைத் தடைகளின் சுருக்கம் | | |
| அத்தியாயம் – IV நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஓர் அறிமுகம் மற்றும் முக்கிய தணிக்கைத் தடைகள் | | |
| பெருநகர சென்னை மாநகராட்சி | 4.1 | 57 |
| தணிக்கையில் கண்டறியப்பட்ட சில முக்கிய குறைபாடுகள் | | |
| **வருவாய் இழப்பு** | | |
| மழைநீர் வடிகால்வாய் கட்டணம் வசூலிக்கப்படாதது ரூ.5.87 இலட்சம் | 4.1.4.1 | 58–60 |
| பல்வேறு கட்டணங்கள் குறைவாக வசூல் செய்யப்பட்டது ரூ.3.59 இலட்சம் | 4.1.4.2 | 61–63 |
| உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் வசூலிக்கப்படாது ரூ.7.40 இலட்சம் | 4.1.4.3 | 63–64 |
| **தகுதியற்ற செலவினம்** | | |
| பணிகள் மேற்கொண்டதில் தகுதியற்ற செலவினம் மேற்கொண்டது இழப்பு ரூ.3.44 இலட்சம் | 4.1.4.4 | 64–65 |
| ஓய்வூதியதாரர்கள் இறந்த பின்பும் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் தொடர்ந்து வழங்கியது ரூ.5.42 இலட்சம் | 4.1.4.5 | 65 |
| **செலவிடப்படாத அரசு மான்யம் மற்றும் வட்டி தொகை அரசுக்கணக்கில் செலுத்தப்படாதது** | | |
| அரசு மான்யத்தில் ஈட்டப்பட்ட வட்டி தொகை அரசுகணக்கில் செலுத்தப்படாதது ரூ.30.20 இலட்சம் | 4.1.4.6 | 66–67 |
| செலவிடப்படாத அரசு மான்யம் அரசுக்கணக்கில் திரும்ப செலுத்தப்படாதது ரூ.1083.32 இலட்சம் | 4.1.4.7 | 68–69 |

| | பத்தி எண் | பக்கம் |
|---|---|---|
| இதர மாநகராட்சிகள் | 4.2 | 70 |
| **வருவாய் இழப்பு** | | |
| குடிநீர் கட்டணம் குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டது மற்றும் குறைவாக வசூலிக்கப்பட்டது தொடர் இழப்பு ரூ.800.32 இலட்சம் | 4.2.3.1 | 71–72 |
| ஆண்டு குத்தகை மற்றும் வாடகைத் தொகையில் அரசாணைக்கு முரணாக கூடுதலாக தள்ளுபடி வழங்கியது ரூ.28.35 இலட்சம் | 4.2.3.2 | 73 |
| குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத்தொகை குறைவாக வசூலித்தது ரூ.55.99 இலட்சம் | 4.2.3.3 | 74–75 |
| சொத்துவரி குறைவாக நிர்ணயம் செய்தது தொடர் இழப்பு ரூ.4.06 இலட்சம் | 4.2.3.4 | 76 |
| வணிகக்கட்டிடங்கள் சொத்துவரி குறைவாக நிர்ணயம் செய்தது தொடர் இழப்பு ரூ.54.25 இலட்சம் | 4.2.3.5 | 76–77 |
| **மிகை செலவினம் மேற்கொண்டது** | | |
| ஒப்பந்ததாரருக்கு அட்டவணை விலை விகிதத்தைவிட கூடுதல் தொகை வழங்கியது ரூ.2.37 இலட்சம். | 4.2.3.6 | 77–78 |
| குறிப்பிட்ட காலத்திற்கு பின்னரும் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் குறைக்கப்படாதது ரூ.6.98 இலட்சம் | 4.2.3.7 | 79 |
| **சீர்மிகு நகர திட்டம் செயல்பாடு குறித்த தணிக்கை மீதான ஒரு குறிப்பு** | 4.2.4 | 80–81 |
| நகராட்சிகள் | 4.3 | 82–85 |
| **திறந்தவெளி ஒதுக்கீட்டு இடம் நகராட்சிக்கு மாற்றம் செய்யப்படாதது** | | |
| திறந்தவெளி ஒதுக்கீடு நிலம் நகராட்சி பெயருக்கு மாற்றம் செய்யப்படாதது – மதிப்பு ரூ.28.28 இலட்சம். | 4.3.14.1 | 85–86 |
| பேரூராட்சிகள் | 4.4 | 87–88 |
| **வருவாய் இழப்பு** | | |
| தனியார் நிறுவனம் மூலம் வசூலிக்கப்பட்ட வரியினங்கள் பேரூராட்சி வங்கிக் கணக்கிற்கு மாற்றம் செய்வதில் தேவையற்ற காலதாமதம் – ரூ.474.18 இலட்சம் | 4.4.6.1 | 89 |
| காலியிட மனை வரி குறைவாக வசூலித்தது – வருவாய் இழப்பு – ரூ.369.66 இலட்சம் | 4.4.6.2 | 90–93 |

| | பத்தி எண் | பக்கம் |
|---|---|---|
| அத்தியாயம் – V பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் அறிமுகம் மற்றும் முக்கிய தணிக்கைத் தடைகள் | | |
| மாவட்ட ஊராட்சிகள் | 5.1 | 94–97 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 5.2 | 98 |
| **வங்கி கணக்கில் தன்னிச்சையாக தொகை கழிக்கப்பட்டது** | | |
| வங்கியினால் தொகை தன்னிச்சையாக கழிக்கப்பட்டதால் வங்கி இறுதி இருப்பில் குறைவு ரூ.12.55 இலட்சங்கள். | 5.2.5.1 | 99–100 |
| **காலங்கடந்த வைப்புத் தொகைகள் திரும்ப வழங்கப்பட்டதில் மற்றும் இதர பொது நிலுவைத்தொகை பெறப்பட்டதில் மோசடி.** | | |
| சம்மந்தமற்ற நபர்களுக்கு காலங்கடந்த வைப்புத் தொகைகள் திரும்ப வழங்கப்பட்டது மற்றும் இதர பொது நிலுவைத்தொகை வழங்கப்பட்டதில் மோசடி – ரூ.51.78 இலட்சங்கள். | 5.2.5.2 | 100–103 |
| கிராம ஊராட்சிகள் | 5.3 | 104–106 |
| **வருவாய் இழப்பு** | | |
| வங்கி கணக்கில் குறைவாக செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்படாத வரியினங்கள் ரூ.21.97 இலட்சங்கள். | 5.3.8.1 | 107–108 |
| அத்தியாயம் – VI இதர நிறுவனங்கள் அறிமுகம் மற்றும் முக்கிய தணிக்கைத் தடைகள் | | |
| பல்கலைக் கழகங்கள் | 6.1 | 109–110 |
| **வருவாய் இழப்பு** | | |
| குறிப்பிட்ட கட்டணங்கள் மீது உரிய சரக்கு மற்றும் சேவை வரி (GST) வசூலிக்கப்படாதது ரூ.578.91 இலட்சம். | 6.1.7.1 | 111–112 |
| **முறையற்ற செலவினம்** | | |
| அரசு அனுமதியின்றியும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளி விதிகள் பின்பற்றப்படாமலும் பெரும் தொகைக்கு கணினிகள் கொள்முதல் செய்தது ரூ.1831.50 இலட்சம். | 6.1.7.2 | 113–115 |
| **முதலீடுகள் பயன்படுத்தப்படாமல் உள்ளது** | | |
| பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள் மற்றும் மையங்களின் கணக்குகளில் அதிக அளவிலான முதலீடுகள் மற்றும் வங்கி இருப்புகள் பயன்படுத்தப்படாமல் உள்ளது ரூ.11075.70 இலட்சம் | 6.1.7.3 | 116 |

| | பத்தி எண் | பக்கம் |
|---|---|---|
| **முறையற்ற பணி நியமனங்கள்** | | |
| அரசாணைக்கு முரணாக பணியிடங்கள் வரன்முறைப்படுத்தப்பட்டது | 6.1.7.4 | 117 |
| அரசாணைக்கு முரணாக பங்களிப்பு ஓய்வூதிய திட்ட பணியாளர்களுக்கு பொதுவருங்கால வைப்பு நிதி அனுமதித்து வழங்கியது ரூ.47.04 இலட்சம் | 6.1.7.5 | 118 |
| பல்கலைக்கழக மானியக்குழு விதிகள் மற்றும் அரசாணைக்கு முரணாக முறையற்ற பணிநியமனங்கள் செய்தது | 6.1.7.6 | 119 |
| **உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள்** | **6.2** | **120–121** |
| **ஊதியம் மற்றும் படிகள் அரசு கணக்கில் மீள செலுத்தப்படாதது** | | |
| அரசு கருவூலத்திலிருந்து பெற்று வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் படிகள் அரசு கணக்கில் மீள செலுத்தப்படாதது ரூ.6884.01 இலட்சம் | 6.2.6.1 | 121–122 |
| **வேளாண் விற்பனைக் குழுக்கள்** | **6.3** | **123–124** |
| **ஊதியம் மற்றும் படிகள் அரசு கணக்கில் மீள செலுத்தப்படாதது** | | |
| அரசு கருவூலத்திலிருந்து பெற்று வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் படிகள் அரசு கணக்கில் மீள செலுத்தப்படாதது ரூ.2314.03 இலட்சம் | 6.3.5.1 | 124–125 |
| **தவணை முறையில் விற்பனை செய்யப்பட்ட கடைகளுக்கான நிலுவை விற்பனைத் தொகை வசூலிக்கப்படாதது** | | |
| தவணை முறையில் விற்பனை செய்யப்பட்ட கடைகள் – நிலுவை விற்பனைத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்களிடமிருந்து வசூலிக்கப்படாதது ரூ.11.07 இலட்சம் | 6.3.5.2 | 125–127 |
| **உள்ளூர் திட்டக் குழுமங்கள்** | **6.4** | **128** |
| **ஊதியம் மற்றும் படிகள் அரசு கணக்கில் மீள செலுத்தப்படாதது** | | |
| அரசு கருவூலத்திலிருந்து பெற்று வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் படிகள் அரசு கணக்கில் மீள செலுத்தப்படாதது ரூ.777.02 இலட்சம் | 6.4.5.1 | 129 |
| **தணிக்கை விளைவு** | | **130** |
| **இணைப்புகளின் பட்டியல்** | | **131** |
| **அட்டவணைகளின் பட்டியல்** | | **132–133** |
| **வரைபடங்களின் பட்டியல்** | | **134–135** |

# முன்னுரை

மார்ச் 2021 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான இத்தொகுப்பு தணிக்கை அறிக்கையானது தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம், 2014 இன் பிரிவு 20 மற்றும் விதிகளின் கீழ் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முன்வைக்கப்படுகிறது.

இந்த அறிக்கையில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் இதர நிறுவனங்களின் ஆண்டுக் கணக்குகள் ஆய்வு மற்றும் தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு கொண்டுவர தகுதியான முக்கிய தணிக்கைத் தடைகளை உள்ளடக்கியது.

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தணிக்கை தரநிலைகள் மற்றும் பொது நிறுவனங்களின் தணிக்கையில் பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகளுடன் உள்ளாட்சி நிதி தணிக்கை நடைமுறை நூலில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதலின்படி தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தலைமை தணிக்கை இயக்குநர் / இயக்குநர்
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

# மீள்பார்வை

# மீள்பார்வை

இந்த அறிக்கையில் ஆறு அத்தியாயங்கள் உள்ளன. முதல் மற்றும் இரண்டாவது அத்தியாயங்களில் முறையே செயல் தொகுப்பு மற்றும் ஆண்டுக் கணக்குகளின் ஆய்வுகளை உள்ளடக்கியது. மூன்றாவது அத்தியாயத்தில் தணிக்கை நடைமுறை மற்றும் தணிக்கைக்குட்பட்ட நிறுவனங்கள் பற்றிய விவரங்கள் உள்ளன. நான்காவது, ஐந்தாவது மற்றும் ஆறாவது அத்தியாயங்களில் முறையே நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் இதர நிறுவனங்களில் கண்டறியப்பட்ட முக்கிய தணிக்கை தடைகள் உள்ளன.

I. செயல் தொகுப்பு:

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள்), ஊரக உள்ளாட்சி அமைப்புகள் (மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள்) மற்றும் இதர நிறுவனங்கள் (பல்கலைக்கழகங்கள், உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள், வேளாண் விற்பனைக் குழுக்கள் மற்றும் உள்ளூர் திட்டக் குழுமங்கள்) ஆகியவற்றின் நிதிநிலை குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

II. ஆண்டுக் கணக்குகளின் மீதான ஆய்வு:

உள்ளாட்சி அமைப்புகளின் வருவாய் மற்றும் செலவினங்கள் குறித்து பல்வேறு துணைத் தலைப்புகளின் கீழ் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

III. தணிக்கை நடைமுறை மற்றும் தணிக்கைக்குட்பட்ட நிறுவனங்கள்:

தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 ஓர் அறிமுகம், தணிக்கை நடைமுறை, தணிக்கைக்குட்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் முக்கிய தணிக்கை தடைகளின் சுருக்கம் ஆகியவை இந்த அத்தியாயத்தில் அளிக்கப்பட்டுள்ளன.

IV. நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள்:

மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டில், பெருநகர சென்னை மாநகராட்சி, 14 இதர மாநகராட்சிகள், 121 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் இருந்து மொத்தம் 17 முக்கிய தணிக்கைத் தடைகள் இந்த அத்தியாயத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன.

V. ஊரக உள்ளாட்சி அமைப்புகள்:

மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டில், 32 மாவட்ட ஊராட்சிகள், 388 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 22% கிராம ஊராட்சிகளில் இருந்து 3 முக்கிய தணிக்கைத் தடைகள் இந்த அத்தியாயத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன.

VI. பல்கலைக் கழகங்கள் மற்றும் இதர நிறுவனங்கள்:

மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டில், 23 பல்கலைக்கழகங்கள், 32 உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள், 32 வேளாண் விற்பனைக் குழுக்கள், 29 உள்ளூர் திட்டக் குழுக்கள் மற்றும் 8 பிற நிறுவனங்களில் இருந்து 10 முக்கிய தணிக்கைத் தடைகள் இந்த அத்தியாயத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன.

# பகுதி – அ

# ஆண்டுக்கணக்குகள் மற்றும் பொது விவரங்கள்

## அத்தியாயம் – I

## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் இதர நிறுவனங்களின் நிதிநிலை குறித்த ஆய்வு

## செயல் தொகுப்பு
## நிதிநிலை குறித்த ஆய்வு

### நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள்

**மாநகராட்சிகள்:**

**1.1) பெருநகர சென்னை மாநகராட்சி:**

1.1.1. மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியில் சொத்துவரி மூலம் கிடைத்த வருவாய் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.60841.14 இலட்சங்கள் (103200.49 – 42359.35) குறைந்தும், இதர வரியினங்கள் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.45142.42 இலட்சங்கள் (41184.35 – 86326.77) உயர்ந்தும், அரசு மானியம் பெறப்பட்டதில் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.79718.17 இலட்சங்கள் (20734.92 – 100453.09) உயர்ந்தும் உள்ளது மற்றும் இதர வரவினங்கள் கடந்த ஆண்டைக் கட்டிலும் ரூ.3078.13 இலட்சங்கள் (103718.29 – 100640.16) குறைந்தும் உள்ளது.

1.1.2. மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டில் பணியமைப்பு செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.4678.12 இலட்சங்கள் (140605.67 – 135927.55) குறைந்தும், இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.46873.21 இலட்சங்கள் (65970.43 – 112843.64) உயர்ந்தும், நிர்வாக செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.1498.95 இலட்சங்கள் (7688.22 – 9187.17) உயர்ந்தும் உள்ளது மற்றும் இதர செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.42.99 இலட்சங்கள் (111667.10 – 111710.09) உயர்ந்தும் உள்ளது.

**1.1.3. தணிக்கைத்தடைகள்:**

கட்டிட வரைபட அனுமதி வழங்கும்போது சாலையின் அகலம் 12 மீட்டருக்கும் அதிகமுள்ள இனங்களுக்கு மழைநீர் வடிகால் வாய் கட்டணம் சேர்த்து தோராய அபிவிருத்தி கட்டணம் வசூலிக்கப்படாதது இழப்பு ரூ.5.87 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.4.1.4.1)

கட்டிட வரைபட அனுமதி வழங்கும்போது வசூலிக்கப்படும் பல்வேறு கட்டணங்கள் குறைவாக வசூல் செய்யப்பட்டது இழப்பு ரூ.3.59 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.4.1.4.2)

கட்டிட அனுமதி வழங்கும் போது 300 ச.மீ.க்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் வசூலிக்கப்படாதது இழப்பு ரூ.7.40 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.4.1.4.3)

விநாயகர் சதுர்த்தி பண்டிகையை முன்னிட்டு மெரினா கடற்கரை லூப் சாலையில் தடுப்பு வேலிகள் அமைத்தல், கண்காணிப்பு கோபுரங்கள் மற்றும் நாற்காலிகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொண்டது – இப்பணிகள் பண்டிகை முடிவுற்றபின் மேற்கொள்ளப்பட்டது – முறையற்ற செலவினம் ரூ.3.44 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.4.1.4.4)

ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் இறந்த பின்பும் ஓய்வூதியம்/ குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருவதால் இழப்பு ரூ.5.42 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.4.1.4.5)

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தில் சேமிப்புக் கணக்குகளில் ஈட்டப்பட்டுள்ள வட்டித்தொகை உரிய அரசுக் கணக்கில் செலுத்தப்படவில்லை – ரூ.30.20 இலட்சம் – மருத்துவ சேவைகள் துறை.

(தணிக்கைத் தடை பத்தி எண்.4.1.4.6)

டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மானியத்தில் பயனாளிகளுக்கு தொகை வழங்கிய பின் மீதமுள்ள தொகை அரசுக் கணக்கில் திரும்ப செலுத்தப்படாதது – ரூ.1083.32 இலட்சம் – மருத்துவ சேவைகள் துறை.

(தணிக்கைத் தடை பத்தி எண்.4.1.4.7)

**<u>1.2) இதர மாநகராட்சிகள்:</u>**

1.2.1. மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டில் இதர 14 மாநகராட்சிகளில் சொத்துவரி மூலம் கிடைத்த வருவாய் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.2456.72 இலட்சங்கள் (58372.39 – 60829.11) உயர்ந்தும், இதர வரியினங்கள் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.1754.45 இலட்சங்கள் (14946.86 – 13192.41) குறைந்தும், அரசு மானியம் பெறப்பட்டதில் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.1534.77 இலட்சங்கள் (22894.86 – 21360.09) குறைந்தும் உள்ளது மற்றும் இதர வரவினங்கள் கடந்த ஆண்டைக் கட்டிலும் ரூ.17438.63 இலட்சங்கள் (199228.56 – 181789.93) குறைந்தும் உள்ளது.

1.2.2. மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டில் பணியமைப்பு செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.4352.98 இலட்சங்கள் (139269.47 – 143622.45) உயர்ந்தும், இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.5118.14 இலட்சங்கள் (94755.84 – 99873.98) உயர்ந்தும், நிர்வாக செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.1294.49 இலட்சங்கள் (19829.56 – 18535.07) குறைந்தும் உள்ளது மற்றும் இதர செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.33726.28 இலட்சங்கள் (121239.16 – 154965.44) உயர்ந்தும் உள்ளது.

**1.2.3. தணிக்கைத்தடைகள்:**

மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் கட்டணம் மன்றத் தீர்மானத்தில் குறிப்பிட்ட குறைந்தபட்ச மாதாந்திர கட்டணத்திற்கும் குறைவாக வசூலிக்கப்பட்டு வருவது இழப்பு ரூ.800.32 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.4.2.3.1)

பொது முடக்கத்தின் காரணமாக ஆண்டு குத்தகை மற்றும் வாடகைத் தொகையில் அரசால் தள்ளுபடி அறிவிக்கப்பட்டது – அரசாணைக்கு முரணாக கூடுதலான மாதங்களுக்கு தள்ளுபடி வழங்கப்பட்டதால் இழப்பு ரூ.28.35 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.4.2.3.2)

வணிக வகை சொத்துவரி இனங்களுக்கு குடியிருப்பு வகையில் குடிநீர் இணைப்பு வழங்கியது – வைப்புத் தொகை மற்றம் குடிநீர் கட்டணம் குறைவாக நிர்ணயம் செய்து வசூல் செய்தது – இழப்பு ரூ.55.99 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.4.2.3.3)

புதைவடிகால் இணைப்பு வழங்கப்பட்டதில் கள பொறியாளர்களால் நேரடி ஆய்வு செய்து சான்று வழங்கப்பட்ட கட்டிட பரப்பளவை விட குறைவான பரப்பளவிற்கு சொத்துவரி விதித்தது இழப்பு ரூ.4.06 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.4.2.3.4)

வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு பரப்பளவிற்கு ஏற்றவாறு சொத்துவரி நிர்ணயம் செய்யாமல் குறைவாக நிர்ணயம் செய்தது – தொடர் வருவாய் இழப்பு – ரூ.54.25 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.4.2.3.5)

பேவர் பிளாக் சாலை பராமரிப்பு பணியில் அட்டவணை விலை விகிதத்தைவிட கூடுதல் தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கியது இழப்பு ரூ.2.37 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.4.2.3.6)

ஓய்வூதிய கொடு ஆணையில் குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் சாதாரண நிலையில் குடும்ப ஓய்வூதியம் வழங்காமல் உயர்த்தப்பட்ட நிலையில் குடும்ப ஓய்வூதியம் வழங்கியது இழப்பு ரூ.6.98 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.4.2.3.7)

**1.3. நகராட்சிகள்:**

1.3.1. மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டில் 121 நகராட்சிகளில் சொத்துவரி மூலம் கிடைத்த வருவாய் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.4072.44 இலட்சங்கள் (44987.15 – 40914.71) குறைந்தும், இதர வரியினங்கள் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.1530.38 இலட்சங்கள் (14362.78 – 12832.40) குறைந்தும், அரசு மானியம் பெறப்பட்டதில் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.8411.84 இலட்சங்கள் (58673.63 – 50261.79) குறைந்தும் உள்ளது மற்றும் இதர வரவினங்கள் கடந்த ஆண்டைக் கட்டிலும் ரூ.19634.85 இலட்சங்கள் (143931.54 – 163556.39) உயர்ந்தும் உள்ளது.

1.3.2. மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டில் பணியமைப்பு செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.4571.16 இலட்சங்கள் (131276.95 – 135848.11) உயர்ந்தும், இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.1795.13 இலட்சங்கள் (84620.85 – 86415.98) உயர்ந்தும் நிர்வாக செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.2764.87 இலட்சங்கள் (13043.12 – 10278.25) குறைந்தும் உள்ளது மற்றும் இதர செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.20818.80 இலட்சங்கள் (107160.63 – 127979.43) உயர்ந்தும் உள்ளது.

**1.3.3. தணிக்கைத்தடைகள்:**

அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் – 2017 – விற்கப்படாத மனைகள் வரன்முறைப்படுத்தியது திறந்தவெளி ஒதுக்கீடு நிலம் நகராட்சி பெயருக்கு மாற்றம் செய்யப்படவில்லை – மதிப்பு ரூ.28.28 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.4.3.14.1)

**1.4. பேரூராட்சிகள்:**

1.4.1. மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டில் 528 பேரூராட்சிகளில் சொத்துவரி மூலம் கிடைத்த வருவாய் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.427.06 இலட்சங்கள் (17675.24 – 17248.18) குறைந்தும், இதர வரியினங்கள் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.417.92 இலட்சங்கள் (9266.78 – 9684.70) உயர்ந்தும், அரசு மான்யம் பெறப்பட்டதில் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.9881.24 இலட்சங்கள் (34152.67 – 24271.41) குறைந்தும் உள்ளது மற்றும் இதர வரவினங்கள் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.6523.10 இலட்சங்கள் (159606.78 – 153083.68) குறைந்தும் உள்ளது.

1.4.2. மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டில் பணியமைப்பு செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.5090.71 இலட்சங்கள் (57717.01 – 52626.30) குறைந்தும், இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.8941.06 இலட்சங்கள் (96364.09 – 105305.15) உயர்ந்தும், நிர்வாக செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.645.62 இலட்சங்கள் (18076.83 – 18722.45) உயர்ந்தும் உள்ளது மற்றும் இதர செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.21568.02 இலட்சங்கள் (125811.09 – 147379.11) உயர்ந்தும் உள்ளது.

**1.4.3. தணிக்கைத்தடைகள்:**

திருவாளர்கள். பிரிமேட்டிக்ஸ் நிறுவனத்தால் இணைய வழி (Online) வசூலிக்கப்பட்ட வரி (ம) வரியில்லா இனங்களுக்கான தொகை பேரூராட்சிகளின் வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்யப்படாதது – இழப்பு ரூ.474.18 இலட்சம்

(தணிக்கைத் தடை எண். 4.4.6.1)

தி/ள். அமிர்தா விஸ்வா வித்யாபீடம் கல்வி நிறுவனங்கள் – எட்டிமடை பேரூராட்சியால் கட்டிட வரைபட அனுமதி வழங்கிய போது காலியிட மனை வரி குறைவாக வசூலிக்கப்பட்டது – இழப்பு ரூ.369.66 இலட்சம் மற்றும் இதர குறைபாடுகள்.

(தணிக்கைத் தடை எண்.4.4.6.2)

## ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள்

**1.5. மாவட்ட ஊராட்சிகள்:**

மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டில் 32 மாவட்ட ஊராட்சிகளின் வருவாய் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.4253.91 இலட்சங்கள் (43678.62 – 39424.71) குறைந்தும் மற்றும் செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.18737.20 இலட்சங்கள் (52981.23 – 34244.03) குறைந்தும் உள்ளது.

**1.6. ஊராட்சி ஒன்றியங்கள்:**

1.6.1. மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டில் 388 ஊராட்சி ஒன்றியங்களின் சொந்த வருவாய் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.399.47 கோடிகள் (835.60 – 436.13) குறைந்தும், ஒப்படைக்கப்பட்ட வருவாய் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.435.02 கோடிகள் (1053.45 – 618.43) குறைந்தும், மற்றும் அரசு மான்யம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.1555.08 கோடிகள் (7375.34 – 8930.42) உயர்ந்தும் உள்ளது.

1.6.2. மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டில் வருவாய் செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.84.26 கோடிகள் (3288.86 – 3373.12) உயர்ந்தும், மூலதனம் செலவினம் கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.609.09 கோடிகள் (5975.53 – 6584.62) உயர்ந்தும் உள்ளது.

**1.6.3. தணிக்கைத் தடைகள்:**

பாரத மாநில வங்கி, கிளையில் பராமரிக்கப்படும் திட்ட கணக்குகளில் தன்னிச்சையாக தொகை ரூ.12.55 இலட்சங்கள் வங்கியினரால் கழிக்கப்பட்டது – வங்கி கணக்குகளில் இறுதி இருப்பில் குறைவு.

(தணிக்கை தடை எண்.5.2.5.1)

பொதுநிதி மற்றும் திட்ட நிதியிலிருந்து சம்மந்தமற்ற நபர்களுக்கு காலங்கடந்த வைப்புத் தொகைகள் திரும்ப வழங்கப்பட்டது மற்றும் இதர பொது நிலுவைத்தொகை வழங்கப்பட்டதில் மோசடி – இழப்பு ரூ.51.78 இலட்சங்கள்.

(தணிக்கை தடை எண்.5.2.5.2)

**1.7. கிராம ஊராட்சிகள்:**

1.7.1. ஊராட்சி அமைப்புகளின் மூன்றடுக்கு முறையில், கிராம ஊராட்சி மட்டுமே வரி மற்றும் கட்டணம் விதிக்கும் அதிகாரம் பெற்றது. வரியில்லாத வருவாய், மாநில அரசிடமிருந்து ஒப்படைக்கப்பட்ட வருவாய், மாநில அரசால் வழங்கப்பட்ட மானியங்கள், பல்வேறு நோக்கங்களுக்காக இந்திய அரசால் அளிக்கப்பட்ட மானியங்கள் மற்றும் மாநில மற்றும் மத்திய நிதிக்குழு மானியங்கள் ஆகியன கிராம ஊராட்சிகள் வருவாய்க்கான ஆதாரங்களாகும். மேலும் வீட்டுவரி, தொழில்வரி விளம்பர வரி போன்ற வரிகளை விதிக்கும் அதிகாரத்தை கிராம ஊராட்சிகள் பெற்றுள்ளன. மாநில நிதிக் குழு மான்யமாக மத்திய நிதிக்குழு மான்யமாக மாநில அரசு மற்றும் இந்திய அரசினால் அளிக்கப்பட்ட மானியங்கள் மற்றும் ஒப்படைக்கப்பட்ட வருவாய் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் மாவட்ட ஆட்சியர்களுக்கு விடுவிக்கப்படுகின்றன.

**1.7.2. தணிக்கைத் தடைகள்:**

கிராம ஊராட்சிகளில் 31.03.2021 நிலையில் வசூல் செய்யப்பட்ட ரூ.21.97 இலட்சம் ரொக்க வரவினங்கள் குறைவாக வங்கியில் செலுத்தியது மற்றும் வங்கியில் செலுத்தப்படாமல் உள்ளது – தணிக்கைத் தடை எழுப்பிய பிறகு ரூ.10.05 இலட்சங்கள் செலுத்தப்பட்டுள்ளது – ரூ.11.92 இலட்சங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.

(தணிக்கை தடை எண்.5.3.8.1)

**பல்கலைக் கழகங்கள்**

**1.8. பல்கலைக் கழகங்கள்:**

1.8.1. தமிழ்நாட்டில் உள்ள மாணவ, மாணவிகள் உயர்கல்வி பெற மத்திய, மாநில அரசுகளால் இயற்றப்பட்ட தனித்தனியான சட்டங்களால் தனித்துவம் வாய்ந்த, சுதந்திரமான, தன்னாட்சி பெற்ற சட்டபூர்வமான 23 பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டு உயர்கல்வி பணியினை செய்து வருகின்றன. பல்கலைக்கழகங்கள் மானிய நிதி தொகுப்பு அடிப்படையில் மத்திய, மாநில அரசுகளிடமிருந்து நிதி உதவிகளை மானியமாக பெறுகின்றன. மேலும் மாணவர்களிடம் இருந்து கல்வி கட்டணங்கள் வசூலிக்கின்றன.

**1.8.2. தணிக்கைத்தடைகள்:**

கல்லூரி இணைப்பு கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் மீதான சரக்கு மற்றும் சேவை வரி (GST) வசூலிக்கப்படாதது ரூ.578.91 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.6.1.7.1)

அரசின் முன் அனுமதி பெறாமல் நிலையான கட்டண ஒப்பந்த அடிப்படையில் கணினிகள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டது – தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளி விதிகள் மீறப்பட்டது – ரூ.1831.50 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.6.1.7.2)

பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள் – மையங்கள் மற்றும் கல்லூரிகளின் கணக்குகளில் 2014–15 முதல் வங்கி இருப்பு மற்றும் அதிக அளவிலான முதலீடுகள் பயன்படுத்தப்படாமல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது – ரூ.11075.70 இலட்சம் அண்ணா பல்கலைக்கழக பொது நிதி வருவாய் கணக்குக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.6.1.7.3)

எழுபத்தோர் ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு 01.04.2003–க்கு பிறகு பணிநியமனம் முறைப்படுத்தப்பட்டது பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திலிருந்து பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது அரசாணைகளுக்கு எதிரானது.

(தணிக்கைத் தடை பத்தி எண்.6.1.7.4)

பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் (CPS) கீழ் உள்ள 71 ஆசிரியரல்லா பணியாளர்கள் சேமநல நிதித் திட்டம் அதாவது பழைய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் மாற்றம் செய்யப்பட்டது – மேலும் அப்பணியாளர்களுக்கு சேமநல நிதி தற்காலிக முன்பணம் மற்றும் இறுதிப் பணம் வழங்கப்பட்டது – தொகை ரூ.47.04 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.6.1.7.5)

கடல்சார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் (CMST) – பல்கலைக்கழக மானியக் குழுவின் விதிமுறைகள் மற்றும் அரசாணைகளுக்கு முரணாக முனைவர் S.மேரி ஜோஸ்பின் புனிதா அவர்களை கருணை அடிப்படையில் விரிவுரையாளராக பணிநியமனம் செய்தது – 2020–21 ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் பிற படிகள் ரூ.19.96 இலட்சம் தணிக்கையில் ஆட்சேபிக்கப்படுகிறது.

(தணிக்கைத் தடை பத்தி எண்.6.1.7.6)

## இதர நிறுவனங்கள்

### 1.9. உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள்

1.9.1. தமிழ்நாட்டில் பொது நூலக துறையின் கீழ் 3926 பொது நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. உள்ளாட்சி நிறுவனங்கள் மூலம் வசூலிக்கப்படும் சொத்துவரி மற்றும் வீட்டு வரியில் நூலக வரி வசூலிக்க 1948 ஆம் ஆண்டு நூலக சட்டப் பிரிவு 12(2) இல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி தற்பொழுது சொத்து வரி / வீட்டு வரியில் 1 ரூபாய்க்கு 10 பைசா நூலகவரியாக வசூலிக்கப்படுகிறது. மேலும் பொது நூலக சட்ட பிரிவு 13 (3)–இன் படி வசூலிக்கப்படும் நூலகவரிக்கு இணையாக அரசு பங்குத்தொகை (சென்னை தவிர) அனைத்து மாவட்ட நூலகங்களுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 1.9.2. தணிக்கைத்தடைகள்:

நூலக ஆணைக் குழு பணியாளர்களுக்கு 2020–21 ஆம் ஆண்டுக்கான ஊதியம் மற்றும் பிற படிகள் அரசு கருவூலத்திலிருந்து பெற்று வழங்கப்பட்டது – அரசு கணக்குத் தலைப்பில் மீள செலுத்தப்படாதது –ரூ.6884.01 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.6.2.6.1)

### 1.10. வேளாண் விற்பனை குழுக்கள்:

1.10.1. தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியத்தின் மேலாண் இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் தமிழ்நாட்டில் மொத்தம் 28 மாவட்ட வேளாண் விற்பனை குழுக்களும், மற்றும் இவற்றின் கட்டுப்பாட்டில் உழவர் சந்தைகளும் உருவாக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. வேளாண் விற்பனை வாரியத்தின் கட்டுமானப்பணிகளை முகமை அடிப்படையில் மேற்கொள்ள சென்னை, வேலூர் மற்றும் மதுரை ஆகிய 3 இடங்களில் வேளாண் பொறியியல் பிரிவுகளும் செயல்படுகின்றன.

**1.10.2. தணிக்கைத்தடைகள்:**

வேளாண் விற்பனைக் குழு பணியாளர்களுக்கு 2020–21 ஆம் ஆண்டுக்கான ஊதியம் மற்றும் பிற படிகள் அரசு கருவூலத்திலிருந்து பெற்று வழங்கப்பட்டது – அரசு கணக்குத் தலைப்பில் மீள செலுத்தப்படாதது – ரூ.2314.03 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.6.3.5.1)

மாட்டுத்தாவணி, மதுரை நெல் வணிக வளாகம் – தவணை முறை அடிப்படையில் விற்பனை செய்யப்பட்ட கடைகளுக்கான நிலுவை கிரையத் தொகை ரூ.2094.94 இலட்சம் மற்றும் பராமரிப்புக் கட்டணத் தொகை ரூ.11.07 இலட்சம் வழக்கு காரணமாக வசூலிக்கப்படாமல் 2006 ஆம் ஆண்டு முதல் நிலுவையாக உள்ளது.

(தணிக்கைத் தடை பத்தி எண்.6.3.5.2)

**1.11. உள்ளூர் திட்ட குழுமம்:**

1.11.1. தமிழ்நாட்டில் 2020–21 ஆம் ஆண்டில் 23 உள்ளூர் திட்டக் குழுமங்களும் 6 புதிய நகர மேம்பாட்டு ஆணையங்களும் செயல்படுகின்றன.

உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு பின்வரும் இனங்கள் முக்கிய வருவாயாகும்.

1) உள்ளாட்சி அமைப்புகளின் நிகர வருவாயில் 1% பங்களிப்புத் தொகை
2) வளர்ச்சிக் கட்டணங்கள்
3) உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளுக்கான கட்டணங்கள்
4) திட்டமிடல் அனுமதி கட்டணங்கள்
5) ஒழுங்குமுறைக் கட்டணங்கள்

**1.11.2. தணிக்கைத்தடைகள்:**

உள்ளூர் திட்டக் குழுமப் பணியாளர்களுக்கு 2020–21 ஆம் ஆண்டுக்கான ஊதியம் மற்றும் பிற படிகள் அரசு கருவூலத்திலிருந்து பெற்று வழங்கப்பட்டது – அரசு கணக்குத் தலைப்பில் மீள செலுத்தப்படாதது – ரூ.777.02 இலட்சம்.

(தணிக்கைத் தடை பத்தி எண்.6.4.5.1)

## அட்டவணை 1: 2019 -20 மற்றும் 2020-21 ஆண்டுக்கான அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களின் வரவினம் மற்றும் செலவினம் விவரம்

### I) நகர்புற உள்ளாட்சி நிறுவனங்கள்

### வரவினம்

| வ. எண் | நிறுவனங்களின் பெயர் | மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கை | ஆண்டு | சொத்து வரி | இதர வரிகள் | அரசு மானியம் | இதர வரவினங்கள் | மொத்தம் | உபரி / பற்றாக்குறை | பெரு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (ரூ.இலட்சத்தில்) | | | | | | |
| 1) | பெருநகர சென்னை மாநகராட்சி | 1 | 2019-20 | 103200.49 | 41184.35 | 20734.92 | 103718.29 | 268838.05 | 74673.37 | 343510.42 |
| | | | 2020-21 | 42359.35 | 86326.77 | 100453.09 | 100640.16 | 329779.37 | 47618.74 | 377398.11 |
| 2) | இதர மாநகராட்சிகள் | 11 | 2019-20 | 58372.39 | 14946.86 | 22894.86 | 199228.56 | 295442.67 | 92644.85 | 388087.52 |
| | | 14 | 2020-21 | 60829.11 | 13192.41 | 21360.09 | 181789.93 | 277171.54 | 147573.71 | 424745.30 |
| 3) | நகராட்சிகள் | 121 | 2019-20 | 44987.15 | 14362.78 | 58673.63 | 143931.54 | 261955.10 | 89300.75 | 351255.85 |
| | | 121 | 2020-21 | 40914.71 | 12832.40 | 50261.79 | 163566.39 | 267575.29 | 103346.48 | 307921.77 |
| 4) | பேரூராட்சிகள் | 528 | 2019-20 | 17675.24 | 9266.78 | 34152.67 | 159606.78 | 220701.47 | 77267.55 | 297969.02 |
| | | | 2020-21 | 17248.18 | 9684.70 | 24271.41 | 153083.68 | 204287.97 | 119745.04 | 324033.01 |

### செலவினம்

| வ. எண் | நிறுவனங்களின் பெயர் | மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கை | ஆண்டு | பணியமைப்பு செலவினம் | இயக்கம் (ம) பராமரிப்பு செலவினம் | நிர்வாக செலவினம் | இதர செலவினம் | மொத்தம் | உபரி / பற்றாக்குறை | பெரு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (ரூ.இலட்சத்தில்) | | | | | | |
| 1) | பெருநகர சென்னை மாநகராட்சி | 1 | 2019-20 | 140605.67 | 65970.43 | 7688.22 | 111667.10 | 325931.42 | 17579.00 | 343510.42 |
| | | | 2020-21 | 135927.55 | 112843.64 | 9187.17 | 111710.09 | 369668.45 | 7729.66 | 377398.11 |
| 2) | இதர மாநகராட்சிகள் | 11 | 2019-20 | 139269.47 | 94755.84 | 19829.56 | 121239.16 | 375094.03 | 12993.49 | 388087.52 |
| | | 14 | 2020-21 | 143622.45 | 99873.98 | 18535.07 | 154965.44 | 416996.94 | 7748.31 | 424745.25 |
| 3) | நகராட்சிகள் | 124 | 2019-20 | 131276.95 | 84620.85 | 13043.12 | 107160.63 | 336101.55 | 15154.30 | 351255.85 |
| | | 121 | 2020-21 | 135848.11 | 86415.98 | 10278.25 | 127979.43 | 360521.77 | 10400.00 | 370921.77 |
| 4) | பேரூராட்சிகள் | 528 | 2019-20 | 57717.01 | 96364.09 | 18076.83 | 125811.09 | 297969.02 | 0.00 | 297969.02 |
| | | | 2020-21 | 52626.30 | 105305.15 | 18722.45 | 147379.11 | 324033.01 | 0.00 | 324033.01 |

**அட்டவணை 2: 2019 –20 மற்றும் 2020–21 ஆண்டுக்கான அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களின் வரவினம் மற்றும் செலவினம் விவரம்**

**II) ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள்**

| வ. எண் | நிறுவனங்களின் பெயர் | மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கை | ஆண்டு | வரவினம் | | | | செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | சொந்த வருவாய் | ஒதுக்கப்பட்ட வருவாய் | அரசு மானியங்கள் | மொத்தம் | வருவாய் செலவினம் | மூலதன செலவினம் | மொத்தம் |
| | | | | (ரூ.கோடியில்) | | | | | | |
| 1) | ஊராட்சி ஒன்றியங்கள் | 386 | 2019–20 | 835.60 | 1053.45 | 7375.34 | 9264.39 | 3288.86 | 5975.53 | 9264.39 |
| | | 388 | 2020–21 | 436.13 | 618.43 | 8930.42 | 9984.98 | 3373.12 | 6584.62 | 9957.74 |

| வ. எண் | நிறுவனங்களின் பெயர் | மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கை | ஆண்டு | வரவினம் | செலவினம் |
|---|---|---|---|---|---|
| | | | | (ரூ.இலட்சத்தில்) | |
| 1) | மாவட்ட ஊராட்சிகள் | 31 | 2019–20 | 43678.62 | 52981.23 |
| | | 32 | 2020–21 | 39424.71 | 34244.03 |

## அத்தியாயம் – II

உள்ளாட்சி அமைப்புகளின் வருவாய் மற்றும் செலவினங்கள் குறித்து பல்வேறு துணைத் தலைப்புகளின் கீழ் ஒப்பிட்டு ஆய்வு

## ஆண்டுக்கணக்குகள் மீதான ஓர் ஆய்வு

### 2.1. பெருநகர சென்னை மாநகராட்சி:

2.1.1. 2020–21 ஆம் ஆண்டில் மொத்த வரவினம் கடந்த ஆண்டை விட ரூ.60941.32 இலட்சங்கள் (268838.05 – 329779.37) உயர்ந்தும் மற்றும் மொத்த செலவினம் கடந்த ஆண்டை விட ரூ.43737.03 இலட்சங்கள் (325931.42 – 369668.45) உயர்ந்தும் உள்ளது. இவ்வாண்டிற்கான நிகர நிதிநிலை ரூ.39889.08 இலட்சங்கள் (47618.74 – 7729.66) பற்றாக்குறையில் முடிந்துள்ளது. மேலும், 31.03.2021 அன்றைய நிலையில் ரூ.81995.18 இலட்சங்கள் திரண்ட பற்றாக்குறையாக உள்ளது. 2020–21 ஆம் ஆண்டில் கடன் பொறுப்பு ரூ.274467.18 இலட்சங்களாக உள்ளது. இது கடந்த ஆண்டு கடன் பொறுப்பு ரூ.264065.31 இலட்சத்தை விட ரூ.10401.87 இலட்சங்கள் உயர்ந்துள்ளது.

2.1.2. 2019–20 மற்றும் 2020–21 ஆகிய ஆண்டுகளில் சொத்து வரி கேட்பானது இறங்குமுகத்தில் முறையே ரூ.103200.49 இலட்சங்கள் மற்றும் ரூ.42359.35 என அமைந்துள்ளது. மேலும், இறங்குமுகத்திற்கு காரணம் 2020–21 ஆம் ஆண்டில் அரசு சொத்துவரி சீராய்வை நிறுத்திவைத்ததாகும்.

**அட்டவணை 3: சொத்துவரி – கேட்பு, வசூல் மற்றும் நிலுவை விவரம்**

| வ. எண் | ஆண்டு | கேட்பு | வசூல் | நிலுவை | வசூல் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | ரூ.இலட்சங்களில் | | | | |
| 1) | 2016–17 | 57984 | 36734 | 21250 | 63.35 |
| 2) | 2017–18 | 62259 | 36518 | 25741 | 58.65 |
| 3) | 2018–19 | 149247 | 82395 | 66852 | 55.20 |
| 4) | 2019–20 | 103200 | 52809 | 50391 | 51.17 |
| 5) | 2020–21 | 42359 | 22587 | 19772 | 53.32 |

2.1.3. ஒப்பீடு காலத்தில் கேட்பில் வசூல் விகிதம் இறங்குமுகத்தில் அமைந்துள்ளது. இந்த 5 ஆண்டு காலத்திற்கான கேட்பில் வசூல் சராசரி விகிதம் 56.34% ஆக உள்ளது. சொத்துவரி வசூலை மேம்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் நிதி ஏற்றத்தாழ்வினை சமன்படுத்தலாம்.

2.1.4. தொழில் வரி கேட்பானது ரூ.85207.00 இலட்சம் முந்தைய ஆண்டின் கேட்பான ரூ.45711.00 இலட்சங்களை விட 86.40% சதவிகிதம் உயர்ந்துள்ளது. ஆனால், வசூல் தொகை ரூ.7653.00 இலட்சங்கள், கடந்த ஆண்டு வசூல் தொகை ரூ.8432.00 இலட்சங்களை விட 9.23% குறைந்துள்ளது.


2.1.5. தனியார் மயமாக்கல் மூலம் மேற்கொள்ளப்பட்ட துப்புரவுப் பணிக்கான செலவினம் ரூ.33422.16 இலட்சங்கள் முந்தைய ஆண்டின் செலவினமான ரூ.29428.81 இலட்சங்களை விட ரூ.3993.35 இலட்சங்கள் உயர்ந்துள்ளது. ஆனால், இத்தொகையோடு பெருநகர சென்னை மாநகராட்சியின் துப்புரவு பணியாளர்களின் ஊதியச் செலவினமான ரூ.26764.00 இலட்சங்களை சேர்த்தால் மொத்த துப்புரவு செலவினம் ரூ.60186.16 இலட்சங்களாகும். இது மொத்த வரி வருவாயில் 46.76% சதவிகிதம் ஆகும். இது செலவினங்களை சிரமமின்றி ஈடுசெய்திட வருவாய் இனங்களை பெருக்கிடவும், மேம்படுத்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை தெளிவாக காண்பிக்கிறது.

2.1.6. வருவாய் நிதியிலிருந்து ஆரம்ப கல்வி நிதிக்கு மாற்றம் செய்யப்படும் தொகை, கல்வி வரியில் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை கழித்தபின் தொகை ரூ.10115.13 இலட்சங்கள் உபரியாக உள்ளது. இந்த உபரியினை கல்வி உள்கட்டமைப்பு மேம்படுத்துதல் பணிக்கு மேற்கொள்ளப்பட்டிருந்தால் மாநகராட்சி பள்ளிகளின் கல்வி கற்பித்தல் திறன் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் தனியார் பள்ளிகளுக்கு நிகராக அமைய வாய்ப்புள்ளது.

2.1.7. சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு நூலக வரியாக ரூ.14801.76 இலட்சங்கள் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ள விவரம் தணிக்கையில் கண்டறியப்பட்டது.

2.1.8. பெருநகர சென்னை மாநகராட்சியில் 2017–18 முதல் 2020–21 வரையிலான காலத்திற்கு வரவினம் மற்றும் செலவினங்கள் பின்வரும் பட்டை வரைபடங்கள் மூலம் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன.


வரைபடம் 1: பெருநகர சென்னை மாநகராட்சி – வரவினம்



**i)சொத்துவரி:**

சொத்து வரி கேட்பு 2017–18 ஆம் ஆண்டை விட 2018–19 ஆம் ஆண்டில் 43.77% உயர்ந்துள்ளது. ஆனால், 2018–19 ஆம் ஆண்டை விட 2019–20 ஆம் ஆண்டில் 27.48% குறைந்துள்ளது. இது 2018–19 ஆம் ஆண்டில் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொண்டதை நிறுத்தம் செய்யப்பட்டதால் ஏற்பட்டதாகும். அதேபோன்று 2019–20 ஆம் ஆண்டை விட 2020–21 ஆம் ஆண்டில் 58.95% குறைந்துள்ளது.


வரைபடம் 2: பெருநகர சென்னை மாநகராட்சி – சொத்து வரி




**ii)இதர வரியினங்கள்:**

'இதர வரிகள்' என்பது தொழில் வரி, கேளிக்கை வரி, விளம்பர வரி நிறும வரி மற்றும் மர வரி ஆகியவை உள்ளடக்கியதாகும்.

வரைபடம் 3: பெருநகர சென்னை மாநகராட்சி – இதர வரியினங்கள்





இதர வரியினங்கள் வருவாயில் 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 73.42% உயர்ந்துள்ளது. 2018–19 ஆம் ஆண்டைவிட இதர வரியினங்கள் 2019–20 ஆம் ஆண்டில் 4.89% சிறிதளவு குறைந்துள்ளது. ஆனால், இதர வரியினங்கள் 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 109.61% பெருமளவு உயர்ந்துள்ளது.

**iii) அரசு மானியம்:**

அரசு மானியம் பெறப்பட்டதில் 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 23.77% உயர்ந்துள்ளது. மேலும், 2018–19 ஆம் ஆண்டைவிட அரசு மானியம் 2019–20 ஆம் ஆண்டில் 6.24% உயர்ந்துள்ளது. ஆனால், 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 384.46% பெருமளவு உயர்ந்துள்ளது.


வரைபடம் 4: பெருநகர சென்னை மாநகராட்சி – அரசு மானியம்




**iv)இதர வரவினம்:**


'இதர வரவினம்' என்பது ஒதுக்கப்பட்ட வருவாய் பகிர்மான நிதி, சேவைக் கட்டணம், விற்பனை மற்றும் வாடகை வரவுகள் காலங்கடந்த வைப்புத் தொகை மற்றம் தொகை பிடித்தம் ஆகியவை உள்ளடக்கியதாகும்.

வரைபடம் 5: பெருநகர சென்னை மாநகராட்சி – இதர வரவினங்கள்




இதர வரவினமானது 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 70.91% உயர்ந்துள்ளது. மேலும், 2018–19 ஆம் ஆண்டைவிட 2019–20 ஆம் ஆண்டில் 3.49% குறைந்துள்ளது. அதேபோல் 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 2.97% சிறிதளவு குறைந்துள்ளது.


வரைபடம் 6: பெருநகர சென்னை மாநகராட்சி – செலவினம்




**I)பணியாளர் செலவினம்:**

பணியாளர் செலவினமானது 2017-18 ஆம் ஆண்டைவிட 2018-19 ஆம் ஆண்டில் 17.18% உயர்ந்துள்ளது. 2018-19 ஆம் ஆண்டைவிட 2019-20 ஆம் ஆண்டில் 2.23% உயர்ந்துள்ளது. இது ஊதியக்குழு அமுல்படுத்தப்பட்டதால் ஏற்பட்டதாகும். ஆனால், 2019-20 ஆம் ஆண்டைவிட 2020-21 ஆம் ஆண்டில் 3.33% சிறிதளவு குறைந்துள்ளது.


வரைபடம் 7: பெருநகர சென்னை மாநகராட்சி – பணியாளர் செலவினம்



**ii) இயக்கம் (ம) பராமரிப்பு செலவினம்:**

இயக்கம் (ம) பராமரிப்பு செலவினமானது 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 3.53% உயர்ந்துள்ளது. ஆனால், 2019–20 ஆம் ஆண்டில் 1.68% குறைந்துள்ளது. மேலும், 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 71.05% உயர்ந்துள்ளது.


வரைபடம் 8: பெருநகர சென்னை மாநகராட்சி – இயக்கம் (ம) பராமரிப்பு செலவினம்




**iii) நிர்வாக செலவினம்:**

நிர்வாக செலவினமானது 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 6.56% குறைந்துள்ளது. ஆனால், 2018–19 ஆம் ஆண்டைவிட 2019–20 ஆம் ஆண்டில் 28.73% குறைந்துள்ளது. மேலும், 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 19.50% உயர்ந்துள்ளது.


வரைபடம் 9: பெருநகர சென்னை மாநகராட்சி – நிர்வாக செலவினம்



**iv) இதர செலவினங்கள்:**

'இதர செலவினங்கள்' என்பது திட்ட செலவுகள், நிதி செலவுகள், தேய்மானம் மற்றும் பல்வகை செலவினங்கள் ஆகியவை உள்ளடக்கியதாகும்.

வரைபடம் 10: பெருநகர சென்னை மாநகராட்சி – இதர செலவினங்கள்




இதர செலவினமானது 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 355.19% பெருமளவு உயர்ந்துள்ளது. ஆனால், 2018–19 ஆம் ஆண்டைவிட 2019–20 ஆம் ஆண்டில் 9.53% குறைந்துள்ளது. மேலும், 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 0.04% உயர்ந்துள்ளது.

**2.2. இதர மாநகராட்சிகள்:**

2.2.1. இதர 14 மாநகராட்சிகளுக்கான 2020–21 ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த வரவினம் முந்தைய ஆண்டைவிட ரூ.18271.13 இலட்சங்கள் (295442.67 – 277171.54) குறைந்தும் ஒட்டுமொத்த செலவினம் முந்தைய ஆண்டைவிட ரூ.41902.91 இலட்சங்கள் (375094.03 – 416996.94) உயர்ந்தும் உள்ளது. 2020–21 இல் இந்நிறுவனங்களுக்கான கடன் பொறுப்பு ரூ.195044.01 இலட்சங்கள் ஆகும். கடந்த ஆண்டு கடன் பொறுப்பு ரூ.174890.48 இலட்சங்களாக இருந்தது.

2.2.2. இதர 14 மாநகராட்சிகளின் ஒட்டுமொத்த இறுதி கணக்குகள் ரூ.139825.40 இலட்சங்கள் ஆண்டு பற்றாக்குறையிலும், ரூ.11486.64 இலட்சங்கள் திரண்ட உபரியையும் காட்டுகின்றது. வசூலிக்கத்தக்க வரி ரூ.126690.92 இலட்சம் உள்ள நிலையில் நிதிநிலையை மேம்படுத்த நிர்வாகத் தரப்பில் செயல்திறனற்ற தன்மையையும், முன்பணம் வரவாக்கப்படாத தொகை ரூ.267487.20 இலட்சங்கள் உள்ள நிலை நிர்வாகத்தின் அலட்சியப் போக்கையும் காட்டுகிறது.



119-3—3

2.2.3. ஆண்டுக் கணக்குகளின்படி 14 மாநகராட்சிகளில் 1 மாநகராட்சி ஆண்டு உபரியிலும் 13 மாநகராட்சிகள் ஆண்டு பற்றாக்குறையிலும் முடிவதைக் காட்டுகிறது. அதன் விவரம் பின்வருமாறு

அட்டவணை 4: மாநகராட்சிகளின் உபரி மற்றும் பற்றாக்குறை விவரம்

| வ. எண் | மாநகராட்சியின் பெயர் | ஆண்டு உபரி | | ஆண்டு பற்றாக்குறை | |
|---|---|---|---|---|---|
| | | 2019-20 | 2020-21 | 2019-20 | 2020-21 |
| | | ரூ.இலட்சத்தில் | | | |
| 1) | மதுரை | – | – | 17503.47 | 18137.21 |
| 2) | கோயம்புத்தூர் | – | – | 8109.67 | 24282.10 |
| 3) | திருச்சிராப்பள்ளி | – | – | 4106.59 | 5953.49 |
| 4) | சேலம் | – | – | 2028.75 | 7541.36 |
| 5) | திருநெல்வேலி | – | – | 6672.30 | 28860.54 |
| 6) | ஈரோடு | – | – | 12157.47 | 10189.03 |
| 7) | திருப்பூர் | – | – | 11004.96 | 5218.31 |
| 8) | வேலூர் | – | – | 6797.24 | 19991.38 |
| 9) | தூத்துக்குடி | – | – | 4357.41 | 3598.26 |
| 10) | தஞ்சாவூர் | – | – | 3979.21 | 8877.08 |
| 11) | திண்டுக்கல் | – | – | 1324.84 | 3987.75 |
| 12) | ஓசூர் | 2137.34 | 356.40 | – | – |
| 13) | நாகர்கோவில் | – | – | 1086.80 | 1295.90 |
| 14) | ஆவடி | 1198.13 | – | – | 2249.39 |


அதேபோன்று 6 மாநகராட்சிகள் திரண்ட உபரியிலும் 8 மாநகராட்சிகள் திரண்ட பற்றாக்குறையிலும் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 5: மாநகராட்சிகளின் திரண்ட உபரி மற்றும் திரண்ட பற்றாக்குறை விவரம்

| வ. எண் | மாநகராட்சியின் பெயர் | திரண்ட உபரி | | திரண்ட பற்றாக்குறை | |
|---|---|---|---|---|---|
| | | 2019-20 | 2020-21 | 2019-20 | 2020-21 |
| | | ரூ.இலட்சத்தில் | | | |
| 1) | மதுரை | – | – | 6140.16 | 23297.37 |
| 2) | கோயம்புத்தூர் | 209955.96 | 188186.33 | – | – |
| 3) | திருச்சிராப்பள்ளி | 45961.52 | 40120.10 | – | – |
| 4) | சேலம் | – | 456.99 | 4870.56 | – |
| 5) | திருநெல்வேலி | – | – | 34734.76 | 63595.33 |
| 6) | ஈரோடு | – | – | 47178.96 | 55710.53 |
| 7) | திருப்பூர் | – | – | 5413.60 | 15046.43 |
| 8) | வேலூர் | – | – | 34409.42 | 54343.56 |
| 9) | தூத்துக்குடி | – | – | 12461.99 | 15458.12 |
| 10) | தஞ்சாவூர் | – | – | 2857.10 | 11658.08 |
| 11) | திண்டுக்கல் | 4031.02 | 43.28 | – | – |
| 12) | ஓசூர் | 25611.35 | 31033.53 | – | – |
| 13) | நாகர்கோவில் | – | – | 10671.78 | 11553.58 |
| 14) | ஆவடி | – | 2309.41 | 1149.38 | – |

2.2.4. இதர மாநகராட்சிகளின் 2017–18 முதல் 2020–21 வரையிலான காலத்திற்கு வரவினம் மற்றும் செலவினம் பின்வரும் பட்டை வரைபடங்கள் மூலம் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன.


வரைபடம் 11: இதர மாநகராட்சிகள் – வரவினங்கள்




**i) சொத்துவரி:**

சொத்து வரி கேட்பு 2017–18 ஆம் ஆண்டை விட 2018–19 ஆம் ஆண்டில் 50.60% உயர்ந்துள்ளது. ஆனால், 2018–19 ஆம் ஆண்டை விட 2019–20 ஆம் ஆண்டில் 24.51% குறைந்துள்ளது. இது 2018–19 ஆம் ஆண்டில் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொண்டதை நிறுத்தம் செய்யப்பட்டதால் ஏற்பட்டதாகும். மேலும், 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 4.21% உயர்ந்துள்ளது.

வரைபடம் 12: இதர மாநகராட்சிகள் – சொத்து வரி







119-3—3a

**ii) இதர வரியினங்கள்:**

'இதர வரிகள்' என்பது தொழில் வரி, கேளிக்கை வரி, விளம்பர வரி நிறும வரி மற்றும் மர வரி ஆகியவை உள்ளடக்கியதாகும்.

வரைபடம் 13: இதர மாநகராட்சிகள் – இதர வரியினங்கள்





இதர வரியினங்களில் 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 3.39% உயர்ந்துள்ளது. 2018–19 ஆம் ஆண்டைவிட இதர வரியினங்கள் 2019–20 ஆம் ஆண்டில் 45.30% அபரிதமாக உயர்ந்துள்ளது. ஆனால் 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 11.74% குறைந்துள்ளது.

**iii)அரசு மானியங்கள்:**

அரசு மானியம் பெறப்பட்டதில் 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 53.78% குறைந்துள்ளது. மேலும், 2018–19 ஆம் ஆண்டைவிட அரசு மானியம் 2019–20 ஆம் ஆண்டில் 41.49% குறைந்துள்ளது. மேலும், 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 6.70% குறைந்துள்ளது.


வரைபடம் 14: இதர மாநகராட்சிகள் – அரசு மானியம்



**iv)இதர வரவினம்:**


'இதர வரவினம்' என்பது ஒதுக்கப்பட்ட வருவாய் பகிர்மான நிதி, சேவைக் கட்டணம், விற்பனை மற்றும் வாடகை வரவுகள் காலங்கடந்த வைப்புத் தொகை மற்றம் தொகை பிடித்தம் ஆகியவை உள்ளடக்கியதாகும்.

வரைபடம் 15: இதர மாநகராட்சிகள் – இதர செலவினம்




இதர வரவினமானது 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 102.16% அபரிதமாக உயர்ந்துள்ளது. மேலும், 2018–19 ஆம் ஆண்டைவிட 2019–20 ஆம் ஆண்டில் 14.77% உயர்ந்துள்ளது. ஆனால், 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 8.75% சிறிதளவு குறைந்துள்ளது.


வரைபடம் 16: இதர மாநகராட்சிகள் – செலவினம்



**i)பணியாளர் செலவினம்:**

பணியாளர் செலவினமானது 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 25.13% உயர்ந்தும், 2018–19 ஆம் ஆண்டைவிட 2019–20 ஆம் ஆண்டில் 17.30% உயர்ந்துள்ளது. இது ஊதியக்குழு அமுல்படுத்தப்பட்டதால் ஏற்பட்டதாகும். தொடர்ச்சியாக, 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 3.12% சிறிதளவு உயர்ந்துள்ளது.


வரைபடம் 17: இதர மாநகராட்சிகள் – பணியாளர் செலவினம்




**ii) இயக்கம் (ம) பராமரிப்பு செலவினம்:**

இயக்கம் (ம) பராமரிப்பு செலவினமானது 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 12.15% உயர்ந்தும், 2018–19 ஆம் ஆண்டைவிட 2019–20 ஆம் ஆண்டில் 7.09% உயர்ந்தும், தொடர்ச்சியாக, 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 5.40% உயர்ந்துள்ளது. இயக்கம் (ம) பராமரிப்பு செலவினத்தை ஒட்டுமொத்தமாக ஒப்பிடும்போது தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனைக் குறைக்க வாகன பராமரிப்பு செலவினத்தை குறைப்பதாலும் மற்றும் காலாவதியான வாகனங்களை கழிவு செய்து புதிய வாகனம் கொள்முதல் செய்வதாலும் கட்டுப்படுத்தலாம்.


வரைபடம் 18: இதர மாநகராட்சிகள் – இயக்கம் (ம) பராமரிப்பு செலவினம்



**iii) நிர்வாக செலவினம்:**

நிர்வாக செலவினமானது 2017–18 ஆம் ஆண்டை விட 2018–19 ஆம் ஆண்டில் 7.49% குறைந்துள்ளது. ஆனால், 2018–19 ஆம் ஆண்டை விட 2019–20 ஆம் ஆண்டில் 52.97% உயர்ந்துள்ளது. மேலும், 2019–20 ஆம் ஆண்டை விட 2020–21 ஆம் ஆண்டில் 6.53% சிறிதளவு குறைந்துள்ளது.


வரைபடம் 19: இதர மாநகராட்சிகள் – நிர்வாக செலவினம்




**iv) இதர செலவினங்கள்:**

'இதர செலவினங்கள்' என்பது திட்ட செலவுகள், நிதி செலவுகள், தேய்மானம் மற்றும் பல்வகை செலவினங்கள் ஆகியவை உள்ளடக்கியதாகும்.

வரைபடம் 20: இதர மாநகராட்சிகள் – இதர செலவினம்




இதர செலவினமானது 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 35.95% உயர்ந்துள்ளது. ஆனால், 2018–19 ஆம் ஆண்டைவிட 2019–20 ஆம் ஆண்டில் 0.27% சிறிதளவு குறைந்துள்ளது. மேலும், 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 21.76% உயர்ந்துள்ளது.

## 2.3. நகராட்சிகள்:


2.3.1. 2020–21 ஆம் ஆண்டிற்கான மொத்த வரவினம் முந்தைய ஆண்டினை விட ரூ.5620.19 இலட்சம்(261955.10 – 267575.29) உயர்ந்துள்ளது மற்றும் மொத்த செலவினம் முந்தைய ஆண்டினை விட ரூ.24420.22 இலட்சம் (336101.55–360521.77) அதிகரித்துள்ளது. முந்தைய ஆண்டில் ரூ.135383.72 இலட்சங்கள் இருந்த நிலையில் 2020–21 ஆம் ஆண்டிற்கான கடன் பொறுப்பானது ரூ.136161.89 இலட்சம் ஆகும்.

2.3.2. ஒட்டு மொத்தத்தில் நிதிநிலையானது 2020–21 ஆம் ஆண்டு பற்றாக்குறை ரூ.92946.48 இலட்சம் என இருப்பினும் ரூ.165109.66 இலட்சங்கள் திரண்ட பற்றாக்குறையில் உள்ளது. வசூலிக்கப்பட வேண்டிய நிலுவை வரி ரூ.100474.19 இலட்சங்கள் உள்ள நிலையில் நிதிநிலையை மேம்படுத்துவதற்கு நிர்வாக தரப்பில் எவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்படாமலும் மற்றும் வரவாக்கப்படாத முன்பணத் தொகை ரூ.54870.15 இலட்சங்கள் உள்ள நிலையில் நிர்வாகத்தின் அலட்சியப் போக்கைக் காட்டுகிறது.

2.3.3. ஆண்டு கணக்குகளின்படி, 121 நகராட்சிகளில் 12 நகராட்சிகள் ஆண்டு உபரியிலும் எஞ்சிய 109 நகராட்சிகள் ஆண்டு பற்றாக்குறையிலும் முடிவதைக் காட்டுகிறது. அதேபோன்று ஆண்டு இறுதியில் 31.03.2021 அன்று 28 நகராட்சிகள் திரண்ட உபரியையும் 93 நகராட்சிகள் திரண்ட பற்றாக்குறையையும் கொண்டுள்ளன.

நகராட்சிகளின் 2017–18 முதல் 2020–21 வரையிலான காலத்திற்கு வரவினம் மற்றும் செலவினம் பின்வரும் பட்டை வரைபடங்கள் மூலம் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன.


வரைபடம் 21: நகராட்சிகள் – வரவினங்கள்



**i) சொத்துவரி:**

சொத்து வரி கேட்பு 2017-18 ஆம் ஆண்டைவிட 2018-19 ஆம் ஆண்டில் 22.13% குறைந்தும், 2018-19 ஆம் ஆண்டைவிட 2019-20 ஆம் ஆண்டில் 33.32% குறைந்தும், தொடர்ச்சியாக 2019-20 ஆம் ஆண்டைவிட 2020-21 ஆம் ஆண்டில் 9.05% குறைந்தும் உள்ளது.


வரைபடம் 22: நகராட்சிகள் – சொத்து வரி




**ii) இதர வரியினங்கள்:**

'இதர வரிகள்' என்பது தொழில் வரி, கேளிக்கை வரி, விளம்பர வரி, நிறும வரி மற்றும் மர வரி ஆகியவை உள்ளடக்கியதாகும்.

வரைபடம் 23: நகராட்சிகள் – இதர வரியினங்கள்





இதர வரியினங்கள் வருவாயில் 2017-18 ஆம் ஆண்டைவிட 2018-19 ஆம் ஆண்டில் 31.51% உயர்ந்தும், 2018-19 ஆம் ஆண்டைவிட 2019-20 ஆம் ஆண்டில் 16.49% உயர்ந்தும் உள்ளது. ஆனால், 2019-20 ஆம் ஆண்டைவிட 2020-21 ஆம் ஆண்டில் 10.65% குறைந்துள்ளது.

**iii) அரசு மானியங்கள்:**

அரசு மானியம் பெறப்பட்டதில் 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 42.69% குறைந்தும், 2018–19 ஆம் ஆண்டைவிட 2019–20 ஆம் ஆண்டில் 15.14% குறைந்தும், தொடர்ச்சியாக 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 14.34% குறைந்துள்ளது.


வரைபடம் 24: நகராட்சிகள் – அரசு மானியங்கள்




**iv)இதர வரவினம்:**


'இதர வரவினம்' என்பது ஒதுக்கப்பட்ட வருவாய் பகிர்மான நிதி, சேவைக் கட்டணம், விற்பனை மற்றும் வாடகை வரவுகள் காலங்கடந்த வைப்புத் தொகை மற்றம் தொகை பிடித்தம் ஆகியவை உள்ளடக்கியதாகும்.

வரைபடம் 25: நகராட்சிகள் – இதர வரவினங்கள்




இதர வரவினமானது 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 2149.10% அசாதாரணமாக உயர்ந்துள்ளது. மேலும், 2018–19 ஆம் ஆண்டைவிட 2019–20 ஆம் ஆண்டில் 16.62% குறைந்துள்ளது. ஆனால், 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 13.64% உயர்ந்துள்ளது.


வரைபடம் 26: நகராட்சிகள் – செலவினம்




**<u>i) பணியாளர் செலவினம்:</u>**

பணியாளர் செலவினமானது 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 25.87% குறைந்துள்ளது. ஆனால், 2018–19 ஆம் ஆண்டைவிட 2019–20 ஆம் ஆண்டில் 7.88% உயர்ந்துள்ளது. இது ஊதியக்குழு அமுல்படுத்தப்பட்டதால் ஏற்பட்டதாகும். தொடர்ச்சியாக, 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 3.48% சிறிதளவு உயர்ந்துள்ளது.


வரைபடம் 27: நகராட்சிகள் – பணியாளர் செலவினம்



**ii) இயக்கம் (ம) பராமரிப்பு செலவினம்:**

இயக்கம் (ம) பராமரிப்பு செலவினமானது 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 251.35% அபரிதமாக உயர்ந்தும், 2018–19 ஆம் ஆண்டைவிட 2019–20 ஆம் ஆண்டில் 6.03% உயர்ந்தும், தொடர்ச்சியாக, 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 2.12% உயர்ந்துள்ளது.


வரைபடம் 28: நகராட்சிகள் – இயக்கம் (ம) பராமரிப்பு செலவினம்




**iii) நிர்வாக செலவினம்:**

நிர்வாக செலவினமானது 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 79.29% குறைந்தும், 2018–19 ஆம் ஆண்டைவிட 2019–20 ஆம் ஆண்டில் 12.32% குறைந்தும், தொடர்ச்சியாக 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 21.37% குறைந்துள்ளது.


வரைபடம் 29: நகராட்சிகள் – சொத்து வரி



**iv) இதர செலவினங்கள்:**

'இதர செலவினங்கள்' என்பது திட்ட செலவுகள், நிதி செலவுகள், தேய்மானம் மற்றும் பல்வகை செலவினங்கள் ஆகியவை உள்ளடக்கியதாகும்.

வரைபடம் 30: நகராட்சிகள் – இதர செலவினங்கள்




இதர செலவினமானது 2017–18 ஆம் ஆண்டைவிட 2018–19 ஆம் ஆண்டில் 19445.15% அசாதாரணமாக உயர்ந்துள்ளது. மேலும், 2018–19 ஆம் ஆண்டைவிட 2019–20 ஆம் ஆண்டில் 2.27% உயர்ந்துள்ளது. மேலும், 2019–20 ஆம் ஆண்டைவிட 2020–21 ஆம் ஆண்டில் 19.45% உயர்ந்துள்ளது.

## 2.4. பேரூராட்சிகள்:

அட்டவணை 6: முந்தைய ஆண்டுகளுக்கான நிதி நிலைமையுடன் ஒப்பீடு

| வ. எண் | விவரங்கள் | 2017–18 | 2018–19 | 2019–20 | 2020–21 |
|---|---|---|---|---|---|
| | | (ரூ. இலட்சங்களில்) | | | |
| 1) | மொத்த வரவினம் | 200423.59 | 246065.08 | 220701.47 | 204287.97 |
| 2) | மொத்த செலவினம் | 242109.01 | 277831.14 | 297969.02 | 324033.01 |
| 3) | நிகர ஆண்டு பற்றாக்குறை | –41685.42 | –31766.06 | –77267.55 | –119745.04 |
| 4) | நிகர திரண்ட பற்றாக்குறை | 147513.22 | 262250.39 | 328226.51 | 440770.34 |
| 5) | வசூலிக்கப்படாத வரிகள் மற்றும் கட்டணங்கள் | 19647.64 | 24540.71 | 29098.34 | 30450.03 |
| 6) | முன்பணம் வரவாக்கப்பட வேண்டியவை | 23299.44 | 28681.18 | 28435.73 | 27508.87 |
| 7) | கடன்கள் செலுத்தப்பட வேண்டியவை | 14195.78 | 13956.67 | 13218.32 | 13875.93 |

2.4.1. 2020–21 ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதிநிலையானது ரூ.119745.04 இலட்சங்கள் ஆண்டு நிகர பற்றாக்குறையும் அதனால் ரூ.440770.34 இலட்சங்கள் திரண்ட பற்றாக்குறையும் உருவாகியுள்ளதையும் காட்டுகிறது. வசூலிக்கப்படாமல் நிலுவையாக உள்ள வரி மற்றும் கட்டணங்கள் தொகை ரூ.30450.03 இலட்சங்கள் ஆகும். முன்பணங்கள் வரவாக்கப்பட வேண்டிய தொகை ரூ.27508.87 இலட்சங்கள் ஆகும்.

2.4.2. முந்தைய ஆண்டுகளை ஒப்பிடுகையில் வரவாக்கப்பட வேண்டிய முன்பணங்கள் தவிர இதர இனங்கள் அதிகரித்துள்ளது. சொந்த வருவாய் ஆதாரங்களைப் பெருக்க, வசூலிக்கப்படாமல் நிலுவையாக உள்ள வரிகளை வசூலிக்கத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வரவாக்கப்பட வேண்டிய முன்பணங்களை ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2.4.3. முந்தைய ஆண்டு வரவினம் ரூ.220701.47 இலட்சத்தைக் காட்டிலும், நடப்பாண்டு மொத்த வரவினம் ரூ.16413.50 இலட்சங்கள் (220701.47–204287.97) குறைந்துள்ளது. மேலும், முந்தைய ஆண்டு செலவு ரூ.297969.02 இலட்சத்தைக் காட்டிலும் நடப்பாண்டு செலவினம் ரூ.26063.99 இலட்சங்கள் (297969.47–324033.01) அதிகரித்துள்ளது.


2.4.4. முந்தைய ஆண்டு கடன் பொறுப்பு ரூ.13218.32 இலட்சத்தைக் காட்டிலும் ரூ.657.61 இலட்சம் (13218.32–13875.93) அதிகரித்துள்ளது.

2.4.5. மொத்தமுள்ள 528 பேரூராட்சிகளில் வரவினம் மற்றும் செலவின அறிக்கையில் 513 பேரூராட்சிகள் ஆண்டு பற்றாக்குறையிலும், 15 பேரூராட்சிகள் ஆண்டு உபரியிலும் உள்ளன.

அதேபோன்று 31.03.2021 ஆண்டு முடிவில் 35 பேரூராட்சிகள் திரண்ட உபரியிலும், 493 பேரூராட்சிகள் திரண்ட பற்றாக்குறையிலும் உள்ளன.

2.4.6. 2017–18–ம் ஆண்டு முதல் 2020–21–ம் ஆண்டு வரை வரையிலான காலங்களில் பேரூராட்சிகளின் வரவினம் மற்றும் செலவினங்கள் பின்வரும் பட்டை வரைபடங்கள் மூலம் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன.


வரைபடம் 31: பேரூராட்சிகள் – வரவினம்



**i) சொத்து வரி:**

சொத்து வரி கேட்பு குறித்த 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டு ஒப்பிடுகையில் சொத்துவரி பொது சீராய்வின் காரணமாக 60.52% உயர்ந்துள்ளது. சொத்து வரி பொது சீராய்வு திரும்ப பெறப்பட்டதன் விளைவாக 2018–19 ஆம் ஆண்டினை ஒப்பிடுகையில் 2019–20 ஆம் ஆண்டில் 22.67% குறைந்துள்ளது. இது 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டு ஒப்பீட்டில் 2.42 % மேலும் குறைந்துள்ளது.


வரைபடம் 32: பேரூராட்சிகள் – சொத்துவரி




**ii) இதர வரிகள்:**

சொத்து வரி தவிர்த்து மற்ற வரிகள் அனைத்தும் இதர வரிகள் ஆகும். பேரூராட்சிகளின் இதர வரிகள் 2017–18 & 2018–19 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 22.07% உயர்ந்தும், 2018–19 & 2019–20 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 3.72% உயர்ந்தும், 2019–20 & 2020–21 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 4.51 % உயர்ந்தும் காணப்படுகிறது.


வரைபடம் 33: பேரூராட்சிகள் – இதர வரிகள்



**iii) அரசு மானியங்கள்:**

பேரூராட்சிகளின் அரசு மானிய வரவினங்கள் 2017–18 & 2018–19, 2018–19 & 2019–20 மற்றும் 2019–20 & 2020–21 ஆகிய காலங்களை ஒப்பிடுகையில் முறையே 69.76%, 11.55% மற்றும் 28.93 % என்ற வீதத்தில் குறைந்துள்ளன.


வரைபடம் 34: பேரூராட்சிகள் – அரசு மானியம்





**iv) இதர வரவினம்:**

இது அபராதங்கள், கட்டணங்கள், சேவை கட்டணங்கள் முதலான வரி மற்றும் வரியில்லா இனங்களை கொண்டதாகும். பேரூராட்சிகளின் இதர வரவினங்கள் 2017–18 & 2018–19 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 243% உயர்ந்தும், 2018–19 & 2019–20 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 9.14% குறைந்தும், 2019–20 & 2020–21 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 4.09 % குறைந்தும் காணப்படுகிறது.

வரைபடம் 35: பேரூராட்சிகள் – இதர வரவினம்




வரைபடம் 36: பேரூராட்சிகள் – செலவினம்




**I) பணியாளர் ஊதிய செலவினம்:**

பேரூராட்சிகளின் பணியாளர் ஊதியம் 2017–18 & 2018–19 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 17.59% உயர்ந்தும், 2018–19 ஆம் ஆண்டினை ஒப்பிடுகையில் 2019–20 ஆம் ஆண்டில் 3.99% என ஓரளவு அதிகரித்தும் உள்ளது. மேலும், 2019–20 & 2020–21 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 8.82 % குறைந்தும் காணப்படுகிறது.


வரைபடம் 37: பேரூராட்சிகள் – பணியாளர் ஊதிய செலவினம்



**ii) இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவுகள்:**

பேரூராட்சிகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவுகள் 2017–18 & 2018–19 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 22.74% உயர்ந்தும், 2018–19 ஆம் ஆண்டினை ஒப்பிடுகையில் 2019–20 ஆம் ஆண்டில் 3.12 % என ஓரளவு உயர்ந்தும் உள்ளது. மேலும், 2019–20 & 2020–21 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 9.28 % உயர்ந்தும் காணப்படுகிறது.


வரைபடம் 38: பேரூராட்சிகள் – இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவுகள்




**iii) நிர்வாக செலவினம்:**

பேரூராட்சிகளின் நிர்வாக செலவினம் 2017–18 & 2018–19 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 16.44% உயர்ந்தும், 2018–19 & 2019–20 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 17.46 % குறைந்தும் மற்றும் 2019–20 ஆம் ஆண்டினை ஒப்பிடுகையில் 2020–21 ஆம் ஆண்டில் 3.57 % என ஓரளவு அதிகரித்தும் காணப்படுகிறது.


வரைபடம் 39: பேரூராட்சிகள் – நிர்வாக செலவினம்



**iv) இதர செலவினம்:**

பேரூராட்சிகளின் இதர செலவினம் 2017–18 & 2018–19 மற்றும் 2018–19 & 2019–20 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் முறையே 7.01 % மற்றும் 17.59% உயர்ந்து காணப்படுகின்றன. 2019–20 & 2020–21 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 17.14 % உயர்ந்தும் காணப்படுகிறது.

வரைபடம் 40: பேரூராட்சிகள் – இதர செலவினம்





**2.5. மாவட்ட ஊராட்சிகள்:**

2.5.1. மாநில நிதி ஆணையத்தால் இந்நிதியாண்டில் அனுமதிக்கப்பட்ட மான்யத் தொகை ரூ.29915.16 இலட்சங்களில் ரூ.24478.71 இலட்சங்கள் விடுவிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பயன்படுத்தப்படாத மானியங்கள் கடந்த ஆண்டுவரை திரண்ட தொகை ரூ.392.55 இலட்சங்கள் அரசுக் கணக்குத் தலைப்பில் மீள செலுத்தப்பட வேண்டும் என தணிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டது. மானியம் மீது பெறப்பட்ட வட்டித் தொகை ரூ.825.76 இலட்சங்கள் அரசுக் கணக்குத் தலைப்பில் செலுத்தப்படவில்லை எனவும் தணிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளது.

2.5.2. 2017–18 முதல் 2020–21 ஆம் ஆண்டு வரையிலான மாவட்ட ஊராட்சிகளின் வரவினம் மற்றும் செலவினங்களின் ஒப்பீடு மற்றும் பட்டை விளக்கப்படம்

வரைபடம் 41: மாவட்ட ஊராட்சிகள் – வரவினம் மற்றும் செலவினம்







119-3—4a

**i) வரவினம்:**

மாவட்ட ஊராட்சிகளின் 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் வரவினம் 328.40% உயர்ந்தும், 2018–19 மற்றும் 2019–20 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 36.41% குறைந்தும், 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 9.74% குறைந்தும் காணப்படுகிறது.


வரைபடம் 42: மாவட்ட ஊராட்சிகள் – வரவினம்




**ii) செலவினம்:**

மாவட்ட ஊராட்சிகளின் 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் செலவினம் 322.70% உயர்ந்தும், 2018–19 மற்றும் 2019–20 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 17.10% உயர்ந்தும், 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 35.37% குறைந்தும் காணப்படுகிறது.

வரைபடம் 43: மாவட்ட ஊராட்சிகள் – செலவினம்




## 2.6. ஊராட்சி ஒன்றியங்கள்:

2020–21 ஆம் நிதியாண்டில் அரசு மான்யமாக பெறப்பட்ட ரூ.8930.42 கோடியில் ரூ.3373.12 கோடி வருவாய் செலவினமாகவும், ரூ.6584.62 கோடி மூலதன செலவினமாகவும் மேற்கொள்ளப்பட்டது. இது மொத்த செலவினத்தில் 66.13% என்பது புதிய சொத்துக்கள் உருவாக்குவதில் குறிப்பிட்ட இலக்கை எட்டவில்லை என்பதை காண்பிக்கின்றது.

2017–18 முதல் 2020–21 ஆம் ஆண்டு வரையிலான ஊராட்சி ஒன்றியங்களின் வரவினங்களின் ஒப்பீடு மற்றும் பட்டை விளக்கப்படம்.


வரைபடம் 44: ஊராட்சி ஒன்றியங்கள் – வரவினம்




### i) சொந்த வருவாய்:

ஊராட்சி ஒன்றியங்களின் 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் சொந்த வருவாய் 8.64% உயர்ந்தும், 2018–19 மற்றும் 2019–20 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 5.07% உயர்ந்தும், 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 47.81% குறைந்தும் காணப்படுகிறது.


வரைபடம் 45: ஊராட்சி ஒன்றியங்கள் – சொந்த வருவாய்



**ii) ஒப்படைக்கப்பட்ட வருவாய்:**

ஊராட்சி ஒன்றியங்களில் 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் ஒப்படைக்கப்பட்ட வருவாய் 19.54% குறைந்தும், 2018–19 மற்றும் 2019–20 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 158.83% உயர்ந்தும், 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 41.29% குறைந்தும் காணப்படுகிறது.


வரைபடம் 46: ஊராட்சி ஒன்றியங்கள் – ஒப்படைக்கப்பட்ட வருவாய்





**iii) அரசு மானியம்:**

ஊராட்சி ஒன்றியங்களின் 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் அரசு மான்யம் 48.38% உயர்ந்தும், 2018–19 மற்றும் 2019–20 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 3.66% குறைந்தும், 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 21.08% உயர்ந்தும் காணப்படுகிறது.

வரைபடம் 47: ஊராட்சி ஒன்றியங்கள் – அரசு மானியம்




வரைபடம் 48: ஊராட்சி ஒன்றியங்கள் – செலவினம்




**i) வருவாய் செலவினங்கள்:**

ஊராட்சி ஒன்றியங்களின் 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் வருவாய் செலவுகள் 14.35% உயர்ந்தும், 2018–19 மற்றும் 2019–20 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 9.20% உயர்ந்தும், 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 2.56% உயர்ந்தும் காணப்படுகிறது.


வரைபடம் 49: ஊராட்சி ஒன்றியங்கள் – வருவாய் செலவினங்கள்



**ii) மூலதன செலவினங்கள்:**

ஊராட்சி ஒன்றியங்களின் 2017–18 மற்றும் 2018–19 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் மூலதன செலவுகள் 10.73% உயர்ந்தும், 2018–19 மற்றும் 2019–20 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 2.21% உயர்ந்தும், 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டில் 10.19% உயர்ந்தும் காணப்படுகிறது.

வரைபடம் 50: ஊராட்சி ஒன்றியங்கள் – மூலதன செலவினங்கள்




அட்டவணை 7: நிதி நிலை கடந்த ஆண்டுகளுடன் ஓர் ஒப்பீடு– ஊராட்சி ஒன்றியங்கள்

| வ. எண் | விவரம் | 2017–18 | 2018–19 | 2019–20 | 2020–21 |
|---|---|---|---|---|---|
| | | ரூபாய் கோடியில் | | | |
| வருவாய் | | | | | |
| 1) | சொந்த வருவாய் | 731.93 | 795.24 | 835.60 | 436.13 |
| 2) | ஒதுக்கப்பட்ட வருவாய் | 505.88 | 407.00 | 1053.45 | 618.43 |
| 3) | அரசு மான்யம் | 5159.39 | 7655.75 | 7375.34 | 8930.42 |
| | மொத்தம் | 6397.20 | 8857.99 | 9264.39 | 9984.98 |
| செலவினம் | | | | | |
| 1) | வருவாய் செலவினம் | 2633.77 | 3011.72 | 3288.86 | 3373.12 |
| 2) | மூலதன செலவினம் | 5279.55 | 5846.27 | 5975.53 | 6584.62 |
| | மொத்தம் | 7913.32 | 8857.99 | 9264.39 | 9957.74 |
| மொத்த செலவினத்தில் மூலதன செலவின் சதவீதம் | | 67 % | 65.99 % | 64.49% | 66.13% |

**2.7. கிராம ஊராட்சிகள் (22%):**

2.7.1. கிராம ஊராட்சிகளின் வரவு – செலவு திட்டம், நிர்வாக அமைப்பு, நிதி ஆதாரம், கிராம ஊராட்சியில் பராமரிக்கப்படும் கணக்குகள் மற்றும் தணிக்கை ஏற்பாடு ஆகிய விவரங்களுடன் அத்தியாயம்-5இல் தணிக்கையில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் விபரமும் அளிக்கப்பட்டுள்ளது.

2.7.2. மொத்தமுள்ள 12525 கிராம ஊராட்சிகளில் 22% மட்டுமே ஆண்டுதோறும் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுழற்சி முறையில் ஐந்து ஆண்டுகளில் 12525 கிராம ஊராட்சிகளும் தணிக்கைக்கு உட்படுத்தப்படும்.

**2.8. பல்கலைக்கழகங்கள்:**

2.8.1. 2020–21 ஆம் ஆண்டு 23 பல்கலைக் கழகங்களின் மொத்த வரவு–செலவு முறையே ரூ.959612.01 இலட்சங்கள் மற்றும் ரூ.987886.81 இலட்சங்கள் ஆகும்.

2.8.2. தணிக்கைக் கட்டணம் தணிக்கை செய்யப்படும் அலுவலர்களின் பணியமைப்புக்கான உண்மைச் செலவின அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. அண்ணாமலை பல்கலைக்கழகம் மற்றும் சென்னை பல்கலைக்கழகத்திற்கு மட்டும் தணிக்கைக் கட்டணம் சராசரிக் கட்டணம் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

2.8.3. 2020–21 ஆம் ஆண்டில் 23 பல்கலைக்கழகங்களின் தணிக்கைக் கட்டண கேட்புத் தொகை ரூ.471.44 இலட்சங்கள் ஆகும்.

**2.9. பொது நூலகங்கள்:**

2.9.1. 2020–21 ஆம் ஆண்டில் 32 மாவட்ட நூலக ஆணைக்குழுவின் வரவு–செலவு முறையே ரூ.20089.00 இலட்சங்கள் மற்றும் ரூ.19445.94 இலட்சங்கள் ஆகும்.

2.9.2. சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு மட்டும் தணிக்கைக் கட்டணம் தணிக்கை அலுவலர் பணியமைப்புக்கான உண்மைச் செலவின அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. இதர மாவட்ட நூலக ஆணைக்குழுக்களின் தணிக்கை, தணிக்கைக் கட்டணமின்றி மேற்கொள்ளப்படுகிறது. 2020–21 ஆம் ஆண்டில் 32 மாவட்ட நூலக ஆணைக்குழுக்களின் தணிக்கைக் கட்டண கேட்புத் தொகை ரூ.2.11 இலட்சங்கள் ஆகும்.

**2.10. வேளாண் விற்பனைக் குழுக்கள்:**

2.10.1. 2020–21 ஆம் ஆண்டில் 28 வேளாண் விற்பனைக் குழுக்கள், 3 வேளாண் பொறியியல் பிரிவு மற்றும் ஒரு வேளாண் விற்பனை வாரியம் ஆகியவற்றின் மொத்த வரவு–செலவு முறையே ரூ.99512.01 இலட்சங்கள் மற்றும் ரூ.104527.26 இலட்சங்கள் ஆகும்.

2.10.2. 2020–21 ஆம் ஆண்டில் வேளாண் விற்பனைக் குழுக்களின் தணிக்கைக் கட்டணமாக செலவினத்தில் 2% வசூலிக்கப்பட்ட தொகை ரூ.503.12 இலட்சங்கள் ஆகும்.

**2.11. உள்ளூர் திட்டக் குழுமங்கள்:**

2020-21 ஆம் ஆண்டில் 29 உள்ளூர் திட்டக் குழுமங்களின் வரவு-செலவு முறையே ரூ.25511.20 இலட்சங்கள் மற்றும் ரூ.24826.65 இலட்சங்கள் ஆகும். உள்ளூர் திட்டக்குழுமங்களின் தணிக்கை, தணிக்கைக் கட்டணமின்றி மேற்கொள்ளப்படுகிறது.

**2.12. தணிக்கைச் சான்று:**

2020-21 ஆம் நிதியாண்டில் 4039 நிறுவனங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை சட்ட விதிகள் 2016ன் விதி 10(7)ன்படி தணிக்கை நிறுவனங்களின் ஆண்டுக்கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு அட்டவணை-8இல் குறிப்பிட்டவாறு தணிக்கைச்சான்று வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 8: தணிக்கைச் சான்று வழங்கப்பட்ட விவரம்

| வ. எண் | நிறுவனங்கள் | நிறுவனங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | குறையின்மைச் சான்றிதழ் | குறையுள்ளது என்பதற்கான சான்றிதழ் | மறுப்பு துறப்பு சான்றிதழ் | முரண் தெரிவிப்பு சான்றிதழ் |
| 1) நகர்புற உள்ளாட்சி நிறுவனங்கள் | | | | | | |
| | மாநகராட்சிகள் | 15 | 2 | 11 | 0 | 1 |
| | நகராட்சிகள் | 121 | 49 | 72 | 1 | 0 |
| | பேரூராட்சிகள் | 528 | 248 | 259 | 0 | 21 |
| 2) ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள் | | | | | | |
| | மாவட்ட ஊராட்சிகள் | 32 | 24 | 8 | 0 | 0 |
| | ஊராட்சி ஒன்றியங்கள் | 388 | 201 | 187 | 0 | 0 |
| | கிராம ஊராட்சிகள் (20%+2%) | 2831 | 1955 | 876 | 0 | 0 |
| | பல்கலைக் கழகங்கள் | 23 | 5 | 14 | 4 | 0 |
| 3) | மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் | 32 | 20 | 11 | 0 | 1 |
| 4) | மாவட்ட வேளாண் விற்பனைக் குழுக்கள் | 32 | 22 | 10 | 0 | 0 |
| 5) | உள்ளூர் திட்டக் குழுமங்கள் | 29 | 18 | 11 | 0 | 0 |
| 6) | ராஜவேத பாடசாலை | 1 | 1 | 0 | 0 | 0 |
| 7) | அரசர் சத்திரம் | 1 | 0 | 1 | 0 | 0 |
| 8) | தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் | 1 | 0 | 1 | 0 | 0 |
| 9) | உள்ளாட்சி நிதியம் | 5 | 0 | 4 | 0 | 1 |
| | மொத்தம் | 4039 | 2545 | 1465 | 5 | 24 |

# அத்தியாயம் – III

தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 ஓர் அறிமுகம், தணிக்கை நடைமுறை, தணிக்கைக்குட்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் முக்கிய தணிக்கை தடைகளின் சுருக்கம்

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

**3.1. தோற்றம்:**

உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை தொன்மையான வரலாறு படைத்த துறை ஆகும். இத்துறை 1849 ஆம் ஆண்டில் முதலில் மாநில அளவில் மாநில கணக்காயர் (Account General) நிர்வாகத்தின் கீழும், மாவட்ட அளவில் Local Boards கட்டுப்பாட்டிலும் இயங்கி வந்துள்ளது.

1844 ஆம் ஆண்டின் Madras Local Board சட்டத்தின் படி 1880 ஆம் ஆண்டு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை உருவாக்கப்பட்டது.


அரசாணை எண்.609, நிதித் துறை, நாள்.22.03.1880–இன்படி தனித் துறையாக 1880–இல் ஏற்படுத்தப்பட்டது. அரசாணை எண்.514, நிதித் துறை, நாள்.10.03.1885–இன் படி 1885 ஆம் ஆண்டு முதல் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களது கட்டுப்பாட்டில் இயங்கத் தொடங்கி 1920 முடிய செயல்பட்டு வந்துள்ளது.

1920 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட வல்லுநர்களது பரிந்துரையின் அடிப்படையில் அரசாணை (பல்வகை) எண்.125, நிதித் துறை, நாள்.10.02.1921–இன் படி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நிதித்துறையின் கீழ் இயங்க உத்திரவிடப்பட்டுள்ளது. அரசாணை எண்.1016, நிதித் துறை, நாள்.27.11.1922–இன் படி இத்துறையின் துறைத் தலைவராக ஆராய்வாளர் நியமிக்கப்பட்டு அவரது கட்டுப்பாட்டில் மாநில அளவில் தனித்துறையாக இயங்கி வருகிறது.

அரசாணை (பல்வகை) எண். 848, நிதி (உள்ளாட்சி)த் துறை, நாள்.09.11.1995–இன்படி "ஆராய்வாளர்" என்ற பெயர் "இயக்குநர்" உள்ளாட்சி நிதித் தணிக்கை எனவும், ஆராய்வாளர் அலுவலகம் என்ற பெயர் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரகம் எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**3.2. நிர்வாக அமைப்பு:**

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை பின்வரும் நிர்வாக அமைப்பைக் கொண்டு செயல்பட்டுவருகிறது.




**3.3. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் – 2014:**

3.3.1. உள்ளாட்சி நிதியங்களின் தணிக்கையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான தணிக்கையினை உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் மேற்கொள்வதற்கும் அவருக்கு அதிகாரம் அளிப்பதற்கு வகை செய்வதற்கான சட்டமொன்றினை இயற்றுவதற்கு இரண்டாவது மாநில நிதிக் குழு தனது பரிந்துரையில் தெரிவித்துள்ளது. இந்த பரிந்துரையினை செயல்படுத்தும் பொருட்டு 2014 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டு சட்டமன்றத்தில் அளிக்கப்பட்டது. பின்னர் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 என தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் சட்டமாக இயற்றப்பட்டுள்ளது.

3.3.2. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014–க்குரிய விதிமுறைகள் அரசாணை நிலை எண்.240, நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை, நாள்:24.08.2016–ன் படி வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகள் தமிழ்நாடு அரசின் அரசிதழில் 24.08.2016 அன்று வெளியீடு செய்யப்பட்டுள்ளது. இத்துறையினால் 2019–20 ஆம் ஆண்டு தணிக்கை முடிக்கப்பட்டு அதன் தொகுப்பு தணிக்கை அறிக்கையை 2014 ஆம் வருட உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் பிரிவு 20–ன் படி தமிழக சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

**3.3.3. மாநில கணக்காயரின் தொழில்நுட்ப வழிகாட்டுதல்:**

உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் நிதி மீதான தணிக்கை இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரின் சட்டம் 1971–இன் பிரிவு 20 கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரால் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநருக்கு தொழில்நுட்ப வழிகாட்டல் மற்றும் ஆதரவு வழங்கப்படுகிறது. (Technical Guidance and Support)

உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 பிரிவு 15(3) மற்றும் அரசாணை எண்.93, நிதி(FCIV)த் துறை, நாள்.28.03.2003–இல் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால் மேற்கொள்ளப்படும் தணிக்கையின் போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள், அணுகுமுறைகள் மற்றும் வெளியிடப்படும் தணிக்கை அறிக்கைகளில் இடம் பெறும் தணிக்கைத் தடைகளின் தன்மை அவற்றில் இடம் பெறத்தக்க விவரங்கள் குறித்தும் தணிக்கை அறிக்கையினை வலுப்படுத்தும் விதமாகவும் மாநில கணக்காயரின் தொழில்நுட்ப வழிகாட்டுதல்களைப் பெற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாநில கணக்காயர் கடிதம் எண். Pr.AG (G&SSA) SS11 / LB 11 Unit 11/ 14–15/219, நாள்.23.10.2014 இல் வழிகாட்டுதல்கள் அளிக்கப்பட்டன.

**3.4. தணிக்கை நடைமுறை:**

தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் உடனிகழ் தணிக்கை அலகு தோற்றுவிக்கப்பட்டு 15.09.2000 முதல் செயல்பட்டு வருகிறது. சென்னை நீங்கலாக 36 மாவட்டங்களில் 116 உடனிகழ் தணிக்கை அலகுகள் செயல்படுகின்றன. சிறப்பு நிலை நகராட்சிகள் அனைத்திலும் உடனிகழ் தணிக்கை அலகு துவக்கப்பட்டு தணிக்கை நடைபெற்று வருகிறது.

மாநகராட்சிகள் மற்றும் 13 பல்கலைக்கழகங்களிலும் உடனிகழ் தணிக்கை துவக்கப்பட்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவட்ட ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சிகள் மற்றும் இதர தணிக்கை நிறுவனங்களில் மாவட்ட உதவி இயக்குநர் அலகில் பணிபுரியும் தணிக்கையாளர்களைக் கொண்டு ஆண்டு தணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிராம ஊராட்சிகளின் தணிக்கையினை பொறுத்தமட்டில் ஊராட்சி ஒன்றிய தணிக்கையினை மேற்கொள்ளும் தணிக்கையாளர்களைக் கொண்டு மொத்த கிராம ஊராட்சிகளில் ஓராண்டிற்கு 20% என்ற அடிப்படையில் சுழற்சி முறையில் 5 ஆண்டுகளுக்குள் அனைத்து கிராம ஊராட்சிகளின் சோதனை தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை தவிர்த்து ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரால் ஆண்டுதோறும் தேர்வு செய்து தெரிவிக்கப்படும் 2% கிராம ஊராட்சிகளின் தணிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3.5. தணிக்கை மேற்கொள்ளும் நிறுவனங்கள்:**

3.5.1. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால் பின்வரும் நிறுவனங்களின் தணிக்கை ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அட்டவணை 9 : தணிக்கை நிறுவனங்களின் விவரம்

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1) | மாநகராட்சிகள் | 15 |
| 2) | நகராட்சிகள் | 121 |
| 3) | பேரூராட்சிகள் | 528 |
| 4) | மாவட்ட ஊராட்சிகள் | 32 |
| 5) | ஊராட்சி ஒன்றியங்கள் | 388 |
| 6) | பல்கலைக்கழகங்கள் | 23 |
| 7) | மாவட்ட வேளாண் விற்பனை குழு | 26 |
| 8) | தமிழ்நாடு வேளாண் விற்பனைக் கழக பொறியியல் பிரிவு | 03 |
| 9) | தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் | 01 |
| 10) | சாத்தான்காடு இரும்பு விற்பனை குழு | 01 |
| 11) | மாவட்ட நூலக ஆணைக்குழு | 32 |
| 12) | கோயம்பேடு மொத்த காய்கறி விற்பனைக் குழு | 01 |
| 13) | இதர நிறுவனங்கள் | 08 |
| 14) | உள்ளூர் திட்ட குழுமம் | 29 |
| 15) | கிராம ஊராட்சிகள் சோதனை தணிக்கை (12525 ஊராட்சிகளில் ஒவ்வொரு ஆண்டும் 20% + 2%) | 2831 |
| | **கூடுதல்** | 4039 |

**3.5.2. மேற்கண்ட தணிக்கை பணிகளுடன் கீழ்கண்ட சிறப்பு பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.**

1. நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களின் ஓய்வூதிய நிதியினை நிர்வாகம் செய்து ஓய்வூதிய பயன்கள் மற்றும் மாதாந்திர ஓய்வூதியம் வழங்குதல்.
2. தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி நிறுவனங்களில் செயல்படும் பணியாளர்களின் சேமநலநிதி வைப்புத் தொகைகளுக்கு வட்டி கணக்கிட்டு வழங்கும் பணி மேற்கொள்ளுதல்.
3. இத்துறைக்கு ஒப்படைக்கப்பட்ட அறக்கட்டளைகளுக்கு பொருளாளராக இயக்குநர் செயல்படுதல்

**தணிக்கை தடைகள் துறை தலைமைக்கு தெரிவித்தல் – பதிலுரை பெற்றது – தீர்வு செய்தது தொகை ரூ.1133.48 இலட்சங்கள்.**

3.5.3. 2020–21 ஆம் ஆண்டு தணிக்கை முடிக்கப்பட்டு, சட்டமன்றத்தில் சமர்ப்பிக்க தேர்வு செய்யப்பட்ட தணிக்கைத் தடை விவரங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகளின் இயக்குநர், வேளாண்மை விற்பனை ஆணையர், பொது நூலகத் துறை இயக்குநர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்களிடமிருந்து பெறப்பட்ட பதிலுரைகள் பரிசீலிக்கப்பட்டு ரூ.1133.48 இலட்சம் வசூல் செய்யப்பட்ட விவரம் தணிக்கையில் உறுதி செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 10 : நிறுவனம் வாரியாக முக்கிய தணிக்கைத் தடைகள் விவரம்

| வ. எண் | நிறுவனம் | தணிக்கை தடைகளின் எண்ணிக்கை | தணிக்கை பத்திகளுக்குரிய தொகை | தீர்வு செய்யப்பட்ட தணிக்கை தடைகளின் மதிப்பு | நிலுவை |
|---|---|---|---|---|---|
| | | | ( ரூ. இலட்சத்தில்) | | |
| 1) | பெருநகர சென்னை மாநகராட்சி | 7 | 1139.24 | 1092.29 | 46.95 |
| 2) | இதர மாநகராட்சிகள் | 7 | 952.32 | 0.51 | 951.81 |
| 3) | நகராட்சிகள் | 1 | 28.28 | ---- | 28.28 |
| 4) | பேரூராட்சிகள் | 2 | 843.84 | 30.63 | 813.21 |
| 5) | ஊராட்சி ஒன்றியங்கள் | 2 | 64.33 | --- | 64.33 |
| 6) | கிராம ஊராட்சிகள் | 1 | 21.97 | 10.05 | 11.92 |
| 7) | பல்கலைக் கழகங்கள் | 6 | 13553.11 | --- | 13553.11 |
| 8) | பொது நூலகங்கள் | 1 | 6884.01 | --- | 6884.01 |
| 9) | வேளாண் விற்பனைக் குழுக்கள் | 2 | 4420.04 | | 4420.04 |
| 10) | உள்ளூர் திட்டக் குழுமங்கள் | 1 | 777.02 | ---- | 777.02 |
| | **மொத்தம்** | **30** | **28684.16** | **1133.48** | **27550.68** |

**3.5.4. தணிக்கை கட்டணம்:**

2020–21 ஆம் ஆண்டிற்கான அனைத்து நிறுவனங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. 2020–21 ஆம் ஆண்டில் தணிக்கை மேற்கொள்ளப்பட்ட நிறுவனங்களில் மாநகராட்சிகள், நகராட்சிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் வேளாண் விற்பனைக் குழுக்களால் செலுத்தப்பட வேண்டிய தணிக்கை கட்டணமாக மொத்தம் ரூ.1788.15 இலட்சங்கள் கேட்பு எழுப்பப்பட்டு சம்பந்தப்பட்ட தணிக்கை அறிக்கைகளில் தடைகள் எழுப்பப்பட்டுள்ளன. மேற்காணும் தணிக்கைக் கட்டணத்தினை உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்திட விரைவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 3.6. தணிக்கைத் தடைகளின் சுருக்கம்

அட்டவணை 11 : தணிக்கைத் தடைகளின் சுருக்கம் – பெருநகர சென்னை மாநகராட்சி

| வ. எண் | தணிக்கைத் தடை பத்தி எண் | பத்தி தலைப்பு | தொகை | தீர்வு செய்யப்பட்டத் தொகை | நிலுவை | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ.இலட்சத்தில்) | | | |
| 1) | 4.1.4.1 | கட்டிட வரைபட அனுமதி வழங்கும்போது சாலையின் அகலம் 12 மீட்டருக்கு அதிகமுள்ள இனங்களுக்கு மழைநீர் வடிகால்வாய் கட்டணம் சேர்த்து தோராய அபிவிருத்தி கட்டணம் வசூலிக்கப்படாதது இழப்பு ரூ.5.87 இலட்சம். | 5.87 | 5.87 | --- | 58 |
| 2) | 4.1.4.2 | கட்டிட வரைபட அனுமதி வழங்கும்போது வசூலிக்கப்படும் பல்வேறு கட்டணங்கள் குறைவாக வசூல் செய்யப்பட்டது இழப்பு ரூ.3.59 இலட்சம். | 3.59 | --- | 3.59 | 61 |
| 3) | 4.1.4.3 | கட்டிட அனுமதி வழங்கும் போது 300 ச.மீ.க்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் வசூலிக்கப்படாதது இழப்பு ரூ.7.40 இலட்சம். | 7.40 | 3.10 | 4.30 | 63 |
| 4) | 4.1.4.4 | விநாயகர் சதுர்த்தி பண்டிகையை முன்னிட்டு மெரினா கடற்கரை லூப் சாலையில் தடுப்பு வேலிகள் அமைத்தல், கண்காணிப்பு கோபுரங்கள் மற்றும் நாற்காலிகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொண்டது – இப்பணிகள் பண்டிகை முடிவுற்றபின் மேற்கொள்ளப்பட்டது – முறையற்ற செலவினம் ரூ.3.44 இலட்சம். | 3.44 | --- | 3.44 | 64 |
| 5) | 4.1.4.5 | ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் இறந்த பின்பும் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருவதால் இழப்பு ரூ.5.42 இலட்சம். | 5.42 | --- | 5.42 | 65 |
| 6) | 4.1.4.6 | மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தில் சேமிப்புக் கணக்குகளில் ஈட்டப்பட்டுள்ள வட்டித்தொகை உரிய அரசுக் கணக்கில் செலுத்தப்படவில்லை –ரூ.30.20 இலட்சம் – மருத்துவ சேவைகள் துறை. | 30.20 | --- | 30.20 | 66 |
| 7) | 4.1.4.7 | டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மானியத்தில் பயனாளிகளுக்கு தொகை வழங்கிய பின் மீதமுள்ள தொகை அரசுக் கணக்கில் திரும்ப செலுத்தப்படாதது – ரூ.1083.32 இலட்சம் – மருத்துவ சேவைகள் துறை. | 1083.32 | 1083.32 | --- | 68 |
| | | மொத்தம் | 1139.24 | 1092.29 | 46.95 | |

அட்டவணை 12 : தணிக்கைத் தடைகளின் சுருக்கம் – இதர மாநகராட்சிகள்

| வ. எண் | தணிக்கைத் தடை பத்தி எண் | பத்தி தலைப்பு | தொகை | தீர்வு செய்யப்பட்டத் தொகை | நிலுவை | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ.இலட்சத்தில்) | | | |
| 1) | 4.2.3.1 | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் கட்டணம் மன்றத் தீர்மானத்தில் குறிப்பிட்ட குறைந்தபட்ச மாதாந்திர கட்டணத்திற்கும் குறைவாக வசூலிக்கப்பட்டு வருவது இழப்பு ரூ.800.32 இலட்சம். | 800.32 | --- | 800.32 | 71 |
| 2) | 4.2.3.2 | பொது முடக்கத்தின் காரணமாக ஆண்டு குத்தகை மற்றும் வாடகைத் தொகையில் அரசால் தள்ளுபடி அறிவிக்கப்பட்டது – அரசாணைக்கு முரணாக கூடுதலான மாதங்களுக்கு தள்ளுபடி வழங்கப்பட்டதால் இழப்பு ரூ.28.35 இலட்சம். | 28.35 | --- | 28.35 | 73 |
| 3) | 4.2.3.3 | வணிக வகை சொத்துவரி இனங்களுக்கு குடியிருப்பு வகையில் குடிநீர் இணைப்பு வழங்கியது – வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் குறைவாக நிர்ணயம் செய்து வசூல் செய்தது – இழப்பு ரூ.55.99 இலட்சம். | 55.99 | --- | 55.99 | 74 |
| 4) | 4.2.3.4 | புதைவடிகால் இணைப்பு வழங்கப்பட்டதில் கள பொறியாளர்களால் நேரடி ஆய்வு செய்து சான்று வழங்கப்பட்ட கட்டிட பரப்பளவை விட குறைவான பரப்பளவிற்கு சொத்துவரி விதித்தது இழப்பு ரூ.4.06 இலட்சம். | 4.06 | --- | 4.06 | 76 |
| 5) | 4.2.3.5 | வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு பரப்பளவிற்கு ஏற்றவாறு சொத்துவரி நிர்ணயம் செய்யாமல் குறைவாக நிர்ணயம் செய்தது – தொடர் வருவாய் இழப்பு – ரூ.54.25 இலட்சம். | 54.25 | --- | 54.25 | 76 |
| 6) | 4.2.3.6 | பேவர் பிளாக் சாலை பராமரிப்பு பணியில் அட்டவணை விலை விகிதத்தைவிட கூடுதல் தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கியது இழப்பு ரூ.2.37 இலட்சம். | 2.37 | --- | 2.37 | 77 |
| 7) | 4.2.3.7 | ஓய்வூதிய கொடு ஆணையில் குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் சாதாரண நிலையில் குடும்ப ஓய்வூதியம் வழங்காமல் உயர்த்தப்பட்ட நிலையில் குடும்ப ஓய்வூதியம் வழங்கியது இழப்பு ரூ.6.98 இலட்சம். | 6.98 | 0.51 | 6.47 | 79 |
| | | மொத்தம் | 952.32 | 0.51 | 951.81 | |

அட்டவணை 13 : தணிக்கைத் தடைகளின் சுருக்கம் – நகராட்சிகள்

| வ. எண் | தணிக்கைத் தடை பத்தி எண் | பத்தி தலைப்பு | தொகை | தீர்வு செய்யப்பட்டத் தொகை | நிலுவை | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ.இலட்சத்தில்) | | | |
| 1) | 4.3.14.1 | அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் – 2017 – விற்கப்படாத மனைகள் வரன்முறைப்படுத்தியது திறந்தவெளி ஒதுக்கீடு நிலம் நகராட்சி பெயருக்கு மாற்றம் செய்யப்படவில்லை – மதிப்பு ரூ.28.28 இலட்சம். | 28.28 | --- | 28.28 | 85 |
| | | மொத்தம் | 28.28 | --- | 28.28 | |

அட்டவணை 14 : தணிக்கைத் தடைகளின் சுருக்கம் – பேரூராட்சிகள்

| வ. எண் | தணிக்கைத் தடை பத்தி எண் | பத்தி தலைப்பு | தொகை | தீர்வு செய்யப்பட்டத் தொகை | நிலுவை | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ.இலட்சத்தில்) | | | |
| 1) | 4.4.6.1 | திருவாளர்கள். பிரிமேட்டிக்ஸ் நிறுவனத்தால் இணைய வழி (Online) வசூலிக்கப்பட்ட வரி (ம) வரியில்லா இனங்களுக்கான தொகை பேரூராட்சிகளின் வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்யப்படாதது – இழப்பு ரூ.474.18 இலட்சம் | 474.18 | 30.63 | 443.55 | 89 |
| 2) | 4.4.6.2 | தி/ள். அமிர்தா விஸ்வா வித்யாபீடம் – பேரூராட்சியால் கட்டிட வரைபட அனுமதி வழங்கிய போது காலியிட மனை வரி குறைவாக வசூலிக்கப்பட்டது – இழப்பு ரூ.369.66 இலட்சம் மற்றும் இதர குறைபாடுகள். | 369.66 | ---- | 369.66 | 90 |
| | | மொத்தம் | 843.84 | 30.63 | 813.21 | |

அட்டவணை 15 : தணிக்கைத் தடைகளின் சுருக்கம் – மாவட்ட ஊராட்சிகள்

| வ. எண் | தணிக்கைத் தடை பத்தி எண் | பத்தி தலைப்பு | தொகை | தீர்வு செய்யப்பட்டத் தொகை | நிலுவை | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ.இலட்சத்தில்) | | | |
| பத்திகள் தெரிவு செய்யப்படவில்லை | | | | | | |

அட்டவணை 16 : தணிக்கைத் தடைகளின் சுருக்கம் – ஊராட்சி ஒன்றியங்கள்

| வ. எண் | தணிக்கைத் தடை பத்தி எண் | பத்தி தலைப்பு | தொகை | தீர்வு செய்யப்பட்டத் தொகை | நிலுவை | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ.இலட்சத்தில்) | | | |
| 1) | 5.2.5.1 | பாரத மாநில வங்கியால் தொகை ரூ.12.55 இலட்சங்கள் தன்னிச்சையாக கழிக்கப்பட்டதால் வங்கிக் கணக்குகளில் இறுதி இருப்புகளில் குறைவு. | 12.55 | ---- | 12.55 | 99 |
| 2) | 5.2.5.2 | பொதுநிதி மற்றும் திட்ட நிதியிலிருந்து சம்மந்தமற்ற நபர்களுக்கு காலங்கடந்த வைப்புத் தொகைகள் திரும்ப வழங்கப்பட்டது மற்றும் இதர பொது நிலுவைத்தொகை வழங்கப்பட்டதில் மோசடி – இழப்பு ரூ.51.78 இலட்சங்கள் | 51.78 | ---- | 51.78 | 100 |
| | | **மொத்தம்** | 64.33 | – | 64.33 | |

அட்டவணை 17 : தணிக்கைத் தடைகளின் சுருக்கம் – கிராம பஞ்சாயத்துக்கள்

| வ. எண் | தணிக்கைத் தடை பத்தி எண் | பத்தி தலைப்பு | தொகை | தீர்வு செய்யப்பட்டத் தொகை | நிலுவை | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ.இலட்சத்தில்) | | | |
| 1) | 5.3.8.1 | கிராம ஊராட்சிகளில் 31.03.2021 நிலையில் வசூல் செய்யப்பட்ட ரூ.21.97 இலட்சம் ரொக்க வரவினங்கள் குறைவாக வங்கியில் செலுத்தியது மற்றும் வங்கியில் செலுத்தப்படாமல் உள்ளது – தணிக்கைத் தடை எழுப்பிய பிறகு ரூ.10.05 இலட்சங்கள் செலுத்தப்பட்டுள்ளது – ரூ.11.92 இலட்சங்கள் வசூலிக்கப்பட வேண்டும். | 21.97 | 10.05 | 11.92 | 107 |
| | | **மொத்தம்** | 21.97 | 10.05 | 11.92 | |

அட்டவணை 18 : தணிக்கைத் தடைகளின் சுருக்கம் – பல்கலைக் கழகங்கள்

| வ. எண் | தணிக்கைத் தடை பத்தி எண் | பத்தி தலைப்பு | தொகை | தீர்வு செய்யப்பட்டத் தொகை | நிலுவை | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ.இலட்சத்தில்) | | | |
| 1) | 6.1.7.1 | கல்லூரி இணைப்பு கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் மீதான சரக்கு மற்றும் சேவை வரி (GST) வசூலிக்கப்படாதது ரூ.578.91 இலட்சம். | 578.91 | ---- | 578.91 | 111 |
| 2) | 6.1.7.2 | அரசின் முன் அனுமதி பெறாமல் நிலையான கட்டண ஒப்பந்த அடிப்படையில் கணினிகள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டது – தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளி விதிகள் மீறப்பட்டது – ரூ.1831.50 இலட்சம். | 1831.50 | ---- | 1831.50 | 113 |

| வ. எண் | தணிக்கைத் தடை பத்தி எண் | பத்தி தலைப்பு | தொகை | தீர்வு செய்யப்பட்டத் தொகை | நிலுவை | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ.இலட்சத்தில்) | | | |
| 3) | 6.1.7.3 | பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள் – மையங்கள் மற்றும் கல்லூரிகளின் கணக்குகளில் 2014–15 முதல் வங்கி இருப்பு மற்றும் அதிக அளவிலான முதலீடுகள் பயன்படுத்தப்படாமல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது – ரூ.11075.70 இலட்சம் அண்ணா பல்கலைக்கழக பொது நிதி வருவாய் கணக்குக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும். | 11075.70 | --- | 11075.70 | 116 |
| 4) | 6.1.7.4 | எழுபத்தோர் ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு 01.04.2003–க்கு பிறகு பணிநியமனம் முறைப்படுத்தப்பட்டது பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திலிருந்து பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது அரசாணைகளுக்கு எதிரானது. | --- | ---- | --- | 117 |
| 5) | 6.1.7.5 | பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் (CPS) கீழ் உள்ள 71 ஆசிரியரல்லா பணியாளர்கள் சேமநல நிதித் திட்டம் அதாவது பழைய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் மாற்றம் செய்யப்பட்டது – மேலும் அப்பணியாளர்களுக்கு சேமநல நிதி தற்காலிக முன்பணம் மற்றும் இறுதிப் பணம் வழங்கப்பட்டது – தொகை ரூ.47.04 இலட்சம். | 47.04 | --- | 47.04 | 118 |
| 6) | 6.1.7.6 | கடல்சார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் (CMST) – பல்கலைக்கழக மானியக் குழுவின் விதிமுறைகள் மற்றும் அரசாணைகளுக்கு முரணாக முனைவர் S.மேரி ஜோஸ்பின் புனிதா அவர்களை கருணை அடிப்படையில் விரிவுரையாளராக பணிநியமனம் செய்தது – 2020–21 ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் பிற படிகள் ரூ.19.96 இலட்சம் தணிக்கையில் ஆட்சேபிக்கப்படுகிறது. | 19.96 | --- | 19.96 | 119 |
| | | மொத்தம் | 13553.11 | ---- | 13553.11 | |

அட்டவணை 19 : தணிக்கைத் தடைகளின் சுருக்கம் – உள்ளூர் நூலக ஆணைக்குழுக்கள்

| வ. எண் | தணிக்கைத் தடை பத்தி எண் | பத்தி தலைப்பு | தொகை | தீர்வு செய்யப்பட்டத் தொகை | நிலுவை | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ.இலட்சத்தில்) | | | |
| 1) | 6.2.6.1 | நூலக ஆணைக் குழு பணியாளர்களுக்கு 2020–21 ஆம் ஆண்டுக்கான ஊதியம் மற்றும் பிற படிகள் அரசு கருவூலத்திலிருந்து பெற்று வழங்கப்பட்டது – அரசு கணக்குத் தலைப்பில் மீள செலுத்தப்படாதது –ரூ.6884.01 இலட்சம். | 6884.01 | --- | 6884.01 | 121 |
| | | மொத்தம் | 6884.01 | --- | 6884.01 | |

அட்டவணை 20 : தணிக்கைத் தடைகளின் சுருக்கம் – வேளாண் விற்பனைக் குழுக்கள்

| வ. எண் | தணிக்கைத் தடை பத்தி எண் | பத்தி தலைப்பு | தொகை | தீர்வு செய்யப்பட்டத் தொகை | நிலுவை | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ.இலட்சத்தில்) | | | |
| 1) | 6.3.5.1 | வேளாண் விற்பனைக் குழு பணியாளர்களுக்கு 2020–21 ஆம் ஆண்டுக்கான ஊதியம் மற்றும் பிற படிகள் அரசு கருவூலத்திலிருந்து பெற்று வழங்கப்பட்டது – அரசு கணக்குத் தலைப்பில் மீள செலுத்தப்படாதது – ரூ.2314.03 இலட்சம் | 2314.03 | --- | 2314.03 | 124 |
| 2) | 6.3.5.2 | மாட்டுத்தாவணி, மதுரை நெல் வணிக வளாகம் – தவணை முறை அடிப்படையில் விற்பனை செய்யப்பட்ட கடைகளுக்கான நிலுவை கிரையத் தொகை ரூ.2094.94 இலட்சம் மற்றும் பராமரிப்புக் கட்டணத் தொகை ரூ.11.07 இலட்சம் வழக்கு காரணமாக வசூலிக்கப்படாமல் 2006 ஆம் ஆண்டு முதல் நிலுவையாக உள்ளது. | 2106.01 | ---- | 2106.01 | 125 |
| | | மொத்தம் | 4420.04 | ---- | 4420.04 | |

அட்டவணை 21 : தணிக்கைத் தடைகளின் சுருக்கம் – உள்ளூர் திட்டக் குழுமங்கள்

| வ. எண் | தணிக்கைத் தடை பத்தி எண் | பத்தி தலைப்பு | தொகை | தீர்வு செய்யப்பட்டத் தொகை | நிலுவை | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ.இலட்சத்தில்) | | | |
| 1) | 6.4.5.1 | உள்ளூர் திட்டக் குழுமப் பணியாளர்களுக்கு 2020–21 ஆம் ஆண்டுக்கான ஊதியம் மற்றும் பிற படிகள் அரசு கருவூலத்திலிருந்து பெற்று வழங்கப்பட்டது – அரசு கணக்குத் தலைப்பில் மீள செலுத்தப்படாதது – ரூ.777.02 இலட்சம். | 777.02 | --- | 777.02 | 129 |
| | | மொத்தம் | 777.02 | ---- | 777.02 | |

# பகுதி–ஆ

# முக்கிய தணிக்கைத் தடைகள்

## அத்தியாயம் – IV

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஓர் அறிமுகம் (பெருநகர சென்னை மாநகராட்சி, இதர மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள்) மற்றும் முக்கிய தணிக்கைத் தடைகள்

## மாநகராட்சிகள்

### 4.1. பெருநகர சென்னை மாநகராட்சி

#### 4.1.1. முன்னுரை:

சென்னை மாநகராட்சி சட்டம் 1919 இன் படி பெருநகர சென்னை மாநகராட்சி ஏற்படுத்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சென்னை மாநகராட்சியின் மொத்த மக்கள் தொகை 46.46 இலட்சமாகும். இதில் ஆண்கள் 23.36 இலட்சம் பெண்கள் 23.10 இலட்சம் மொத்த கல்வியறிவு 90.18 விழுக்காடு அரசு ஆணை எண்.256, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.12.2009–இன் படி சென்னை மாநகராட்சியின் பரப்பளவு 426 சதுர கி.மீ.க்கு விரிவுபடுத்தியதால் திருத்திய மக்கள் தொகை சுமார் 70 இலட்சம். சென்னை மாநகராட்சி 25.10.2011 முதல் 15 மண்டலங்களாக பிரித்து 200 கோட்டங்களாக வரையறுத்து செயல்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து அக்டோபர் 2015–இல் "பெருநகர சென்னை மாநகராட்சி" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் 12 வது அட்டவணையில் பட்டியலிடப்பட்ட 18 செயல்பாடுகளுள் 13 செயல்பாடுகள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பகிர்வு செய்யப்பட்டுள்ளன. சென்னை நகர முனிசிபல் சட்டம் 1919–இன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் செயல்பாடுகள் அமையப் பெற்றுள்ளன.

#### 4.1.2. முக்கிய செயல்பாடுகள்:

தமிழ்நாடு அரசால் ஒப்பளிக்கப்பட்ட 13 செயல்பாடுகளுள் சாலைகள், மழைநீர் வடிகால், தெருவிளக்கு, திடக்கழிவு மேலாண்மை, துப்புரவு, கல்வி, பொது சுகாதாரம், பூங்கா போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி கொடுத்தல் பணி மற்றும் பிறப்பு, இறப்பு சான்று வழங்குதல் போன்ற இதர பணிகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளை மேற்கொள்ள 15 மண்டலங்கள், 27 துறைகள் / பிரிவுகள் மற்றும் 3 வட்டார துணை ஆணையர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

#### 4.1.3. தணிக்கைக்கான ஆதாரம்:

உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014, பிரிவு 2(g) இன் படி இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை அவர்கள் சட்டப்பூர்வ தணிக்கையாளர் ஆவார்.

**4.1.4. தணிக்கையில் கண்டறியப்பட்ட முக்கிய குறைபாடுகள்:**

சென்னை மாநகராட்சி சட்டம் 1919 அட்டவணை ஏ நிதி விதிகள் 19 (டி) மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 மற்றும் விதிகள் 2016 பிரிவு 4-இன்படி தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தணிக்கையில் கண்டறியப்பட்ட குறைபாடுகளில் பின்வருபவை மட்டும் உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014, பிரிவு 20 இன் படி அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறது.

வருவாய் இழப்பு

**4.1.4.1. மழைநீர் வடிகால் வாய் கட்டணம் வசூலிக்கப்படாதது.**

கட்டிட வரைபட அனுமதி வழங்கும்போது சாலையின் அகலம் 12 மீட்டருக்கு மேல் உள்ள இனங்களுக்கு மழைநீர் வடிகால் வாய் கட்டணம் சேர்த்து தோராய அபிவிருத்தி கட்டணம் வசூலிக்கப்படாதது இழப்பு ரூ.5.87 இலட்சம்.
(பெருநகர சென்னை மாநகராட்சி பத்தி எண்.49/2020-21)

பணித்துறை சுற்றறிக்கை எண்.W.D.C.No.7/2129/2011, நாள்.12.12.2011 இன் படி சாலையின் அகலம் 12 மீ-க்கு மேல் உள்ள மனைகளுக்கு கட்டட அனுமதி வழங்கப்படும் போது மழைநீர் வடிகால்வாய் கட்டணத்தையும் (SWD) சேர்த்து தோராய அபிவிருத்திக் கட்டணம் கணக்கிடப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டட அனுமதி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் (கட்டட அனுமதிக்கான கட்டண கணக்கீடுகள் உட்பட) கணினி AUTO DCR என்ற மென்பொருள் மூலம் 26.07.2017 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

கட்டட அனுமதி நடைமுறைகள் அனைத்தும் கணினி மயமாக்கப்படுவதற்கு முன்பு (26.07.2017)க்கு முன்பு மேற்குறிப்பிட்ட பணித்துறையின் சுற்றறிக்கையின்படி 12 மீ மற்றும் 12 மீக்கு மேல் சாலையின் அகலம் உள்ள மனைகளுக்கு கட்டட அனுமதி வழங்கப்படும்போது மழைநீர் வடிகால்வாய் கட்டணத்தையும் சேர்த்து தோராய அபிவிருத்திக் கட்டணம் கணக்கிடப்பட்டு வந்தது.

ஆனால், தற்போது கட்டட அனுமதி நடைமுறைகள் அனைத்தும் கணினி மயமாக்கப்பட்ட பின்பு சாலையின் அகலம் 12.21 மீட்டருக்கு மேல் உள்ள இனங்களுக்கு மட்டும் மழைநீர் வடிகால்வாய் கட்டணத்தை சேர்த்து தோராய அபிவிருத்திக் கட்டணம் கணக்கிடும் வகையில் மொன்பொருளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதனால் மண்டலம் -2 (மணலி)இல் 2020-21 ஆம் ஆண்டில் 12 மீ முதல் 12.20 மீ வரை சாலையின் அகலமுள்ள மனைகளுக்கு கட்டட அனுமதி வழங்கப்பட்ட நிகழ்வில் மழைநீர் வடிகால்வாய் கட்டணத்தை சேர்த்து தோராய அபிவிருத்தி கட்டணம் கணக்கிடப்படாததால் மாநகராட்சிக்கு பின்வருமாறு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்ட பணித்துறை சுற்றறிக்கையின்படி சாலையின் அகலும் 12 மீ மற்றும் 12 மீட்டருக்கு மேல் உள்ள இனங்களுக்கு மழைநீர் வடிகால்வாய் கட்டணத்தை சேர்த்து தோராய அபிவிருத்திக் கட்டணம் கணக்கீடும் வகையில் மொன்பொருளில் உரிய மாற்றம் செய்வதுடன், பின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இழப்புத் தொகை ரூ.5,87,296/– யினை சம்மந்தப்பட்ட கட்டட உரிமையாளர்களிடமிருந்து வசூலித்து மாநகராட்சி நிதியில் சேர்க்கப்பட்டு அதன் விவரம் தணிக்கைக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

**அ) தோராய அபிவிருத்தி கட்டண கணக்கீடு**

| | | |
|---|---|---|
| கட்டட அனுமதி எண் | : | B.A.W.D.C.No.02/00951/2021, நாள். 17.02.2021 |
| திட்ட அனுமதி எண் | : | P.P.A.W.D.C.No.02/08575/2020, நாள். 17.02.2021 |
| உரிமையாளர் பெயர் | : | திருமதி. கரிமா பேய்டு |
| மனை அமைவிடம் | : | எண். 84/2 & 85/3 A 1,<br>கொசப்பூர், வடபெரும்பாக்கம் பள்ளி,<br>வடபெரும்பாக்கம், சென்னை |
| மேம்பாட்டுத் தன்மை | : | புதிய கட்டுமானம் |

| வ. எண் | தோராய அபிவிருத்திக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டியது | வசூலிக்கப்பட்டது ரூபாயில் | இழப்பு ரூபாயில் |
|---|---|---|---|
| 1) | 16.80 (16,160 + 3,300 +23,450) / 2<br>=8.40 (42,910)<br>=ரூ.3,60,444/– | 1,63,500/– | 1,96,944/– |

**ஆ) தோராய அபிவிருத்தி கட்டண கணக்கீடு**

| | | |
|---|---|---|
| கட்டட அனுமதி எண் | : | B.A.W.D.C.No.02/00953/2021, நாள். 17.02.2021 |
| திட்ட அனுமதி எண் | : | P.P.A.W.D.C.No.02/08574/2020, நாள். 17.02.2021 |
| உரிமையாளர் பெயர் | : | திருமதி. ரீனா நஹடா |
| மனை அமைவிடம் | : | எண். 84/3 & 85/ 3A2<br>கொசப்பூர், வடபெரும்பாக்கம் பள்ளி,<br>வடபெரும்பாக்கம், சென்னை |
| மேம்பாட்டுத் தன்மை | : | புதிய கட்டுமானம் |

| வ. எண் | தோராய அபிவிருத்திக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டியது | வசூலிக்கப்பட்டது ரூபாயில் | இழப்பு ரூபாயில் |
|---|---|---|---|
| 1) | 16.70 (16,160 + 3,300 +23,450) / 2<br>=8.35 (42,910)<br>= ரூ.3,58,299/– | 1,62,500/– | 1,95,799/– |

## இ) தோராய அபிவிருத்தி கட்டண கணக்கீடு

| | | |
|---|---|---|
| கட்டட அனுமதி எண் | : | B.A.W.D.C.No.02/00952/2021, நாள்.17.02.2021 |
| திட்ட அனுமதி எண் | : | P.P.A.W.D.C.No.02/08577/2020, நாள்.17.02.2021 |
| உரிமையாளர் பெயர் | : | திரு. நிகில் |
| மனை அமைவிடம் | : | எண். 84/4 & 85/3A3<br>கொசப்பூர், வடபெரும்பாக்கம் பள்ளி,<br>வடபெரும்பாக்கம், சென்னை |
| மேம்பாட்டுத் தன்மை | : | புதிய கட்டுமானம் |

| வ. எண் | தோராய அபிவிருத்திக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டியது | வசூலிக்கப்பட்டது ரூபாயில் | இழப்பு ரூபாயில் |
|---|---|---|---|
| 1) | 16.60 (16,160 + 3,300 +23,450)<br>------------------------------<br>2<br>=8.3 (42,910)<br>= ரூ. 3,56,153/- | 1,61,600/- | 1,94,553/- |

**சுருக்கம்**

| | |
|---|---|
| அ) | ரூ. 1,96,944 /- |
| ஆ) | ரூ. 1,95,799 /- |
| இ) | ரூ. 1,94,553 /- |
| மொத்தம் | **ரூ. 5,87,296 /-** |

**பதிலுரை:**

இத்தணிக்கைத் தடை விவரம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி, மாவட்ட வருவாய் அலுவலர் / உதவி ஆணையர், மண்டலம் -2 (மணலி) கடிதம் எண். ம.அ.2.ந.க.எண்.இ4/3148/2022, நாள்.14.10.2022-இன் படி பத்தி எண்.அ, ஆ மற்றும் இ-இல் குறிப்பிட்டுள்ள அபிவிருத்தி கட்டணத் தொகைகள் பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலக கணக்கில் செலுத்தப்பட்ட விவரம் கீழ்க்காணுமாறு.

| உப பத்தி எண் | செலாண் எண்/ நாள் | செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|
| அ) | NB/2022-23/0023679, நாள்.21.09.2022 | ரூ.1,96,944/- |
| ஆ) | NB/2022-23/0024339, நாள்.27.09.2022 | ரூ. 1,95,799/- |
| இ) | NB/2022-23/0024332, நாள்.27.09.2022 | ரூ. 1,94,553/- |

### 4.1.4.2. பல்வேறு கட்டணங்கள் குறைவாக வசூலித்தது.

**கட்டிட வரைபட அனுமதி வழங்கும்போது வசூலிக்கப்படும் பல்வேறு கட்டணங்கள் குறைவாக வசூல் செய்யப்பட்டது இழப்பு ரூ.3.59 இலட்சம். (பெருநகர சென்னை மாநகராட்சி பத்தி எண்.24/2020–21)**

1919–ஆம் ஆண்டின் பெருநகர சென்னை மாநகராட்சி சட்ட விதி எண்.238 மற்றும் மாமன்ற தீர்மான எண்.550/2003, நாள்.29.09.2003–இன் படியும் கட்டட அனுமதி வழங்குதலுக்கான வசூலிக்கப்பட வேண்டிய கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டு 01.10.2003 முதல் பின்பற்றப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–3 (மாதவரம்)இல் 2020–21ஆம் ஆண்டில் கட்டட அனுமதி வழங்கப்பட்ட பின்வரும் கோப்புகளில் மேற்காணும் தீர்மானத்தின் படியான கட்டணத் தொகைகளை விட குறைவாக வசூலிக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

**அ) கட்டட தகர்ப்பு கட்டணம் (Demolition fees)**

அட்டவணை 22: இடிபாடுகள் அகற்றுதல் கட்டணம் வசூலிக்கப்படாதது இழப்பு விவரம்

| வ. எண் | கட்டட வரைபட அனுமதி எண் / நாள் | தகர்ப்பு செய்யப்பட வேண்டிய பரப்பு (மீXமீ) | வசூலிக்கப்பட வேண்டியத் தொகை | வசூலிக்கப்பட்ட தொகை | குறைவாக வசூலித்தது |
|---|---|---|---|---|---|
| | | | தொகை ரூ. | | |
| 1) | BA/WDC/N03/01864/2020, நாள்.18.04.2020 | 26.73 | 3,000 | 2,700 | 300 |
| 2) | BA/WDC/N03/03358/2020, நாள்.17.09.2020 | 94.36 | 10,400 | 9,900 | 500 |
| 3) | BA/WDC/N03/03502/2020, நாள்.17.09.2020 | G.F – 49.67 F.F – 64.75 | 10,000 | 7,700 | 2,300 |
| 4) | BA/WDC/N03/02636/2020, நாள்.06.08.2020 | G.F – 152.34 F.F – 152.34 | 27,500 | 21,600 | 5,900 |
| 5) | BA/WDC/N03/00788/2021, நாள்.11.02.2021 | 82.55 | 9,100 | 6,800 | 2,300 |
| 6) | BA/WDC/N03/00586/2021, நாள்.05.02.2021 | G.F – 105.14 F.F – 59.72 | 15,800 | 11,000 | 4,800 |
| | | | | மொத்தம் | 16,100 |

**ஆ) பிணை வைப்புத் தொகை (Security Deposit)**

அட்டவணை 23: பிணை வைப்புத் தொகை வசூலிக்கப்படாதது இழப்பு விவரம்

| வ. எண் | கட்டட வரைபட அனுமதி எண் / நாள் | மொத்த FSI பரப்பு (ச.மீ) | ஒரு சதுர மீட்டருக்கான தொகை | வசூலிக்கப்பட வேண்டியத் தொகை | வசூலிக்கப்பட்ட தொகை | குறைவாக வசூலித்தது |
|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை ரூ. | | |
| 1) | BA/WDC/N03/02893/2020, நாள்.21.07.2020 | 535 | 187.5 | 100400 | 95700 | 4700 |
| 2) | BA/WDC/N03/03237/2020, நாள்.14/09/2020 | 420 | 187.5 | 78800 | 12600 | 66200 |
| 3) | BA/WDC/N03/05908/2020, நாள். 31.12.2020 | 650 | 187.5 | 121900 | 106300 | 15600 |
| 4) | BA/WDC/N03/05479/2020, நாள். 10.12.2020 | 530 | 30 | 15900 | 14100 | 1800 |
| | | | | | மொத்தம் | 88300 |

**இ) உள் கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் (Infrastructure and amenities charges):**

அட்டவணை 24: உள் கட்டமைப்பு (ம) அடிப்படை வசதிக் கட்டணம் வசூலிக்கப்படாதது இழப்பு விவரம்

| வ. எண் | கட்டட வரைபட அனுமதி எண் / நாள் | மொத்த FSI பரப்பு (ச.மீ) | ஒரு சதுர மீட்டருக்கான தொகை | வசூலிக்கப்பட வேண்டியத் தொகை | வசூலிக்கப்பட்ட தொகை | குறைவாக வசூலித்தது |
|---|---|---|---|---|---|---|
| | | | தொகை ரூ. | | | |
| 1) | BA/WDC/N03/02893/2020, நாள்.21.07.2020 | 47.60 | 375 | 17900 | 15000 | 2900 |
| 2) | BA/WDC/N03/03500/2020, நாள்.22.09.2020 | 416.06 | 375 | 156100 | 150100 | 6000 |
| 3) | BA/WDC/N03/02821/2020, நாள்.06.08.2020 | 234.15 | 375 | 87900 | 86700 | 1200 |
| 4) | BA/WDC/N03/02951/2020, நாள்.13.08.2020 | 414.35 | 375 | 155400 | 149700 | 5700 |
| 5) | BA/WDC/N03/05208/2020, நாள்.24.11.2020 | 384.35 | 375 | 144200 | 143700 | 500 |
| 6) | BA/WDC/N03/04445/2020, நாள்.23.10.2020 | 314.39 | 375 | 117900 | 108900 | 9000 |
| 7) | BA/WDC/N03/00283/2020 நாள்.19.01.2020 | 435.96 | 375 | 163500 | 161700 | 1800 |
| 8) | BA/WDC/N03/059082020, நாள்.31.12.2020 | 462.79 | 375 | 173600 | 56300 | 117300 |
| 9) | BA/WDC/N03/01095//2021, நாள்.01.03.2021 | 242.12 | 375 | 90800 | 87800 | 3000 |
| 10) | BA/WDC/N03/01096/2020, நாள்.01.03.2021 | 237.92 | 375 | 89300 | 86700 | 2600 |
| | | | | | மொத்தம் | 1,50,000 |

**ஈ) திறந்தவெளிக் கட்டணம் (OSR Charges):**

அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.ஏ.1) துறை, நாள்.04.02.2019–இன் படி வெளியிடப்பட்ட தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதி 2019இன் விதி எண்.41இன் (Reservation of land for community recreational purposes in development) படி 05.08.1975–ற்கு முந்தைய பத்திரங்களின் அடிப்படையிலும் 05.08.1975–ற்கு பின் அடிப்படையிலும், முறையே 3000 சதுர மீட்டர் மற்றும் 10,000 ச.மீட்டருக்கு மேல் பரப்பளவு கொண்ட மனைகளுக்கு பதிவுத் துறை மதிப்பீட்டின்படி திறந்தவெளிக் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகின்றன. பின்வரும் கோப்புகளில் நிர்ணயிக்கப்பட்டதைவிட குறைவாக வசூலிக்கப்பட்டுள்ளன.அதன் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 25: திறந்தவெளிக் கட்டணம் (OSR) வசூலிக்கப்படாதது இழப்பு விவரம்

| கட்டட வரைபட அனுமதி எண் / நாள் | விற்பனை செய்த பத்திர ஆண்டு | மொத்த நில பரப்பு | மனை அளவு (ச.மீ) | வழிகாட்டி மதிப்பு | வசூலிக்கப்பட வேண்டியத் தொகை | வசூலிக்கப்பட்ட தொகை | குறைவாக வசூலித்தது |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை ரூ. | | | |
| BA/WDC/N03/00329/2021, நாள்.03.02.2021 | 1981 | 147 செண்ட் | 225 | 8660 | 194900 | 90500 | 104400 |
| | | | | | | மொத்தம் | 104400 |

சுருக்கம்:

| | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| அ) | கட்டட தகர்ப்புக் கட்டணம் | 16100 |
| ஆ) | பிணை வைப்புத் தொகை | 88300 |
| இ) | உள் கட்டமைப்பு மற்றும் வசதிகளுக்கான கட்டணம் | 150000 |
| ஈ) | திறந்தவெளிக் கட்டணம் | 104400 |
| | **பெரு மொத்தம்** | **358800** |

**பதிலுரை:**

இத்தணிக்கைத் தடை விவரம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டது. பதில் ஏதும் பெறப்படவில்லை.

**4.1.4.3. உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் வசூலிக்கப்படாதது.**

கட்டிட அனுமதி வழங்கும் போது 300 ச.மீ.க்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் வசூலிக்கப்படாதது இழப்பு ரூ.7.40 இலட்சம்.
(பெருநகர சென்னை மாநகராட்சி 2020–21)

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு திட்டம் விதிகள் – 2008 (Tamil Nadu Town and Country Planning (Levy of Infrastructure and Amenities Charges)–இன் படி கட்டட அனுமதி வழங்கப்படும்போது உட்கட்டமைப்பு (ம) அடிப்படை வசதிக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். இந்த விதிமுறைகளில், விதி 2 (f)(i)(ii)–இல் அரசாணை(நிலை) எண்.01, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி[UD4(1)]த் துறை, நாள்.05.01.2021–இன் படி கீழ்க்காணும் திருத்தங்கள் (Amendments) வெளியிடப்பட்டுள்ளன.

"(i) a single building with more than two floors: or

(ii) a single building with not more than two floors, having a total floor area of not less than 300 square metres"

மேற்குறிப்பிட்ட திருத்தத்தின்படி கட்டட அனுமதி வழங்கப்படும் இனங்களில் 300 ச.மீ.–க்கு மேல் தள பரப்பு குறியீடு FSI Area உள்ள இனங்களுக்கு கட்டட அனுமதி வழங்கப்படும்போது உட்கட்டமைப்பு (ம) அடிப்படை வசதிக் கட்டணம் (ச.மீ.க்கு ரூ.375/–) வசூலிக்கப்பட வேண்டும்.

ஆனால், பெருநகர சென்னை மாநகராட்சியின் 2020–21 ஆம் ஆண்டு நகரமைப்புப் பிரிவு கட்டிட உரிமங்கள் வழங்குதல் தொடர்பான கீழ்க்குறிப்பிட்ட கோப்புகளில் FSI பரப்பு 300 ச.மீ.க்கும் அதிகமாக உள்ள நிலையில் மேற்குறிப்பிட்ட அரசாணையின் படி ச.மீ.க்கு ரூ.375/– வீதம் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி கட்டணம் வசூலிக்கப்படவில்லை. எனவே, கீழ்க்காணும் விவரப்படி உட்கட்டமைப்பு (ம) அடிப்படை வசதிக் கட்டணமாக ரூ.7,39,847/– வசூலித்து மாநகராட்சி நிதியில் சேர்க்கப்பட வேண்டும்.

அட்டவணை 26: உட்கட்டமைப்பு (ம) அடிப்படை வசதிக் கட்டணம் வசூலிக்கப்படாதது இழப்பு விவரம்

| வ. எண் | மண்டலம் | தணிக்கை அறிக்கை பத்தி எண் | கட்டிட உரிமம் கோப்பு எண் | இழப்புத் தொகை ரூ. | இணைப்பு எண் |
|---|---|---|---|---|---|
| 1) | 5 | 26(அ)/2020-21 | BA/WDC N0.5/01619/21, நாள்.15.03.2021 | 113134 | 01 |
| 2) | 5 | 26(ஆ)/2020-21 | BA/WDC N0.5/00694/21, நாள்.05.02.2021 | 159218 | |
| 3) | 11 | 21/2020-21 | BA/WDC N0.11/01724/21, நாள்.04.02.2021 | 139698 | |
| 4) | 13 | 15/2020-21 | BA/WDC N0.13/00245/21, நாள்.25.01.2021 | 170211 | |
| 5) | 13 | 21/2020-21 | BA/WDC N0.13/01363/21, நாள்.09.03.2021 | 157586 | |
| | | | மொத்தம் | 739847 | |

**பதிலுரை:**

இத்தணிக்கைத் தடை விவரம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டது. அட்டவணை வரிசை எண்.03 (ம) 04இல் குறிப்பிட்ட இழப்புத் தொகைகள் ரூ.1,39,698/- செலுத்துச் சீட்டு எண்.NL/2022-23/0029222, நாள்.28.10.2022 (ம) ரூ.1,70,211/- செலுத்துச் சீட்டு எண்.NN/2022-23/0015273, நாள்.26.07.2022-இன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கில் செலுத்தப்பட்டது. அட்டவணை வரிசை எண்.01, 02 மற்றும் 05-இல் குறிப்பிட்ட இழப்பு குறித்து பதில் ஏதும் பெறப்படவில்லை.

### 4.1.4.4. பணிகள் மேற்கொண்டதில் தகுதியற்ற செலவினம் மேற்கொண்டது

விநாயகர் சதுர்த்தி பண்டிகையை முன்னிட்டு மெரினா கடற்கரை லூப் சாலையில் தடுப்பு வேலிகள் அமைத்தல், கண்காணிப்பு கோபுரங்கள் மற்றும் நாற்காலிகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொண்டது – இப்பணிகள் பண்டிகை முடிவுற்றபின் மேற்கொள்ளப்பட்டது – முறையற்ற செலவினம் ரூ.3.44 இலட்சம்.
(பெருநகர சென்னை மாநகராட்சி பத்தி எண்.16/2020-21)

| | | |
|---|---|---|
| ஒப்பந்ததாரர் பெயர் | : | ஸ்ரீ சரவணா என்டர்பிரைசஸ் |
| உ. செ. சீ. எண் | : | 1BPV/ 286/20-21, நாள். 02.04.2020 |
| மதிப்பீட்டு எண் | : | NJ/2018-2019/9715 |
| அளவு புத்தக எண் | : | 349/2017-2018 |

பகுதி-25, வார்டு-126 மெரினா கடற்கரையில் உள்ள லூப் சாலை ஆண்டு தோறும் நடைபெறும் விநாயகர் சிலைகள் கடலில் கரைக்கும் நிகழ்ச்சிக்கு பாதுகாப்பு கருதி தடுப்பு வேலிகள் அமைத்தல், கண்காணிப்பு கோபுரங்கள் சேமினா மற்றும் நாற்காலிகள் ஏற்பாடு செய்தல் பணிகள் மேற்கொள்ள ஸ்ரீ சரவணா என்டர்பிரைசஸ் என்ற ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. விநாயகர் சதுர்த்தி பண்டிகை 13.09.2018 அன்று கொண்டாடப்பட்டு பூஜைகள் செய்யப்பட்ட விநாயகர் சிலைகள் 16.09.2018 அன்று கடற்கரையில் கரைக்கப்பட உள்ளதால் அதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை

மேற்கொள்ளுமாறு மயிலாப்பூர் காவல் உதவி ஆணையர் சென்னை மாநகராட்சி மண்டலம் – 9 பொறியாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

ஒப்பந்ததாரர் 16.09.2018 முன்னர் இப்பணிகளை செய்யாமல் அளவு புத்தக எண்.349, பக்க எண்.2–இன் படி 24.09.2018 அன்று பணி ஆரம்பித்து இப்பணியை அன்றே முடித்துள்ளார். இதற்கு உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அதே தேதியில் மேலளவுகள் சரிபார்த்து சான்றொப்பம் இட்டுள்ளனர். செயற்பொறியாளர் அவர்கள் 24.09.2019–இல் சான்றொப்பம் அளித்துள்ளார். ஓராண்டு கழித்து எவ்வாறு மேலளவுகள் சரிபார்த்தார் என விளக்கம் அளிக்க வேண்டும். 16.09.2018 நடைபெற வேண்டிய பாதுகாப்பு நிகழ்ச்சிக்கு வேலிகள் அமைக்க வேண்டிய பணிக்கு 24.09.2018–இல் பணி செய்தது தேவையற்ற செலவினம். அதாவது, 16.09.2018–இன் பாதுகாப்பு பணி முடிவுற்றது ஆனால் வேலிகள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் நாற்காலிகள் ஆகியவை 24.09.2018–இல் அமைத்தது தேவையற்ற செலவினம் ஆகும். எனவே இப்பணிக்கு செலவிடப்பட்ட ரூ.3,44,060/– உரிய அலுவலர்களிடமிருந்து வசூல் செய்யப்பட வேண்டும்.

**பதிலுரை:**

இத்தணிக்கைத் தடை விவரம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டது. பதில் ஏதும் பெறப்படவில்லை.

**4.1.4.5. ஓய்வூதியதாரர்கள் இறந்த பின்பும் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் தொடர்ந்து வழங்கியது.**

ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் இறந்த பின்பும் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருவதால் இழப்பு ரூ.5.42 இலட்சம்.
(பெருநகர சென்னை மாநகராட்சி பத்தி எண்.10/2020–21)

சென்னை மாநகராட்சி ஓய்வூதியப் பிரிவு 2020–21 ஆம் ஆண்டுத் தணிக்கையின் போது சேர்த்தல் மற்றம் நீக்குதல் பதிவேடு மற்றும் ஓய்வூதிய மாதாந்திர பட்டியல்களை ஒப்பு நோக்கி ஆய்வு மேற்கொண்டதில் சில ஓய்வூதியதாரர்களுக்கும் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அவர்களது இறப்புக்கு பின்னரும் அதாவது இறப்புக்கு அடுத்த நாள் முதல் ஓய்வூதியமானது நிறுத்தம் செய்யப்படாமல் தொடர்ந்து அளிக்கப்படுவது தணிக்கையில் கண்டறியப்பட்டது.

இவ்வாறு குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் அவர்களது இறப்புக்கு பின்னரும் தொடர்ந்து வழங்கியதில் அதிகமாக வழங்கப்பட்ட தொகை இணைப்பு எண்.02இல் கண்டுள்ளபடி ரூ.5,42,061/– சென்னை மாநகராட்சிக்கு இழப்பாகும். இந்த இழப்புத் தொகையை குடும்ப ஓய்வூதியதாரரின் கணக்கிலிருந்து மீளப்பெற்று அல்லது சம்மந்தப்பட்ட வாரிசுதாரரிடமிருந்து பெறப்பட்டு சென்னை மாநகராட்சியில் செலுத்தப்பட வேண்டும்.

**பதிலுரை:**

இத்தணிக்கைத் தடை விவரம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டது. பதில் ஏதும் பெறப்படவில்லை.

செலவிடப்படாத அரசு மான்யம் மற்றும் வட்டி தொகை அரசுக்கணக்கில் செலுத்தப்படாதது

**4.1.4.6. அரசு மான்யத்தில் ஈட்டப்பட்ட வட்டி தொகை அரசு கணக்கில் செலுத்தப்படாதது.**

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தில் சேமிப்புக் கணக்குகளில் ஈட்டப்பட்டுள்ள வட்டித்தொகை உரிய அரசுக் கணக்கில் செலுத்தப்படவில்லை – ரூ.30.20 இலட்சம் – மருத்துவ சேவைகள் துறை. (பெருநகர சென்னை மாநகராட்சி பத்தி எண்.09/2020–21)

சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்தின்கீழ் செயல்படும் அனைத்து திருமண நிதியுதவி திட்டங்களை 2011–12 நிதி ஆண்டிலிருந்து வழிகாட்டி நெறிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படுவதற்கு அரசாணை (நிலை) எண்.49, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள்.26.07.2011 ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அரசாணையின்படி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அரசாணை எண்.83, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள்.06.09.2013–இன் படி குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.24,000/– லிருந்து ரூ.72,000/– உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2020–21 ஆம் ஆண்டில் மொத்தம் 563 நபர்களுக்கு ரூ2,24,75,00,000/– தொகை வழங்கப்பட்டுள்ளது. விவரம் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது சமூக நலத்துறையிடம் இருந்து தொகையானது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளிக்கப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மருத்துவ சேவைகள் துறை மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் வங்கி கணக்கு எண்.4262 IOBஇல் பராமரிக்கப்படுகிறது. இந்த வங்கி கணக்கில் 2020–21 ஆம் ஆண்டில் பெறப்பட்ட தொகைக்கு (மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தில்) வங்கி சேமிப்புக் கணக்குகளின் மூலம் ஈட்டப்பட்டுள்ள வட்டி தொகைகளை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்படாமல் உள்ளது. இத்திட்டத்தில் 2020–21 ஆம் ஆண்டு பெறப்பட்ட தொகை மற்றும் செலவு விவரம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 27: 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு விவரம்

| | | | |
|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு 01.04.2020 | | | 2,16,40,603.60 |
| கூட்டுக | | | |
| PAO (வடக்கு) –இல் இருந்து பெறப்பட்டது | | 2,06,00,000 | |
| வங்கி வட்டி வரவு | | 9,63,091 | |
| தவறான வங்கிக் கணக்கில் செலுத்தியத் | 1*25000 | 25,000 | |
| தொகை திரும்ப பெறப்பட்டது | 3*50000 | 1,50,000 | |
| | **மொத்தம்** | **2,17,38,091** | |
| | | | **4,33,78,694.60** |
| கழிக்க | | | |
| வங்கி பிடித்தம் ( 70 * App Rs.25000) | | 17,50,000 | |
| வங்கி பிடித்தம் (105 * App Rs.50000) | | 52,50,000 | |
| வங்கி கட்டணம் | | | |
| 2016–17 ஆம் ஆண்டு வட்டி வரவு திரும்ப செலுத்தியது | | 70,00,000 | |
| | **மொத்தம்** | **1,40,00,000** | |
| **31.03.2019–இல் வங்கி புத்தகத்தன் படி இறுதி இருப்பு** | | | 3,63,78,694.60 |

<u>இக்கணக்கில் பெறப்பட்ட வட்டி விவரம் பின்வருமாறு அளிக்கப்படுகிறது.</u>

| வருடம் | பெறப்பட்ட வட்டி ரூபாயில் | அரசு கணக்கில் செலுத்தப்பட்ட விவரம் |
|---|---|---|
| 2016–17 | 8,05,943/– | செலுத்தப்பட்டது. |
| 2017–18 | 21,81,473/– | செலுத்தப்பட்டது. |
| 2018–19 | 9,62,656/– | செலுத்தப்பட்டது. |
| 2019–20 | 20,56,868/– | செலுத்தப்படவில்லை |
| 2020–21 | 9,63,091/– | செலுத்தப்படவில்லை |

இவ்வங்கிக்கணக்கு துவங்கப்பட்ட ஆண்டான 2011–12, 2012–13, 2013–14, 2014–15, 2015–16 வரை வங்கியில் வரவாக்கப்பட்ட வட்டி கணக்கிடப்படாமல் வங்கி இறுதி இருப்புடன் உள்ளது.

| வ. எண் | 2020 – 21ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வட்டி விவரம் | |
|---|---|---|
| | நாள் | தொகை ரூ. |
| 1) | 03.08.2020 | 1,67,478/– |
| 2) | 02.11.2020 | 1,22,530/– |
| 3) | 01.02.2021 | 1,20,928/– |
| | மொத்தம் | 9,63,091/– |

ஆகவே 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டில் சேமிப்பு கணக்கில் உள்ள வட்டி தொகை ரூ.30,19,959/–(20,56,868 + 9,63,091=30,19,959)–யை அரசின் உரிய தலைப்புகளின் கீழ் செலுத்தி அதன் விவரம் தணிக்கைக்கு அளிக்க வேண்டும்.

**<u>பதிலுரை:</u>**

இத்தணிக்கைத் தடை விவரம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டது. பத்தியில் குறிப்பிட்டுள்ள வட்டித் தொகை ரூ.30,19,959/–யினை அரசுக் கணக்கில் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இடைக்கால பதில் என்பதால் பத்தி நிலுவை

**4.1.4.7. செலவிடப்படாத அரசு மான்யம் அரசுக்கணக்கில் திரும்ப செலுத்தப்படாதது.**

டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மானியத்தில் பயனாளிகளுக்கு தொகை வழங்கிய பின் மீதமுள்ள தொகை அரசுக் கணக்கில் திரும்ப செலுத்தப்படாதது – ரூ.1083.32 இலட்சம் – மருத்துவ சேவைகள் துறை.
(பெருநகர சென்னை மாநகராட்சி பத்தி எண்.10/2020–21)

**கோப்பு எண்.M.S.D.F8/0541/2020**

அரசாணை (நிலை) எண்.40, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(P2)துறை, நாள்.20.02.2018–இன் படி முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் ஏழை கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி தொகை ரூ.12,000/–இல் இருந்து ரூ.18,000/– ஆக உயர்த்தப்பட்டு ஆணை வழங்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்.118, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(P2)துறை, நாள்.02.04.2018–இன் படி அரசாணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு பயனாளிகளுக்கு ரூ.18,000/–த்தை 5 தவணைகளாக (ரூ.2000/– வீதம் 3 தவணைகளாகவும், ரூ.4000/– வீதம் 2 தவணைகளாகவும் ஆக மொத்தம் ரூ.14,000/– ஆம் ரொக்கமாக வழங்கப்பட்டும் மற்றும் தமிழக அரசால் வழங்கப்படும் ரூ.4,000/– மதிப்புள்ள ஊட்டச்சத்து பையும் (Nutrition Kit) (ரூ.2000x2) வழங்கப்பட்டு வருகிறது.

2020–21 ஆம் நிதி ஆண்டிற்கு நிதி அறிக்கை மூலம் ஒதுக்கிய தொகை ரூ.40,92,28,000/– யை பணமாற்றம் (ECS) மூலம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சென்னை மாநகராட்சி கிளை, சேமிப்பு வங்கி கணக்கு எண்.171101000003535– இல் வரவு வைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மருத்துவ மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள கணக்கு அலுவலர் பெயரில் காசோலையாக வழங்கப்பட்டு வருகிறது.

அரசாணையின் படி வழங்கவேண்டிய தொகை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பிரிவு | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | பொது பிரிவினர் | 29,43,86,000 |
| 2) | ஆதி திராவிடர்கள் | 11,23,42,000 |
| 3) | பழங்குடியினர்கள் | 25,00,000 |
| | மொத்தம் | 40,92,28,000 |

மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்டத் தொகை ரூ.40,92,28,000/– ஆணையரின் செயல்முறை ஆணையின்படி 15 மருத்துவ மண்டலங்களிலும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. 15 மருத்துவ மண்டலங்களுக்கும் பயனாளிகளுக்கு கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பிரிவு | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | பொது பிரிவினர் | 22,06,28,000 |
| 2) | ஆதி திராவிடர்கள் | 7,91,24,000 |
| 3) | பழங்குடியினர்கள் | 11,86,000 |
| | மொத்தம் | 30,09,38,000 |

தனியார் மருத்துவமனைகளில் பிரசவித்த தாய்மார்களுக்கு அரசு வழிகாட்டுதலின் படி மகப்பேறு நிதியுதவி வழங்கப்படுவதில்லை ஆதலால் தவறுதலாக தனியார் மருத்துவமனைகளில் பிரசவித்த தாய்மார்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.42,000/– கண்டறியப்பட்டு நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:–

| வ. எ ண் | ஒதுக்கீடு தொகை விவரம் | ஒதுக்கீடு தொகை | பயனாளிகளுக்கு வழங்கப்பட்டத் தொகை | மீதம் உள்ள தொகை |
|---|---|---|---|---|
| | | தொகை ரூபாயில் | | |
| 1) | பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத் துறையினால் ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டத் தொகை | 40,92,28,000 | 30,09,38,000 | 10,82,90,000 |
| 2) | தனியார் மருத்துவமனைகளில் பிரசவித்த தாய்மார்களுக்கு தவறுதலாக ஒதுக்கப்பட்டு நிறுத்தம் செய்யப்பட்டத் தொகை | | | 42,000 |
| | | | மீதமுள்ளத் தொகை | 10,83,32,000 |

இவ்வாறு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது போக மீதமுள்ளத் தொகை ரூ.10,83,32,000/– யை நாளது தேதி வரை அரசுக்கு திருப்பி செலுத்தப்படவில்லை. அத்தொகை ரூ.10,83,32,000/– அரசுக்கு திருப்பி செலுத்தப்பட்டு அவ்விவரம் தணிக்கைக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

**பதிலுரை:**

இத்தணிக்கைத் தடை விவரம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டது. தணிக்கையில் சுட்டிக்காட்டியவாறு நிர்வாகத்தால் செலுத்துச் சீட்டு எண்.394, 409, 410/10.06.2022–இன் படி ரூ.10,83,32,000/– அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டது.

## 4.2. இதர மாநகராட்சிகள்
## (பெருநகர சென்னை மாநகராட்சி தவிர்த்து)

### 4.2.1. இதர மாநகராட்சிகள் ஓர் அறிமுகம்:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 12-வது அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள 18 பணிகளில் மாநகராட்சிகளுக்கு 17 பணிகள் மாநில அரசால் பகிர்வு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் (சென்னை தவிர்த்து) கீழ்காணும் 14 மாநகராட்சிகள் செயல்படுகின்றன.

பதினான்கு மாநகராட்சிகள் அவைகளுக்கென உருவாக்கப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் இயங்குகின்றன. மேற்படி மாநகராட்சிகளில் மொத்தம் 25,73,248 எண்ணிக்கையிலான சொத்துவரி விதிப்பு இனங்கள் உள்ளன. மேற்படி சொத்து வரி விதிப்புகளில் மொத்தம் 14,19,169 எண்ணிக்கையிலான இனங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. சொத்து வரியின் மொத்த கேட்புத் தொகை ரூ.60829.11 இலட்சங்களாகும். 14 மாநகராட்சிகளின் 31.03.2021 அன்றைய நிலையில் மொத்த கடன் நிலுவைத்தொகை ரூ.195044.01 இலட்சங்களாகும். 2020-21 ஆம் ஆண்டின் இறுதியில் வசூலிக்கப்பட வேண்டிய வரி மற்றும் பிற வருவாய் இனங்கள் நிலுவை மொத்தம் ரூ.126690.92 இலட்சங்களாகும். நடப்பாண்டின் மொத்த தணிக்கை கட்டணம் கேட்பு ரூ.457.88 இலட்சங்களாகும். மாநகராட்சிகள் தங்களது ஆண்டுக் கணக்குகளை நிதியாண்டு முடிந்து மூன்று மாதங்களுக்குள் இறுதி செய்ய வேண்டும். தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கைச் சட்டம் 2014 பிரிவு 4,6 மற்றும் 11 விதிகள் 2016 விதி (10)-ன் படி மேற்படி கணக்குகள் மீதான தணிக்கை மேற்கொண்டு தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கை அறிக்கை வெளியிடப்படுகிறது.

மேற்படி 14 - மாநகராட்சிகளில் வருவாய் (ம) மூலதனம், குடிநீர் மற்றும் ஆரம்ப கல்வி என மூன்று வகையான கணக்குகள் உள்ளன. மேற்படி கணக்குகள் "மத்திய வலைதள அடிப்படையிலான மென்பொருள்" (Centralised Web Based Software) மூலமாக 11.09.2015 முதல் படிப்படியாக அனைத்து மாநகராட்சிகளிலும் பராமரிக்கப்படுகின்றன.

### 4.2.2. தணிக்கைக்கான ஆதாரம்:

உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014, பிரிவு 2(g) இன் படி இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை அவர்கள் சட்டப்பூர்வ தணிக்கையாளர் ஆவார்.

### 4.2.3. தணிக்கையில் கண்டறியப்பட்ட முக்கிய குறைபாடுகள்:

தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 மற்றும் விதிகள் 2016 பிரிவு 4-இன்படி தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தணிக்கையில் கண்டறியப்பட்ட குறைபாடுகளில் பின்வருபவை மட்டும் உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014, பிரிவு 20 இன் படி அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறது.

வருவாய் இழப்பு

**4.2.3.1. குடிநீர் கட்டணம் குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டது மற்றும் குறைவாக வசூலிக்கப்பட்டது தொடர் இழப்பு.**

மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் கட்டணம் மன்றத் தீர்மானத்தில் குறிப்பிட்ட குறைந்தபட்ச மாதாந்திர கட்டணத்திற்கும் குறைவாக வசூலிக்கப்பட்டு வருவது இழப்பு ரூ.800.32 இலட்சம்.
(கோயம்புத்தூர் மாநகராட்சி பத்தி எண்.13/2020–21)

அரசாணை எண்.49, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்.22.02.2011, மற்றும் அரசாணை எண்.72, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்.12.05.2011–இன் படி கோயம்புத்தூர் மாநகராட்சியை சுற்றியுள்ள 11 உள்ளாட்சி அமைப்புகளை கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைத்து அரசாணை வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.158, நாள்.29.08.2013 மற்றும் தீர்மான எண்.302, நாள்.30.12.2013–இன் படி 01.10.2013 முதல் புதிய குடிநீர் கட்டண விகிதங்கள் மற்றும் குடிநீர் விநியோக துணைவிதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதில் பழைய மாநகராட்சி வார்டுகள் மற்றும் மேற்குறிப்பிட்ட அரசாணைப் படி இணைக்கப்பட்ட புதிய வார்டுகளுக்கு என தனித்தனி கட்டண விகிதம் ஏதும் குறிப்பிடப்படவில்லை. மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளுக்கும் பொதுவாகவே தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

எனவே 22.02.2011 முதல் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 11 உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இந்நடைமுறை பின்பற்றப்பட வேண்டியது கட்டாயமாகிறது. இக்குடிநீர் கட்டண துணை விதிகள் வரிசை எண்.2 மற்றும் 3(ஆ), 5–இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வ.எண்.2 –. வீட்டு உபயோகத்திற்கோ அல்லது வீட்டு உபயோகம் அல்லாத உபயோகத்திற்கோ வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு அளவுமானிகள் பொருத்தப்பட்டு அளவுமானி முறையில் மட்டுமே குடிநீர் கட்டணம் வசூல் செய்யப்படும். ஏற்கெனவே அளவுமானி பொறுத்தப்படாமல் (Tap Rate) உள்ள குடிநீர் குழாய் இணைப்புகளை (Tap Rate) அறிவிப்பு பெறப்பட்ட 60 நாட்களுக்குள்ளும் உபவிதிகள் அமலுக்கு வரும் நாளிலிருந்து 60 நாட்களுக்குள் அளவுமானி குடிநீர் இணைப்பாக மாற்றப்பட வேண்டும்.அவ்வாறு மாற்றப்படாமல் இருப்பின் மறு அறிவிப்பின்றி குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும்.

வ.எண்.3(ஆ)5 – மாநகராட்சிக்கு சொந்தமானதும், ஆளுகைக்கும், பராமரிப்பிற்கும் உட்பட்டதுமான கட்டிடங்களில் வாடகைதாரர்கள் குடிநீர் இணைப்பு கேட்டு விண்ணப்பிக்கும் பட்சத்தில், குடிநீர் குழாய் இணைப்பு மீட்டர் முறையில் வழங்கப்படும். குடிநீர் பயன்பாட்டின் அடிப்படையில் வீட்டு உபயோக இணைப்பாகவோ அல்லது வீட்டு உபயோகம் அல்லாத இணைப்பாகவோ கணக்கிட்டு கட்டணம் வசூலிக்கப்படும்.

எனவே இவ்விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்ட 01.10.2013–இல் இருந்து 60 நாட்களுக்குள் அதாவது 30.11.2013–க்குள் ஏற்கனவே அளவுமானி பொருத்தப்படாமல் இருந்த அனைத்து பழைய குடிநீர் இணைப்புகளும் (புதிதாக இணைக்கப்பட்ட வார்டுகள் உட்பட) அளவுமானி பொருத்தப்பட வேண்டும். அளவுமானி பொறுத்தப்படாமல் இருப்பினும் குறைந்தபட்ச மாதாந்திர கட்டணமாவது வசூலிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு வசூலிக்கப்படவில்லை. மேலும், அளவுமானி பொறுத்தப்பட்டிருப்பின் பயன்பாட்டிற்கு ஏற்ப கூடுதல் கட்டணம் வசூல் செய்யப்பட்டிருக்கலாம்.

மாமன்றத் தீர்மானத்தின் படி ஒரு குடிநீர் இணைப்பிற்கு வசூலிக்க வேண்டிய குறைந்தபட்ச மாதாந்திரக் கட்டண விவரம் பின்வருமாறு:

| வ. எண் | குடிநீர் இணைப்பு வகை | குறைந்தபட்ச மாதாந்திர கட்டணம் ரூ. |
|---|---|---|
| 1) | வீட்டு உபயோக முறை | 100/– |
| 2) | வீட்டு உபயோக முறையில் மொத்த விநியோகம் | 900/– |
| 3) | வீட்டு உபயோகம் அல்லாத முறை | 525/– |
| 4) | வீட்டு உபயோகம் அல்லாத முறையில் மொத்த விநியோகம் | 1,350/– |

மேற்கண்டவாறு மன்ற தீர்மானத்தில் குறிப்பிட்ட குறைந்தபட்ச மாதாந்திர கட்டணம் வசூலிக்கப்படாமல் அதற்கும் குறைவான கட்டணம் (பழைய கட்டணம்) வசூலித்து வருவது மாமன்ற தீர்மானத்திற்கு முரணாகும். கீழ்குறிப்பிட்ட மண்டலங்களில் இணைக்கப்பட்ட புதிய வார்டுகளில் 28.02.2022 வரை குடிநீர் இணைப்புகளுக்கு அளவுமானி பொறுத்தப்படாமல் குறைந்தபட்ச மாதாந்திர கட்டணமாவது வசூலிக்கப்படாமல் பழைய கட்டண விகிதத்திலேயே வசூலிக்கப்பட்டு வருவதால் 2020–21 ஆம் ஆண்டிற்கு மட்டும் ரூ.800.32 இலட்சம் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர் இழப்பு என்பதால் மாமன்ற தீர்மானத்தின் படி அனைத்து வார்டுகளிலும் புதிய கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மண்டல / வார்டு வாரியான இழப்பு விவரம் இணைப்புகளில் (இணைப்பு எண்.03) அளிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | மண்டலம் | இழப்புத் தொகை ரூ. |
|---|---|---|
| 1) | தெற்கு மண்டலம் | 1,37,48,940/– |
| 2) | வடக்கு மண்டலம் | 2,11,20,780/– |
| 3) | கிழக்கு மண்டலம் | 2,10,59,640/– |
| 4) | மேற்கு மண்டலம் | 2,41,02,300/– |
| | மொத்தம் | 8,00,31,660/– |

**<u>பதிலுரை:</u>**

இத்தணிக்கைத் தடை விவரம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. அளிக்கப்பட்ட பதிலில் பழைய 60 வார்டுகளுக்கு மட்டுமே குடிநீர் அளவுமானி பொருத்தப்பட்டு உரிய கட்டணம் வசூலிக்கப்பட்டு வருவதாகவும், இணைக்கப்பட்ட புதிய 40 வார்டுகளில் குடிநீர் அளவுமானி இல்லாத காரணத்தால் இத்துணை விதிகள் பொருந்தாது எனவும், தற்பொழுது

இணைக்கப்பட்ட 40 வார்டுகளில் KFW மற்றும் AMRUT திட்டங்களின் கீழ் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் மற்றும் குடிநீர் அளவுமானி பொருத்தும் பணிகள் நடைபெற்று வருவதாகவும், இப்பணிகள் முடிவுற்றதும் குடிநீர் அளவுமானி மூலம் குடிநீர் பயனீட்டு கணக்கீடு மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குடிநீர் விநியோக துணை விதிகள் 01.10.2013–இல் அமுல்படுத்தப்பட்ட நிலையில் 22.02.2011 முதல் இணைக்கப்பட்ட 40 வார்டுகள் மற்றும் பழைய 60 வார்டுகள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளுக்கும் பொருந்தும் என்பதாலும் இழப்பு ஈடுசெய்யப்படாததாலும் பத்தி நிலுவை.

**4.2.3.2. ஆண்டு குத்தகை மற்றும் வாடகைத் தொகையில் அரசாணைக்கு முரணாக கூடுதலாக தள்ளுபடி வழங்கியது.**

பொது முடக்கத்தின் காரணமாக ஆண்டு குத்தகை மற்றும் வாடகைத் தொகையில் அரசால் தள்ளுபடி அறிவிக்கப்பட்டது – அரசாணைக்கு முரணாக கூடுதலான மாதங்களுக்கு தள்ளுபடி வழங்கப்பட்டதால் இழப்பு ரூ.28.35 இலட்சம்.
(கோயம்புத்தூர் மாநகராட்சி பத்தி எண்.35 (அ) / 2020–21)

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டலத்தில் 2020–21 ஆம் ஆண்டுக்கான கேட்பில் கோவிட்–19 பெருந்தொற்று காரணமாக அறிவிக்கப்பட்ட பொது முடக்கத்தின் காரணமாக நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் குத்தகை மற்றும் வாடகை தொகையில் அரசாணை எண்.298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA–IV) துறை, நாள்.02.09.2020–இன் படி 01.04.2020 முதல் 31.05.2020 வரையிலான இரண்டு மாதங்களுக்கு மட்டும் கடைகள் மற்றும் ஸ்டால்களுக்கானக் குத்தகை தொகை இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்தங்கள் வாரச்சந்தை மற்றும் தினசரி சந்தைகளுக்கான ஆண்டு குத்தகைத் தொகை மற்றும் வாடகை தொகையில் தள்ளுபடி செய்திட உத்திரவிடப்பட்டுள்ளது, ஆனால், அரசாணைக்கு மாறாக கூடுதலாக வரியில்லா இனங்களில் வரவினத்தில் தள்ளுபடி அளித்ததால் இம்மாநகராட்சிக்கு தணிக்கையாண்டில் ரூ.28,35,046/– (இணைப்பு எண்.04) நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது, இவ்விழப்புத் தொகையினை பொறுப்பான நபர்கள் அல்லது அலுவலரிடமிருந்து மீளப் பெறப்பட்டு மாநகராட்சி நிதியில் வரவெடுக்கப்பட்டு அதன் விபரம் தணிக்கைக்குக் காண்பிக்கப்படவேண்டும்.

**<u>பதிலுரை:</u>**

இத்தணிக்கைத் தடை விவரம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் உத்தரவின் படி கோவிட்–19 நோய்த்தொற்று காலத்தில் பூ மார்கெட், வாரச்சந்தை, பேருந்து நிறுத்தம் உள்ளிட்ட பத்தியில் குறிப்பிட்ட குத்தகை நிறுவனங்கள் செயல்படாத காலத்திற்கு தள்ளுபடி அளிக்கப்பட்டதாக பதில் பெறப்பட்டது. அரசாணைக்கு முரணாக கூடுதலான காலத்திற்கு தள்ளுபடி அளிக்கப்பட்டதால் பத்தி நிலுவை

### 4.2.3.3. குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத்தொகை குறைவாக வசூலித்தது.

**வணிக வகை சொத்துவரி இனங்களுக்கு குடியிருப்பு வகையில் குடிநீர் இணைப்பு வழங்கியது – வைப்புத் தொகை மற்றம் குடிநீர் கட்டணம் குறைவாக நிர்ணயம் செய்து வசூல் செய்தது – இழப்பு ரூ.55.99 இலட்சம்.**
**(திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பத்தி எண்.42 / 2020–21)**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.10, நாள்.30.01.2014–இன் படி குடிநீர் விநியோக உபவிதிகள் பிரிவு–12இல் குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத குடிநீர் இணைப்புகளுக்கு கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 28: குடிநீர் கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| **(i) குடிநீர் வீட்டு பயன்பாடு (அளவுமானி விகிதம்):** | | |
| 10000 லிட்டர் வரை குறைந்தபட்ச மாத கட்டணம் | : | ரூ.160 |
| 10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | : | ரூ.16 |
| **(ii)குடிநீர் வீட்டு பயன்பாடு அல்லாத இனங்கள் (அளவுமானி விகிதம்):** | | |
| 10000 லிட்டர் வரை குறைந்தபட்ச மாத கட்டணம் | : | ரூ.600 |
| 10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | : | ரூ.60 |
| **(iii)தொழிற்சாலை உபயோகம் (அளவுமானி விகிதம்):** | | |
| 10000 லிட்டர் வரை குறைந்தபட்ச மாத கட்டணம் | : | ரூ.850 |
| 10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | : | ரூ.85 |

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலை கோட்டத்தில் 2020–21 ஆம் ஆண்டில் குடியிருப்பு அல்லாத (Non Domestic) இனங்களின் கீழ் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்புகளின் பயன்பாட்டு அளவீடுகளை சரிபார்க்கும் நோக்கில் Non Domestic பதிவேடுகளை ஒப்பிட்டு சரிபார்க்கும்போது, சம்பந்தப்பட்ட குடிநீர் இணைப்புகளின் வழி உபயோகப்படுத்தப்பட்ட குடிநீரின் அளவீடுகளை கணினி மென்பொருளில் கேட்பாக எழுப்பப்படாமல் மிக குறைந்த அளவிற்கு கேட்பு எழுப்பப்பட்ட விவரம் தணிக்கையில் கண்டறியப்பட்டது. எனவே, இதன் அவசர அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு குடிநீர் விநியோக இணைப்பு தன்மைகளின் சரித்தன்மை தணிக்கையில் சரிபார்க்கப்பட்டது. தணிக்கைக்கு வழங்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் UTIS மென்பொருளில் இருந்து தரவிறக்கம் செய்யப்பட்ட தரவுகளின் அடிப்படையில் குடியிருப்பு அல்லாத சொத்து வரி இனங்கள் பிரித்தறியப்பட்டு (Based on the Property tax Classification) அவ்விவரங்களை அதற்குண்டான குடிநீர் இணைப்புகளின் தன்மைகளோடு ஒப்பிட்டு குறுக்காய்வு செய்யப்பட்டதில் பெரும்பான்மையான குடியிருப்பு அல்லாத சொத்து வரி இனங்களுக்குண்டான (வணிகம் (Commercial), தொழிற்கூடம் (Industrial) (ம) கல்வி கூடங்கள்) குடிநீர் இணைப்புகள் குடியிருப்புகளுக்கு (Domestic) வழங்கப்படும் குடிநீர் இணைப்பின் தன்மையிலேயே இருப்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது. இதுநாள் வரை மாநகராட்சி நிர்வாகம் இதை கவனிக்க தவறியதால் மாநகராட்சிக்கு வருடந்தோறும் பெரும் நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது தணிக்கையில் கண்டறியப்பட்டது.

(அ) 01.04.2014 முதல் மேற்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் நிலையில் இம்மாநகராட்சியில் 428 எண்ணிக்கையிலான சொத்துவரியின் தன்மை குடியிருப்பு அல்லாத இனங்களாக (வணிகம், தொழிற்கூடம், கல்வி நிலையங்கள்) உள்ள நிலையில் குடிநீர் இணைப்பின் தன்மை மட்டும் குடியிருப்பு என்ற வகையில் அமைந்துள்ளவாறு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு குடிநீர் இணைப்பின் தன்மை மாற்றி வழங்கப்பட்டுள்ளதால் மாநகராட்சிக்கு வணிக வகைக்குண்டான ஒருமுறை கட்டணமான குடிநீர் கட்டண வைப்புத் தொகை ரூ.17,12,000/–ம் (இணைப்பு எண்.1இல் கலம் எண்.11) மற்றும் வருடந்தோறும் குடிநீர் கட்டணத் தொகை ரூ.23,25,600/–ம் (இணைப்பு எண்.12இல் கலம் எண்.12) ஆக மொத்தம் ரூ.40,37,600/– இழப்பாகிறது.

இச்சீரிய தொடர்ச்சியான நிதி இழப்பு தன்மையை ஒரு சிறப்பு குழு அமைக்கப்பட்டு அதன் மூலம் நிர்வாக ரீதியாக தல ஆய்வு செய்யப்பட்டு தீர்வு செய்யப்படவேண்டும். மேலும், குடிநீர் இணைப்பு வழங்கப்படும்போது அதன் தன்மையை ஆராயாமல் குடியிருப்பு வகையில் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டதற்கு அல்லது ஏற்கனவே சொத்து வரி குடியிருப்பு வகையில் இருந்து பின்னர் குடியிருப்பு அல்லாத வகையாக சொத்து வரி மாற்றம் செய்யப்பட்டிருப்பின் அதன் தொடர்ச்சியாக குடிநீர் இணைப்பையும் மாற்றி அமைக்கப்படாததற்கு சம்பந்தப்பட்ட இக்கோட்டத்தின் பொறியியல் பிரிவு அலுவலர்களே முழு பொறுப்பாகும். இச்சீரிய பெரும் நிதியிழப்பு தன்மையை இதுவரை கண்டறிந்து ஆய்வு செய்யாத உதவி ஆணையரும் கூடுதல் பொறுப்பாகிறார்.

எனவே, இவ்விழப்பு தொகை ரூ.40,37,600/–யை சம்பந்தப்பட்ட பயனாளர்களிடமிருந்து வசூல் செய்யப்படவேண்டும் அல்லது பொறுப்பான அலுவலர்களிடமிருந்து தொகை ஈடுசெய்யப்படவேண்டும்.

(ஆ) இணைப்பு எண்.2இல் குறிப்பிடப்பட்டுள்ள 241 இனங்களின் தரவுகளை UTIS மென்பொருளில் இருந்து தரவிறக்கம் செய்யப்பட்டு ஆய்வு மேற்கொண்டதில், மேற்கண்ட 241 இனங்களுக்கும் குடியிருப்பு அல்லாத வகைப்பாட்டில் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ள விவரம் தணிக்கையில் உறுதி செய்யப்படுகிறது. ஆனால், அவ்வினங்களுக்கு குடிநீர் கேட்பு எழுப்பப்படாதது தணிக்கையில் கண்டறியப்பட்டது. இவ்வாறு கேட்பு எழுப்பப்படாமல் இருப்பதால் நடப்பு ஆண்டிற்கு மட்டும் குறைந்த பட்சமாக ஏற்படும் இழப்பை தணிக்கையில் கணக்கீடு செய்யும்போது தொகை ரூ.15,61,580/– இழப்பாகிறது. எனவே, மேற்கண்ட பேரளவு நிதிக் கசிவுகளை (Revenue Leakage) கண்டறிந்து களையும் நிலையில் மாநகராட்சியின் நிதி நிலைமை மேம்படும்.

**சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1) | உப பத்தி (அ) | ரூ.40,37,600/– |
| 2) | உப பத்தி (ஆ) | ரூ.15,61,580/– |
| | மொத்தம் | ரூ.55,99,180/– |

**பதிலுரை:**

இத்தணிக்கைத் தடை விவரம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. பதில் ஏதும் பெறப்படவில்லை.

### 4.2.3.4. சொத்துவரி குறைவாக நிர்ணயம் செய்தது தொடர் இழப்பு.

புதைவடிகால் இணைப்பு வழங்கப்பட்டதில் கள பொறியாளர்களால் நேரடி ஆய்வு செய்து சான்று வழங்கப்பட்ட கட்டிட பரப்பளவை விட குறைவான பரப்பளவிற்கு சொத்துவரி விதித்தது இழப்பு ரூ.4.06 இலட்சம்.
(வேலூர் மாநகராட்சி பத்தி எண்.10 / 2020–21)

வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட நான்கு மண்டலங்களில் 2020–21 ஆம் ஆண்டுக்கான புதைவடிகால் இணைப்பு அளித்தமைக்கான விண்ணப்பம், கோப்பு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட சொத்துவரிக்கான கேட்பு வசூல் ரசீது ஆகியவற்றை ஒப்பிட்டு சரிப்பார்த்ததில் கீழ்காணும் குறைபாடுகள் காரணமாக சொத்துவரியில் வருவாய் இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது தணிக்கையில் கண்டறியப்பட்டது. மாநகராட்சி செயற்பொறியாளரால் நேரடியாக ஆய்வு செய்து அளிக்கப்பட்ட புதைவடிகால் அனுமதி ஆணையில் சான்றளிக்கப்பட்ட குடியிருப்பு கட்டடங்களுக்கான வரைபட மற்றும் தெரிவிக்கப்பட்ட கட்டட அளவுகளை, அக்கட்டிடங்களுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்ட கணக்கீட்டுத் தாளுடன் ஒப்பிட்டு சரிப்பார்த்ததில் 23 கட்டடங்களின் அளவுகள் இணைப்பு எண்.05–இல் குறிப்பிட்டுள்ளவாறு குறைக்கப்பட்டு, சொத்துவரி மிக குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது தணிக்கையில் கண்டறியப்பட்டது.

இதனால் மாநகராட்சிக்கு 2020–21 இரு அரையாண்டுகள் மற்றும் 2021–22 இரு அரையாண்டுகள் என நான்கு அரையாண்டுகளுக்கு சொத்துவரி வருவாயில் இணைப்பில் காணுமாறு ரூ.4,05,824/– இழப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்விழப்பினை உரிய கட்டட உரிமையாளரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும். இவை தவறும்பட்சத்தில் சொத்துவரியினை குறைத்து மற்றும் தவறாக கணக்கீட்ட அலுவலரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு அனுமதியற்ற கூடுதல் கட்டடங்களை சுட்டியுள்ள 23 கட்டடங்களின் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொண்டு வெளியிடப்படும் தீர்ப்பின் அடிப்படையில் இக்கூடுதல் கட்டடங்கள் முறைப்படுத்தப்பட வேண்டும்.

**<u>பதிலுரை:</u>**

இத்தணிக்கைத் தடை விவரம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. இழப்புத்தொகை ஈடுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. பத்தி நிலுவை.

### 4.2.3.5. வணிகக்கட்டிடங்கள் சொத்துவரி குறைவாக நிர்ணயம் செய்தது தொடர் இழப்பு.

வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு பரப்பளவிற்கு ஏற்றவாறு சொத்துவரி நிர்ணயம் செய்யாமல் குறைவாக நிர்ணயம் செய்தது – தொடர் வருவாய் இழப்பு – ரூ.54.25 இலட்சம்.
(திண்டுக்கல் மாநகராட்சி பத்தி எண். 18 / 2020–21)

திண்டுக்கல் மாநகராட்சியில் 2020–21 ஆம் ஆண்டு நிகழ்நிலையில் சொத்துவரி சரிபார்க்கப்பட்ட போது வணிக பயன்பாட்டில் கட்டப்பட்ட கட்டிடத்தின் பரப்பு அளவிற்கு ஏற்றவாறு சொத்துவரி கணக்கீடு செய்யப்படாமல் குறைவாக கணக்கிடப்படுவது கண்டறியப்பட்டது. சொற்பமாக சொத்துவரி விதிப்பு செய்யப்பட்ட இனங்கள் மட்டும் (ரூ.350/–க்கும் கீழ்) தெரிவு செய்யப்பட்டு,

கட்டப்பட்ட கட்டிடத்தின் அளவிற்கும் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்ட தொகைக்கும் ஒத்திசைவு செய்யப்பட்டதில், 733 இனங்களுக்கு ஒரு அரையாண்டிற்கு கட்டப்பட்ட, கட்டிடத்தின் அளவிற்கு ஏற்றவாறு வரி விதிப்பு செய்யப்படாமல் குறைவாக வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது தணிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது. இதனால் இம்மாநகராட்சிக்கு ஒரு அரையாண்டிற்கு ரூ.27,12,371/– இழப்பு ஏற்படுகிறது. 2020–21 ஆம் தணிக்கையாண்டிற்கு ரூ.54,24,742/– இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, இது குறித்து மேற்கண்ட இனங்களை நேரடியாக ஆய்வு செய்து நிகழ்நிலையில் உள்ள கட்டிடப் பரப்பு அளவிற்கு ஏற்றவாறு சொத்துவரி திருத்தியமைக்கப்பட்டு இழப்பினை முறைப்படுத்தப்பட வேண்டும், அல்லது பொறுப்பான நபர்களிடமிருந்து தொகை ஈடு செய்யப்பட்டு தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

**பதிலுரை:**

இத்தணிக்கைத் தடை விவரம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. பதில் பெறப்படவில்லை.

மிகை செலவினம் மேற்கொண்டது

**4.2.3.6. ஒப்பந்ததாரருக்கு அட்டவணை விலை விகிதத்தைவிட கூடுதல் தொகை வழங்கியது.**

பேவர் பிளாக் சாலை பராமரிப்பு பணியில் அட்டவணை விலை விகிதத்தைவிட கூடுதல் தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கியது இழப்பு ரூ.2.37 இலட்சம்.
(மதுரை மாநகராட்சி பத்தி எண்.45 / 2020–21)

| | | |
|---|---|---|
| வங்கி கொடுப்புச்சீட்டு எண் / நாள் | : | 0004171/19.03.2021 |
| அளவைச்சுவடி எண் | : | 105B/2017–18 |
| மதிப்பீடு | : | ரூ.13,50,000/– |
| செய்யப்பட்ட வேலையின் மதிப்பு | : | ரூ.11,93,000/– |
| ஒப்பந்ததாரர் பெயர் | : | ஆர்.பூபாலன் |
| கோப்பு எண் | : | MP2/Est 662/19–20 |

மேற்கண்டவாறு மேற்கொள்ளப்பட்டுள்ள பணியில் பின்வரும் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

1) இவ்வேலைச் செலவின அளவுப் புத்தகம் எண்.105B/2017–18–இன் பக்கம் எண்.03 முதல் 05 முடிய உள்ள பேவர் பிளாக் சாலை சீரமைக்கும் பணிக்கான (252.75 கன மீட்டர்) மதுரை மாநகராட்சியின் 2019–20 ஆம் ஆண்டுக்கான நிலையான விலை விவர அட்டவணையின்படி (Standard Schedule of Rate – Madurai Corporation Road Data 2019–20 on 17.06.2018 (பக்கம் எண்.11–13) 1 கன மீட்டருக்கான தொகை ரூ.1818.26 ஆகும்.

| Sl. No. | Serial No In Madurai Corporation Road Data 2019-20 On 17.06.2018 | Description | Amount (Rs) |
|---|---|---|---|
| 1) | 08 | Providing and laying, Spreading and Compacting graded stone aggregate to Wet Mix Macadam (WMM) Specification including premixing the material with water at OMC in mechanical mix plant carriage to mixed material by tipper to site laying in uniform layers with paver in sub base / base course on well prepared surface and compacting with vibratory roller to achieve the desired density complete as per clause 406 of MORTH specifications.<br>Rate for 1 Cum | 1818.26 |

ஆனால், இவ்வேலைக்கான மதிப்பீட்டில், இப்பணிக்கானத் தொகை ஒரு கன மீட்டருக்கு ரூ.2723.00 என (கோப்பு பக்கம் எண்.11) தவறாக கணக்கிடப்பட்டு, கூடுதலாக மதிப்பீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விவரம் தணிக்கையில் கண்டறியப்பட்டது, ஆகையால் இப்பணி முடிவுற்றபின், இப்பணிக்கு வழங்கப்படவேண்டிய தொகை (252.75 x 1818.26) ரூ.4,59,565/-க்குப் பதிலாக, தொகை ரூ.6,88,238/- (252.75 x 2723) என கூடுதலாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது, (அளவுப் புத்தக பக்கம் எண்.11)

எனவே இவ்வேலைச் செலவினத்தின் மொத்த வேலை மதிப்பானது, ரூ.9,81,839/-க்கு பதிலாக ரூ.12,10,512/- என கூடுதலாக கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் அதனை சரக்கு மற்றும் சேவை வரியுடன் சேர்த்து மதிப்பீட்டுக்குள் (ரூ.13,50,000/-க்குள்) நிர்ணயம் செய்யும் பொருட்டு, வேலையின் மதிப்பு ரூ.11,93,000/- என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (அளவுப் புத்தக பக்கம் எண்.13)

ஆகையால் இச்செலவுச் சீட்டின்படி மட்டுப்படுத்தப்பட்ட தொகையில் ஒப்பந்ததாரருக்கு கூடுதலாக வழங்கப்பட்ட தொகை ரூ.2,11,161/- (11,93,000-9,81,839) மற்றும் கூடுதலாக வழங்கப்பட்ட அதற்குரிய GST தொகை ரூ.25,339/- என மொத்தம் ரூ.2,36,500/-யை சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து பிடித்தம் செய்து மாநகராட்சி நிதியில் செலுத்தி அதன் விவரம் தணிக்கைக்கு வழங்கப்பட வேண்டும்.

**பதிலுரை:**

இத்தணிக்கைத் தடை விவரம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. பதில் ஏதும் பெறப்படவில்லை.

**4.2.3.7. குறிப்பிட்ட காலத்திற்கு பின்னரும் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் குறைக்கப்படாதது.**

ஓய்வூதிய கொடு ஆணையில் குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் சாதாரண நிலையில் குடும்ப ஓய்வூதியம் வழங்காமல் உயர்த்தப்பட்ட நிலையில் குடும்ப ஓய்வூதியம் வழங்கியது இழப்பு ரூ.6.98 இலட்சம்.
(திருப்பூர் மாநகராட்சி பத்தி எண்.107 / 2020–21)

திருப்பூர் மாநகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற / காலஞ்சென்ற பணியாளர்களுக்கு ஓய்வூதிய கொடு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குப் பின்னர் சாதாரண நிலையில் குடும்ப ஓய்வூதியம் குறைக்கப்படாமல் உயர்த்தப்பட்ட நிலையில் குடும்ப ஓய்வூதியம் வழங்கியது தணிக்கையில் கண்டறியப்பட்டது. மிகையாக வழங்கப்பட்ட குடும்ப ஓய்வூதியத் தொகை இணைப்பு எண்.06–இல் குறிப்பிட்டுள்ளவாறு, ரூ.6,98,238/– பிடித்தம் செய்யப்பட்டு மாநகராட்சி ஓய்வூதியக் கணக்கில் வரவாக்கப்பட வேண்டும்.

அட்டவணை 29 : மிகையாக வழங்கப்பட்ட ஓய்வூதியம் விவரம்

| வ. எண் | ஓய்வூதியதாரர் | PPO எண் | ஓய்வூதியம் | | உயர்த்தப்பட்ட தொகை வழங்கப்பட்ட காலம் |
|---|---|---|---|---|---|
| | | | வழங்கியது | வழங்க வேண்டியது | |
| 1) | சீதா / சேகர் | 126 | 12910 | 7850 | 8.3.20–30.9.21 |
| 2) | விஜயகுமாரி / மோகன்ராஜ் | 141 | 24430 | 14660 | 8.2.20–31.3.20 |
| 3) | P. ஜெயலட்சுமி/ பழனிசாமி | 167 | 12940 | 7850 | 17.1.20–31.3.20 |
| 4) | R. அமுதா/ரவி | 169 | 11990 | 7850 | 27.2.20–31.3.20 |
| 5) | D. தங்கமணி / துரைசாமி | 186 | 9150 | 7850 | 30.12.20–28.2.21 |
| 6) | லட்சுமி / ஜெகன்நாதன் | 10003 | 3830<br>9850 | 3050<br>7850 | 21.1.17–30.9.17<br>01.10.17–30.9.21 |
| 7) | சகுந்தலா / வடிவேல் | 10004 | 3830<br>9850 | 3050<br>7850 | 20.4.17–30.9.17<br>1.10.17–30.9.21 |
| 8) | K. கனகராணி / ரமேஷ்பாபு | 205 | 9850 | 7850 | 5.10.20–30.9.21 |
| 9) | E. சின்னபொன்னு | 261 | 11090 | 7850 | 31.1.20–31.3.21 |
| 10) | நாச்சம்மாள் | 85 | 3785<br>9730 | 3050<br>7850 | 18.5.15–30.9.17<br>1.10.17–30.9.21 |
| 11) | கோவிந்தம்மாள் | 84 | 3830<br>9850 | 3050<br>7850 | 17.6.17–30.9.17<br>1.10.17–30.9.21 |

**பதிலுரை:**

இத்தணிக்கைத் தடை விவரம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. பத்தியில் குறிப்பிட்டுள்ள இழப்புத் தொகையில் வ.எண்.2, 3, 4, 5 மற்றும் 9–க்குறிய இழப்புத் தொகை ரூ.50,876/– ஈடுசெய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.6,47,362/– ஈடுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் பத்தி நிலுவை.

**4.2.4. சீர்மிகு நகர திட்டம் செயல்பாடு குறித்த தணிக்கை மீதான ஒரு குறிப்பு:**

சீர்மிகு நகர திட்டமானது மத்திய அரசின் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட மத்திய அரசு நிதியுதவி திட்டமாகும். இதன் நோக்கமானது நகரங்களில் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம் நகர மக்களுக்கு மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தினை வழங்குவது, தூய்மையான சுற்றுப்புறம் மற்றும் நிலையான நீடித்த சூழல் ஏற்படுத்துவது மற்றும் சிறந்த தீர்வுகள் வழங்குவது ஆகும். இத்திட்டமானது தேசிய அளவில் 100 நகரங்களில் 2015–16 முதல் 2019–20 வரையிலான ஐந்தாண்டு காலத்திற்கு செயல்படுத்த திட்டமிடப்பட்டது. தமிழ்நாட்டில் 12 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டு அவற்றில் கீழ்க்காணும் 11 நகரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் சீர்மிகு நகரத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள நகரங்கள் விவரம்

| வ. எண் | மாநகராட்சியின் பெயர் | திட்டம் துவக்க ஆண்டு |
|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி | 2017–18 |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி | 2015–16 |
| 3 | வேலூர் மாநகராட்சி | 2016–17 |
| 4 | மதுரை மாநகராட்சி | 2017–18 |
| 5 | தஞ்சாவூர் மாநகராட்சி | 2016–17 |
| 6 | சேலம் மாநகராட்சி | 2017–18 |
| 7 | திருப்பூர் மாநகராட்சி | 2017–18 |
| 8 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி | 2017–18 |
| 9 | திருநெல்வேலி மாநகராட்சி | 2017–18 |
| 10 | தூத்துக்குடி மாநகராட்சி | 2018–19 |
| 11 | ஈரோடு மாநகராட்சி | 2018–19 |

இத்திட்டத்திற்கான நிதியானது மத்திய அரசு மற்றும் மாநில அரசு / உள்ளாட்சி அமைப்புகளினால் 50:50 விகிதத்தில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் திட்டமிடுதல், மதிப்பிடுதல், நிதி விடுவித்தல், செயல்படுத்துதல், நிர்வகித்தல், கண்காணித்தல் மற்றும் பயன்களை மதிப்பிடுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள சிறப்பு நோக்க குழு (Special Purpose Vehicle) ஏற்படுத்தப்பட வேண்டும்.

அரசாணை (நிலை) எண்.35, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (நநி2) துறை, நாள்.11.04.2017–இல் தெரிவித்தவாறு இச்சிறப்பு நோக்க குழு (Special Purpose Vehicle) ஆனது ஒரு நிறுவனமாக 'நிறுவனங்கள் சட்டம் 2013'–இன் கீழ் பதிவு செய்யப்பட்டு, பொதுத்துறை வங்கி ஒன்றில் இத்திட்ட செயல்பாட்டிற்கென தனி வங்கி கணக்கு துவங்கப்பட வேண்டும். இதனைத் தொடர்ந்து, இத்திட்டத்திற்கான நிதிமேலாளர் ஆண்டுதோறும் கணக்குகளை தயாரித்து தணிக்கைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், இக்கணக்குகளை தணிக்கை செய்ய பட்டய கணக்கு தணிக்கையரை நியமிக்க வேண்டும். இருப்பினும் இந்திய தலைமை கணக்கு தணிக்கையர் (CAG) இத்திட்ட கணக்கினை ஆண்டுத் தணிக்கை செய்யலாம்.

நிதியாண்டு முடிவுற்ற ஆறு மாதங்களுக்குள் தணிக்கை மேற்கொண்டு தணிக்கை அறிக்கையானது நிதிமேலாண்மை குழுவின் (Board of the Fund Manager) முன் வைக்கப்பட்டு பின் அரசுக்கு மேலனுப்பப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வழிகாட்டுதல்களைத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண்.53, நிதி(உ.நி)துறை நாள்.26.02.2022–இன்படி மாநகராட்சிகளில் சீர்மிகு நகர திட்டம் செயல்படுத்தப்பட்டது குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, இயக்குநர் சிறப்புத் தணிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தணிக்கையின் முடிவானது பின்னர் தனியாக வெளியிடப்படும்.